பக்கங்கள்: 20

விலை:20 ரூபா

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 01 வள்ளுவர் ஆண்டு 2048 ஆனி 17, சனிக்கிழமை 01.07.2017 கதிர் 237

யாழ் பாடி



சைவம் - அசைவம்

பாரம்பரிய இன்சுவை ஒடியல் கூழ்

புதன் – சனி – ஞாயிறு மற்றும் போயா தினங்களில்

49 - 51, அம்மன் வீதி, நல்லூர், யாழ்.

021 222 6868, 075 987 5800, 077 736 0353

**தேசியம், தாயகம், சுயநிர்ணயம், தன்னாட்சி, இணைப்பு**

# எதுவுமே இல்லாத 13 ஆவது திருத்தத்தை முழுமையாக எதிர்க்க முதல்வர் கங்கணம்



## தம்மை ஓரம் கட்டும் சதிகள் சறுக்கியதும் இப்போது சவால்கள் விடப்படுகின்றனவாம்

**யாழ்ப்பாணம், ஜூலை 01**

**அரசமைப்புக்குக் கொண்டுவரப்பட்ட 13 ஆவது திருத்தச் சட்டத்தை ஒற்றையாட்சி முறைமையின் கீழ் முழுமையாக நடைமுறைப்படுத்துவதுதான் தீர்வு என்றால் அது பல விபரீதங்களை ஏற்படுத்தும். நாம் கோரிய தேசியம், சுயநிர்ணயம், தாயகம், தன்னாட்சி, வடக்கு - கிழக்கு இணைப்பு என்பன எல்லாவற்றையும் அது புறம் தள்ளிவிடும். எனவே, 13 ஆவது திருத்தச் சட்டமே தீர்வு என்ற விடயத்தை நாம் முழுமையாக எதிர்க்கவேண்டும்.**

**- இவ்வாறு அழைப்பு விடுத்திருக்கின்றார் வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வீ. விக்னேஸ்வரன்.**

பக்கம் 03 »»

## விக்கி – சங்கரி சந்திப்பு

### தமிழர் விடுதலைக் கூட்டணியை எந்நேரமும் கையளிக்கத் தயார் என மீளவும் உறுதியளிப்பு



கொழும்பு, ஜூலை 01

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி நேற்று மாலை திடீரென வடக்கு மாகாணமுதல்வர்சி.வீ.விக்னேஸ்வரனை அவரது யாழ்ப்பாண இல்லத்துக்குச் சென்று சந்தித்தார்.

பக்கம் 18 »»

## அரசமைப்புக் கவுன்ஸிலின் வழிகாட்டல் குழு இவ்வாரத்தில் கூடி முக்கிய முடிவு எடுக்கும்

கொழும்பு, ஜூலை 01

அரசமைப்புக் கவுன்ஸிலின் வழிகாட்டல் குழு அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இவ்வாரம் செவ்வாய், புதன், வியாழன் ஆகிய மூன்று நாள்களிலும் கொழும்பில் கூடி முக்கிய முடிவுகளை எடுக்க இருக்கின்றது.

இந்த மூன்று நாள்களிலும் பிற்பகல் 2.30 மணிமுதல் அதன் கூட்டத்தைத் தொடர்ந்து நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பக்கம் 18 »»

## நல்லிணக்கம், அதிகாரப் பகிர்வை எதிர்ப்பதா? தேரர்களுக்கு எதிராகத் தேரர்களே போர்க்கொடி

தீவிர பௌத்த, சிங்கள இனவாதக் கருத்துக்களை வெளியிடும் பொதுபல சேனாவுக்கும், அதன் பொதுச்செயலாளர் வண. ஞானசார தேரருக்கும் ஆதரவு தெரிவித்து மகாநாயக்க தேரர்கள் தரப்பிலிருந்து சில அறிவிப்புகள் வெளியானமையை அடுத்து –

அத்தகைய அறிவிப்புக்களுக்கு எதிராகப் பிரதான பல தேரர்களை உள்ளடக்

பக்கம் 18 »»

## உதயங்கவின் கடவுச் சீட்டுக்களை முடக்க நீதிமன்று உத்தரவு



கொழும்பு, ஜூலை 01

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மைத்துனரும் ரஷ்யாவுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவருமான உதயங்க

பக்கம் 18 »»

## ஜனாதிபதியின் செயலர் பதவி விலகுகிறார்



கொழும்பு, ஜூலை 01

ஜனாதிபதிசெயலாளர் பி.வி. அபேக்கோன்தனிப்பட்ட தேவைக்காக தனது பதவியில் இருந்து விலகியுள்ளார்எனஅறிவிக்கப்படுகின்றது.

பக்கம் 18 »»

## இலங்கை, தமிழக, புலம்பெயர் தமிழர்கள் இணைந்து செயற்பட வைக்கும் முயற்சி

### சுரேஷ், சிவசக்தி ஆனந்தனின் தமிழக விஜயம் குறித்துத் தகவல்

கொழும்பு, ஜூலை 01

ஈழ, தமிழக மற்றும் புலம்பெயர் தமிழ் மக்கள் இணைந்து செயற்படுவது தொடர்பில் சாதகமான இணக்கப்பாடு ஏற்பட்டுள்ளதாக ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

நான்குநாள்கள் பயணமாக இந்தியா சென்றிருந்த இவர் அங்கு நடைபெற்ற முக்கிய சந்திப்புக்கள் குறித்து கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு கூறினார்.

இந்திய – ஈழநட்புறவை விரும்பும் தமிழக செயற்பாட்டாளர்களின் அழைப்பின் பேரில் இந்தியாவின் தமிழகத்திற்கு நான்கு நாள் விஜயமொன்றை

பக்கம் 03 »»

## 27 வருடங்களுக்கு முந்திய கொலைக்கு 5 பொலிஸாருக்கு மரண தண்டனை

கொழும்பு, ஜூலை 01

27 ஆண்டுகளுக்கு முன்னர் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சந்தேகநபர் ஒருவரைக் கொலை செய்தனர் என்ற குற்றச்சாட்டில் குற்றவாளியாக அடையாளம் காணப்பட்ட

பக்கம் 18 »»

## காணிகள் விடுவிப்புக் குறித்து யாழில் திங்கட்கிழமை கூட்டம்

கொழும்பு, ஜூலை 01

படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காணிகளை மக்களுக்கு மீளப்பெற்றுக்கொடுப்பது தொடர்பாக படைத்தரப்புடன் தொடர்ந்து பேச்சுக்கள் நடத்தப்படவிருக்கின்றன.

பக்கம் 18 »»

## கொழும்பில் தீ!

கொழும்பு கொம்பனித் தெருப் பகுதியிலுள்ள நிப்போன் தனியார் ஹோட்டலுக்கு அருகில் நேற்றிரவு திடீர் தீ விபத்து ஏற்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு மாநகர சபையின் தீயணைப்பு பிரிவினர் தீயைக் கட்டுப்படுத்தும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

## திருட்டுக் கடையாகத்தான் ஆரம்பிக்கப்பட்டது 'சைட்டம்'!

### மஹிந்த அதற்கு அனுமதி வழங்கவில்லையாம்

கொழும்பு, ஜூலை 01

'சைட்டம்' தனியார் மருத்துவக் கல்லூரி எவ்வித சட்டவிதிகளும் இன்றித் திருட்டுக் கடையாக ஆரம்பிக்கப்பட்டது எனத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில, அந்தக் கல்லூரியை ஆரம்பிக்க, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அனுமதி வழங்கியிருக்கவில்லை எனவும் கூறினார்.

பக்கம் 18 »»

அளப்ப அருணாசலம்



உது... சவாலை ஏற்காமல் 'சமாளிபிக்கேஷன்' பாருங்கோ...!

## வடக்கு முதல்வர் விக்னேஸ்வரன் பாரபட்சமாகச் செயற்படுகின்றார்

### அமைச்சர் டெனீஸ்வரன் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 01

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் பாகுபாடாக – பாரபட்சமாக – நடக்கின்றார் என மீன்பிடி மற்றும் போக்குவரத்து அமைச்சர்

பக்கம் 18 »»

காலைக்கதிர் Kalaikkathir



## மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டி கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை 01

யாழ்.புனித மரியன்னை பேராலய இளைஞர் உருவாக்கல் இயக்கத்தினரின் ஏற்பாட்டில் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் கிறிஸ்தவம் மற்றும் கிறிஸ்தவ நாகரிகம் ஆகிய பாடங்களுக்கு தோற்றவிருக்கும் மாணவர்களுக்கான இரண்டு நாள் பரீட்சை வழிகாட்டிக் கருத்தரங்கு இன்று சனிக்கிழமை மற்றும் நாளை ஞாயிற்றுக் கிழமை ஆகிய இரு தினங்களும் காலை 9 மணி முதல் மாலை 4.30 மணிவரை யாழ். மறைக்கல்வி நடுநிலைய மண்டபத்தில் நடைபெறும். (ச)

## பஸ் கட்டண அதிகரிப்பு இன்றுமுதல் நடைமுறைக்கு!

இலங்கை போக்குவரத்து துறையில் புதிய பஸ் கட்டணம் இன்று முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக இலங்கை போக்குவரத்துச்சபை தலைமை அதிகாரி பி.எச்.ஆர்.ரி. சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

இந்தப் புதிய பஸ் கட்டண மறுசீரமைப்பு தொடர்பாக பொதுமக்களுக்குத் தெரியப்படுத்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதுதொடர்பில் போக்குவரத்து பொது முகாமையாளர் தெரிவித்தவை வருமாறு:-

தனியார் பஸ்களில் புதிய பஸ் கட்டணங்கள் காட்சிப்படுத்தப்பட வேண்டும் என்று கூறப்பட்டிருக்கும் அதேவேளை பஸ் கட்டணம் உரிய வகையில் செயற்படுத்தப்படுகின்றதா என்பதைக் கண்டறிவதற்கு நாடு தழுவிய ரீதியில் திடீர் சோதனைகள் இடம்பெறும்.

பஸ் கட்டண அறவீடு மற்றும் பருவகால அனுமதி அட்டைவழங்கல் தொடர்பாக ஏதேனும் முறைப்பாடுகள் இருக்கும் தருணத்தில் அதனை 0115 559 595 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு அறிவிக்கலாம்.-என்றார். (எ)

# நல்லாட்சி மீதான நம்பிக்கையை முற்றாக இழந்த நிலையில் மக்கள்!

### தேசிய ஐக்கிய முன்னணித் தலைவர் அசாத் சாலி தெரிவிப்பு




கொழும்பு, ஜூல 1

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியை வீழ்த்தி அரியணையில் அமர்ந்த நல்லாட்சி அரசின் மீதான நம்பிக்கையை மக்கள் முற்றாக இழந்துள்ளனர் என்று மத்திய மாகாண சபையின் முன்னாள் உறுப்பினரும் தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவருமான அசாத்சாலி தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மதகுருமார்கள் தவறிழைக்கலாம் என்பதில்லை. சட்டத்தின் முன் அனைவரும் ஒன்றே. நாம் சட்டத்துக்கு அடிமைகளாக இருக்க வேண்டும். எனவே யாராக இருப்பினும் சட்டத்தை நடைமுறைப்படுத்துங்கள் என்றே நாம் கோருகின்றோம்.

அதேவேளை, பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் வண.கலகொட அத்தே ஞானசார தேரரை, ஜனாதிபதி மைத்திரிபாலவை அவரது வாசஸ்தலத்துக்கு அழைத்து மூன்று முறை சந்தித்திருந்தும் சிறுபான்மையினர் என்ற வகையில் எம்மை வருத்தமடையச் செய்துள்ளது.

அத்துடன், இந்த அரசு திருடர்களைப் பாதுகாக்கும் அரசாகவே தொடர்ந்து செயற்பட்டு வருகிறது.- என்றார். (எ)

# வவுனியாவில் காணாமற்போயிருந்த ஐவரில் மூவர் பொலிஸாரால் மீட்பு!

### தேடப்படுகின்றனர் இரு பெண் பிள்ளைகள்!!

வவுனியா, ஜூலை 1

வவுனியாவில் வெவ்வேறு இடங்களில் ஐவர் காணாமற்போயுள்ளனர். அவர்களில் மூவர் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன்படி, வவுனியாவில் உள்ள பிரபல பாடசாலையில் தரம் ஒன்பதில் கல்வி பயிலும் மூன்று மாணவர்கள் பாடசாலை சென்று வீடு திரும்பவில்லை என்று பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகள் பதியப்பட்டுள்ளன.

வவுனியா - ஈச்சங்குளம் பகுதி பொலிஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் இந்த முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில் அந்த பாடசாலை மாணவர்கள் மூவரும் திருகோணமலை கடற்கரைப் பகுதியில் நேற்று பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் தாமாகவே யாருக்கும் தெரியாமல் திருகோணமலைக்குச் சென்றுள்ளனர் என்றுபொலிஸ் விசாரணைகளில் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, தரணிக்குளம் பகுதியைச் சேர்ந்த 20 வயதுடைய ஈஸ்வரன் தர்சா என்பவர் வீட்டில் கடிதம் எழுதிவைத்து விட்டு காணாமல் போயுள்ளார் என்றுபொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன், சுந்தரபுரம் பகுதியைச் சேர்ந்த 16 வயது மாணவி ஒருவரும் காணவில்லை என்று ஈச்சங்குளம் பொலிஸாரிடம் பெற்றோரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் விசாரணைகளை ஈச்சங்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-100)

## மக்கள் வங்கியின் இரத்ததான முகாம்

மக்கள்வங்கியின் 55 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மக்கள் வங்கி யாழ். பிராந்திய இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தின் ஏற்பாட்டில் குருதிக் கொடை நிகழ்வொன்று மக்கள் வங்கி , யாழ். ஸ்ரான்லி வீதிக் கிளையில் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 8 மணி முதல் மதியம் 2 மணி வரை நடைபெறவுள்ளது.

மக்கள்வங்கியின்யாழ்.பிராந்திய முகாமையாளர் க.சுசீந்திரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வை யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி த.சத்திய மூர்த்தி ஆரம்பித்து வைப்பார். (உ)

## ஆவணக் காப்பகத்தின் 49 ஆவது நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூலை 01

சமகாலக் கலை கட்டடக் கலைமற்றும்வடிவமைப்புக்கான ஆவணக்காப்பகத்தின் 49 ஆவது நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணி முதல் நண்பகல் 12 மணிவரை இல - 199, கோவில் வீதி, நல்லூரில் அமைந்துள்ள சமகாலக் கட்டடக்கலை மற்றும் வடிவமைப்புக்கான ஆவண காப்பகத்தில் இடம்பெறும்.

இந்த நிகழ்வில் 'இலங்கை சீத்தையின் உயிர்ப்பு' என்னும் தலைப்பில் மார்க் ஈ.பாலம்வோ(க)ர்த் உரையாற்றவுள்ளார். இந்த நிகழ்வில் கலை ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றது. (ச)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை 01

சர்வதேச மார்க்சிய குழுவின் ஏற்பாட்டில் ''புலம் பெயர் தமிழர்கள் ஒரு பார்வை'' என்ற தலைப்பிலான கருத்துரை நாளை ஞாயிறு பிற்பகல் 4 மணிக்கு யாழ்ப்பாணம் டி.எம்.ஐ. கல்வி நிறுவனத்தில் இடம் பெறும். தலைவர் ஏ.சி.ஜோர்ச் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் யோகராஜன் உரை நிகழ்த்துவார். (இ)

# 'சைட்டம்' அரசுடைமையாக்க வேண்டும்; கோரிக்கை நியாயமானது; வரவேற்கிறோம்!

### புதிய ஜனநாயக மாக்சிச –லெனினிசக் கட்சி தெரிவிப்பு

சைட்டம் தனியார் மருத்துவக் கல்லூரி மூடப் பட்டு முழுமையாக அரசுடைமையாக்கப்பட வேண்டும் என்ற அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்களதும் பெற்றோர்களதும் வைத்தியர்களதும் கோரிக்கை முற்றிலும் நியாயமானதாகும். ஆனால் நல்லாட்சி முகமூடி அணிந்துள்ள அரசு முன்னைய மஹிந்த ஆட்சி போன்று மாணவர்கள் மீது பொலிஸ் அடக்குமுறையை ஏவி விட்டுள்ளமை வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியது என்று புதிய -ஜனநாயக மாக்சிச -லெனினிசக் கட்சி தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா. செந்திவேல் வெளியிட்ட செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

மாணவரின் கோரிக்கைகளையும் அதற்கான போராட்டங்களையும் நசுக்கி பழிவாங்கும் அரசின் நிலைப்பாட்டை எமது கட்சி எதிர்க்கின்றது. மாணவர்களும் பெற்றோரும் மருத்துவர்களும் முன்னெடுத்துவரும் எதிர்ப்புப் போராட்டங்களுக்குக் கட்சி தனது முழுமையான ஆதரவையும் வழங்குகிறது. அதேவேளை, கைது செய்யப்பட்ட மாணவத் தலைவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்று வலியுறுத்துகின்றது.

இலங்கையில் இலவச மருத்துவம் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருவதும் இலவசக் கல்வி மூலம் பல்கலைக்கழகங்கள் மருத்துவர்களை உருவாக்கி வருவதும் அதன் பலாபலன்களை நாட்டின் ஏகப் பெரும்பான்மையான உழைக்கும் மக்கள் அனுபவித்து வருகின்றமையும் ஒரு வரப்பிரசாதமாகும். ஆனால், இவற்றுக்குச் சமாதி கட்டவே சைட்டம் தனியார் மருத்துவக் கல்லூரி எனும் பெரும் புதைகுழி தோண்டப்பட்டுள்ளது. மருத்துவத்துறைக்கான இப்புதைகுழி மூடப்படாது விட்டால் எதிர் காலத்தில் இலவச மருத்துவமும் அதற்கான இலவச மருத்துவக்கல்வியும் தனியார் துறையால் விழுங்கப்பட்டு விடும்.

இதன் அபாயத்தை உணர்ந்தே அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்களும் பெற்றோரும் ஆசிரியர்களும் மருத்துவர்களும் போராடி வருகிறார்கள். அதற்கு இடதுசாரிக் கட்சிகளும் அமைப்புக்களும் தொழிற்சங்கங்களும் ஆதரவு தெரிவித்து வருகின்றன. ஆனால், முன்னணியில் இருந்துவரும் மாணவர்களை அடக்கியொடுக்குவதற்கும் பழிவாங்குவதற்கும் நல்லாட்சி அரசு பொலிஸ் அடக்குமுறையை ஏவி நிற்கின்றது.

அண்மையில் மாணவர்கள் ஆர்ப்பாட்டப் பேரணியாகச் சென்று சுகாதார அமைச்சை முற்றுகையிட்டுத் தமது கோரிக்கையை வலியுறுத்திய சந்தர்ப்பத்தைச் சாட்டாக வைத்து மாணவர்கள்மீது மிருகத்தனமான தாக்குதலைப் பொலிஸார் மேற்கொண்டனர். எண்பதுக்கும் மேற்பட்ட மாணவர்கள் காயங்களுக்கும் படுகாயங்களுக்கும் ஆளாகினர். மேலும் மாணவர்களைக் கைது செய்வதற்குத் தேடிவரும் பொலிஸார் மாணவத் தலைவர்களான லகிரு வீரசேகர, சுகதானந்த தேரர் வைஷான் அஹமட் ஆகியோரைக் கைதுசெய்துவிளக்கமறியலிலும் வைத்துள்ளனர்.

இத்தகைய பொலிஸ் அடக்குமுறைச் சம்பவம் முன்னைய மஹிந்த ஆட்சிக்காலத்தின் தொடர்ச்சியாகவே அமைந்துள்ளது. இது நல்லாட்சி எனும் முகமூடி அணிந்துகொண்டு முன்னைய ஆட்சிகள் முன்னெடுத்து வந்த தனியார்மயமாக்கக் கொள்கையைத் தீவிரமாக நடைமுறைப்படுத்தும் போக்கையே எடுத்துக் காட்டுகிறது. எனவே, சைட்டம் தனியார் மருத்துவக் கல்லூரி மூடப்பட வேண்டும். அதன் மூலம் இலவசக் கல்வியும் இலவச மருத்துவமும் பாதுகாக்கப்படவேண்டும் என மாணவர்களும் பெற்றோர்களும் ஆசிரியர்களும் மருத்துவர்களும் முன்வைத்துவரும் கோரிக்கைகளை எமது கட்சி ஆதரித்து நிற்கின்றது.-என்றுள்ளது. (எ)

# யாழில் போராடும் பட்டதாரிகளை அமைச்சர் அனந்தி சந்தித்தார்

## சிவாஜிலிங்கமும் பங்கேற்பு

யாழ்ப்பாணம், ஜூலை 01

வடமாகாண வேலையற்ற பட்டதாரிகளை மாகாண அமைச்சர் திருமதி அனந்தி சசிதரன் நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

தமக்கான அரச வேலை வாய்ப்பை வழங்கக் கோரி வடமாகாண வேலையற்ற பட்டதாரிகள் யாழ். மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக ஆரம்பித்த கவனவீர்ப்புப் போராட்டம் நேற்று 124 ஆவது நாளாகவும் இடம்பெற்றது. இரவு, பகலாக அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் வடமாகாண மகளிர் விவகாரம், சமூக சேவைகள் மற்றும் புனர்வாழ்வு அமைச்சராக நேற்று முன்தினம் பொறுப்பேற்ற திருமதி அனந்தி சசிதரன் மற்றும் வடமாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் ஆகியோர் நேற்று போராட்டக் களத்திற்குச் சென்று பட்டதாரிகளைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்புத் தொடர்பாக பட்டதாரிகளின் பிரதிநிதியொருவர் கருத்துத் தெரிவிக்கையில் –

வேலையற்ற பட்டதாரிகளின் பிரச்சினை வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு ஒரு பொதுவான பிரச்சினையாகக் காணப்படுகின்றமையால் இரு மாகாணங்களையும் சேர்ந்த பட்டதாரிகள் இணைந்து சம்மேளனமொன்றை உருவாக்க வேண்டியதன் அவசியம் தொடர்பில் வடமாகாணத்தின் புதிய அமைச்சர் அனந்தி சசிதரன் மற்றும் சிவாஜிலிங்கம் ஆகியோர் வலியுறுத்தினர்.

அவ்வாறான சம்மேளனத்தின் உருவாக்கத்தின் பின்னர் அரசாங்கத்திற்கு வழங்கப்படும் அழுத்தம் பலமுள்ளதாக அமையும் எனவும் அவர்கள் சுட்டிக்காட்டினர். – என்றார். (ம)

# வேலையற்ற பட்டதாரிகள் கொழும்பில் போராட்டம்

## ஜூலை 06 இல் நடத்த ஏற்பாடு

வடக்கு, கிழக்கு உட்பட நாடு முழுவதிலும் உள்ள பட்டதாரிகள் எதிர்வரும் 06 ஆம் திகதி கொழும்பில் பெருமெடுப்பிலான போராட்டம் ஒன்றை நடத்துவதற்கான முஸ்தீபுகளில் ஈடுபட்டுவருகின்றனர்.

ஒன்றிணைந்த வேலையற்ற பட்டதாரிகள் சங்க இணைப்பாளர் வண.வென்னேஞானானந்த தேரர், வடமாகாண வேலையற்ற பட்டதாரிகளைச் சந்தித்துக் கலந்துரையாடியபோது இந்த ஏற்பாடுகள் குறித்துக் கூறினார்.

வேலையற்ற பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்க வலியுறுத்தி மத்திய அரசிற்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் நடத்தப்படவுள்ள இந்தப் போராட்டத்தில் வடமாகாண வேலையற்ற பட்டதாரிகளின் பிரதிநிதிகளையும் கலந்து கொள்ளுமாறு அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ம)

# தையிட்டியில் விகாரை அமைப்பதற்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜூலை 01

வலி.வடக்கில் உள்ள தையிட்டிப் பகுதியில் விகாரை ஒன்றை அமைப்பதற்கான காணி அளவீட்டுப் பணிகள் நேற்றுமுன்தினம் மூன்று பௌத்த பிக்குகளின் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது.

1983ஆம் ஆண்டுக்கு முன்னர் தையிட்டிப் பகுதியில் 20 பரப்புக் காணியில் விகாரை ஒன்று அமைக்கப்பட்டிருந்ததாக வலி. வடக்குப் பிரதேச சபை ஆவணங்களின் குறிப்பிடப்பட்டிருந்தமைக்கு அமைவாகவே, இந்த அளவீட்டுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

இந்த விகாரையை விட்டு 1983ஆம் ஆண்டுக்கு முன்னர், பிக்குகள் வெளியேறிய நிலையில், சில குடும்பங்கள், விகாரைக்காணிகளில் குடியமர்ந்திருந்தனர். அவர்களும், 1990ஆம் ஆண்டு போரினால் இடம்பெயர்ந்தனர்.

அண்மையில் இராணுவக்கட்டுப்பாட்டில் இருந்து தையிட்டி பகுதி விடுவிக்கப்பட்டதை அடுத்து, அந்தக் காணிகளில் குடியிருந்த 7 குடும்பங்கள் மீண்டும் குடியமர்ந்திருந்தனர்.

இந்த நிலையில், விகாரைக்கான காணி உறுதி ஆவணங்களுடன் பிரதேச செயலகத்தை அணுகிய பிக்குகள், அதை அடையாளப்படுத்தி, மீட்பதற்கான நடவடிக்கையாகவே, நேற்றுமுன்தினம் அளவீட்டுப் பணிகளை மேற்கொண்டனர்.

இதனால் அங்கு குடியிருக்கும் 7 குடும்பங்களும் வெளியேற்றப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

அதேவேளை, விகாரைக் காணியை மீட்டு அங்கு புதிய விகாரை ஒன்றை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

# முஸ்லிம்கள் யாழில் மீளக்குடியேற்றம் நேற்று ஆராய்வு

யாழ்ப்பாணம், ஜூலை 01

முஸ்லிம்கள் வடக்கில் மீளக்குடியேறுவது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்றுப் பிற்பகல் யாழ். செயலகத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் அமைச்சர் ரிஷாத் பதியுதீன், நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, எம்.ஏ.சுமந்திரன், அங்கஜன் இராமநாதன் ஆகியோரும் மாகாண சபை உறுப்பினர்களும், அரச அதிபர், மூன்று பிரதேச செயலர்கள், யாழ். மாநகர சபை அதிகாரிகள் ஆகியோரும் கலந்துகொண்டனர். (உ)

# கலைமுதற் தேர்வு திசைமுகப்படுத்தும் நிகழ்வு இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 01

கலைமுதற்தேர்வு (வெளிவாரி) பழைய பாடத்திட்டத்திற்கான திசைமுகப்படுத்தும் நிகழ்வு – இன்று தொடக்கம் 22 ஆம் திகதி வரை, சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் திறந்த மற்றும் தொலைக் கல்வி நிலையத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

திசைமுகப்படுத்தும் நிகழ்வு தொடர்பான நேர அட்டவணையை திறந்த மற்றும் தொலைக் கல்வி கல்வி நிலைய இணையத்தள முகவரியில் (www.codl.jfn.ac.lk) பார்வையிடலாம் என்று பணிப்பாளர் பேராசிரியர் பா.நிமலதாசன் அறிவித்துள்ளார். (அ)

## விக்கி...

(18ஆம் பக்கத் தொடர்ச்சி)

“நாங்கள் இருவரும் பழைய நண்பர்கள். சட்டக் கல்லூரிக் கால சகாக்கள். எங்கள் பழைய நினைவுகளை இந்தச் சந்திப்பின் போது மீட்டுக் கொண்டோம்.

“அவர் முதல்வராகப் பதவியேற்ற பின்னர் ஓர் இறப்பு வீட்டிலும், ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்விலும் நேருக்கு நேர் கண்டு கொண்டோம். அவ்வளவே. நேற்றிரவு (வியாழன் இரவு) கூட இந்தியத் தூதரின் இரவு விருந்தின் போது ஆளை ஆள் கண்டு சிரித்து, கை குலுக்கியமையோடு சரி. நாங்கள் பேசிக்கொள்ள முடியவில்லை. அதனால் அவரைச் சந்திக்க வந்தேன். அந்தச் சந்திப்புக்கு ஓர் நோக்கமும் இருந்தது.

“முதலமைச்சர் ஒரு மூத்த பிரமுகர். ஓய்வுபெற்ற நீதியரசர். சுமந்திரனும், சிறிதரனும் அவரைச் சீண்டுவதற்கு யார்? அவர்கள் முதலமைச்சருக்கு சவால் விடுகின்றார்களாம். அதை ஏற்க முடியவில்லை. அதனால்தான் அது குறித்து எனது வருத்தத்தையும், முதல்வருக்கான எனது ஆதரவையும் நேரில் தெரிவிக்க வந்தேன்.

“நான் சம்பந்தனைப் பேசுவதும், அரசியல் ரீதியாக வைவதும் வேறு. நேற்றுமுளைத்த அரசியல்வாதிகளான கஜேந்திரகுமார், மூத்த அரசியல் தலைவரான சம்பந்தனை எப்படிப் பேசமுடியும்?

“அது போன்றுதான் சுமந்திரனும், சிறிதரனும், மூத்த தலைவரான விக்னேஸ்வரனுக்குச் சவால்விட முடியாது. அது ஏற்றுக்கொள்ளத் தக்கதல்ல.” – என்று தெரிவித்தார் சங்கரி. (உ)

## எதுவுமே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுக் காலை யாழ். மத்திய கல்லூரியில் நாவலர் சிலையைத் திறந்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இந்த அழைப்பை விடுத்தார்.

தமது உரையின் ஆரம்பத்தில் நாவலரின் சேவையை அவர் பாராட்டினார். உரையின் இறுதியில் தற்போதைய அரசியல் நிலைவரங்கள் குறித்து அவர் கருத்து வெளியிடுகையில் கூறியவை வருமாறு :-

நாவலர் தமது கொள்கைகளில் விட்டுக் கொடுக்காத ஒரு நிலையைப் பின்பற்றி வந்தமை பலரால் விமர்சிக்கப்பட்டுள்ளது. அண்மையில் ஒருவர் என்னிடம் கூறினார் “ஏன் நீங்கள் தமிழ் மக்களின் உரிமைகள் சம்பந்தமாக நாவலர் இருந்தமை போல் விடாப்பிடியாக நிற்கின்றீர்கள்? சம்பந்தர் போல் விட்டுக் கொடுக்கலாமே” – என்று.

அதற்கு நான் ‘சம்பந்தர் ஐயா விட்டுக் கொடுக்கின்றாரோ இல்லையோ நான் அறியேன். ஆனால், அடிப்படை அத்திவாரத்தை நாங்கள் கெட்டியாகக் கட்டாவிட்டால் முழுக் கட்டடமுமே ஒருநாள் தகர்ந்துவிழுந்துவிடும். பிழையான அத்திவாரத்தில் சரியான கட்டடம் காலா காலத்தில் நிறுவப்படலாம் என்று எண்ணுவது மடமை.” – என்றேன்.

கொஞ்சம் கொஞ்சமாகப் பிறகு கட்டலாம் என்பது கூட தகுந்த அத்திவாரம் இட்ட பின்னர் தான் பொருந்தும். இதனால் தான் சைவசமய அனுஷ்டானங்களிலும் அவற்றின் நெறி முறைகளிலும் ஓர் இறுக்கம் நாவலரால் கடைப்பிடிக்கப்பட்டது. அன்பு நிலை வேறு. அனுபவ நிலை வேறு. அடிப்படைகளை விட்டுக் கொடுக்காது அன்பு நிலையில் வாழலாம் என்பதை எமக்கு உணர்த்தியவர் நாவலர்.

தேசியம், சுயநிர்ணயம், தாயகம், தன்னாட்சி, வடக்கு – கிழக்கு இணைப்பு என்று அடிப்படைகளைக் கூறிவிட்டு ஒற்றையாட்சியின் கீழ் ‘13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையான நடைமுறைப்படுத்தல்’ என்பதை ஏற்றுக் கொள்வதென்பது எத்தகைய விபரீதங்களை ஏற்படுத்தும் என்று நாங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

### கொழும்புப் பார்வை

ஒற்றையாட்சி என்றவுடன் நாம் கோரிய தேசியம், தாயகம், சுயநிர்ணயம், தன்னாட்சி என்பன இருந்த இடந்தெரியாமல் மறைந்துவிடுவன. 13ஆவது திருத்தச் சட்ட முழுமையான நடைமுறைப்படுத்தலின் கீழ் வடக்கு – கிழக்கு இணைப்பு கூட இடம்பெறாது. ஆகவே, நாங்கள் கேட்டதில் எதையுமே தராது ஒரு தீர்வைப் பெற எத்தனிப்பதே எமது கொழும்புப் பார்வை. எமது இனப்பிரச்சினையைத் தீர்க்கக் கொழும்பின் யன்னல், கொழும்பின் பார்வையாவன ஒருபோதும் உதவா என்பதே என் கருத்து.

அரசியல் பிரச்சினையானது எங்களுக்கு ஏற்பட்ட ஒன்று. நாங்கள் தான் பாதிக்கப்பட்டவர்கள். எமது நிலையில் இருந்துதான் பிரச்சினையை அணுக வேண்டுமே ஒழிய கொழும்பின் பார்வையில் இருந்தல்ல.

ஒற்றையாட்சியில் 13ஆவது திருத்தச் சட்டத் தீர்வானது என்றென்றைக்குமே தமிழ் மக்களைத் தமது அடையாளம் தெரியாமல் ஆக்கிவிடும். ஒற்றையாட்சி எம்மை என்றென்றைக்குமே அடிமைகள் ஆக்கிவிடும்.

எமது தனித்துவம் பேணப்படவேண்டுமென்றால் வெறும் 13ஆவது திருத்தச் சட்டத் தீர்வை நாங்கள் முற்றுமுழுதுமாக எதிர்க்கவேண்டும். இதையே அமிர்தலிங்கம், சிவ சிதம்பரம் மற்றும் சம்பந்தன் ஐயா ஆகியோர் 28.10.1987 ஆம் திகதிய கடிதத்தால் ரஜீவ் காந்திக்கு வலியுறுத்தினர்கள்.

அவர்கள் வலியுறுத்தியதை நான் இன்று வலியுறுத்துவதால் என்னை ஓரம் கட்டி அரசியலில் இருந்து விரட்டிவிட பல நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. சிலர் சதிகள் சறுக்கியதும் சவால்களில் ஈடுபட முன்வந்துள்ளார்கள்.

எமது இனம் பற்றிச் சிந்திப்பது நாவலரின் இறுக்கச் சிந்தனைகளுக்கு ஒப்பானது என்றால், இன்று நாவலரின் சிந்தனைகளைப் பின்பற்றவேண்டிய ஒரு கடப்பாடு எமக்கு ஏற்பட்டுள்ளது என்றே அர்த்தம்.

அவ்வாறான அடிப்படையில் பற்றுறுதி கொண்ட ஆறுமுக நாவலர் அவர்களின் திருவுருவச் சிலையை அவர் ஆங்கிலக் கல்வியைக் கற்ற, தமிழைக் கற்பித்த, தமிழ் விவிலிய நூலை உருவாக்குவதற்குக் காரண கர்த்தாவாக இருந்த பேர்சிவல் பாதிரியார் அதிபராக இருந்த இதே கல்லூரியில் அமைத்து திரை நீக்கம் செய்வது சமயங்களின் எல்லையைக் கடந்து தமிமுக்கும் அதன் செழுமைக்கும் வழங்கப்படுகின்ற ஓர் அங்கீகாரம். – என்றார். (உ)

## இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொண்ட ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன் மற்றும் பொதுச் செயலாளர் சிவசக்தி ஆனந்தன் ஆகியோர் தமிழ்மக்கள் பேரவையின் சார்பாகவும், கட்சியின் சார்பாகவும் கடந்த 25 ஆம் திகதி முதல் 28 ஆம் திகதி வரை பல்வேறு தரப்பினரையும் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

சென்னைப் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், தமிழக சட்டசபை உறுப்பினர்கள், தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள், பிரதிநிதிகள், இந்தியா முழுவதும் செயற்பட்டு வரும் மக்கள் சிவிலுரிமைக் கழகத்தினர், சினிமா பிரபலங்கள் , பல்கலைக்கழக மாணவர் அமைப்புக்கள் உள்ளிட்ட பல்வேறுபட்ட அமைப்புக்களின் தலைவர்கள் எனப் பல்துறை சார்ந்த தரப்புக்களையும் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

“இந்தக் கலந்துரையாடலின் போது இராணுவத்தின் கட்டுப்பாட்டிலுள்ள காணிகள் முழுமையாக விடுவிக்கப்படாத காரணத்தால் தமிழ்மக்கள் முழுமையாக மீளக் குடியமர்த்தப்படாமை, காணிகள் விடுவிப்பு, காணாமல் ஆக்கப்பட்டவர்களைக் கண்டுபிடித்துத் தருமாறு கோரி வடக்கு, கிழக்கில் இடம்பெறும் மக்கள் போராட்டங்கள் போன்ற விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அத்துடன் இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள அரசமைப்பு மாற்றம் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

“குறிப்பாக அரசியல் சாசன மாற்றம் குறித்து வெளிப்படைத் தன்மையற்ற நிலைமை காணப்படுவது தொடர்பாகவும் , தமிழ் மக்கள் முன்வைத்த அடிப்படைக் கோரிக்கைகளான வடக்கு–கிழக்கு இணைப்பு, சமஷ்டி போன்ற கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டமைக்கான காரணங்கள் குறித்தும் ஆராய்ந்தோம். தமிழ் மக்களுடைய இருப்பை இலங்கையில் தொடர்ந்தும் நிலை நிறுத்துவதற்குத் தமிழ்மக்களுக்கான பூரண உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என இந்தக்க லந்துரையாடல்களின் போது வலியுறுத்தப்பட்டுள்ளன.

“இதற்காக ஈழத்தமிழ் மக்கள், தமிழகத் தமிழ்மக்கள், புலம் பெயர் தமிழ்மக்கள் ஆகிய முத்தரப்பினரும் எவ்வாறு இணைந்து பணியாற்றுவது என்பது தொடர்பிலும் பேசினோம். இந்தக் கலந்துரையாடல்களின் போது பல்வேறுபட்ட ஆக்கபூர்வமான ஆலோசனைகள் பலராலும் முன்வைக்கப்பட்டன. தமிழகத்தில் நாம் நடத்திய சந்திப்புக்கள் மிகவும் பயனுள்ளவையாக அமைந்திருந்தன.” – இவ்வாறு சுரேஷ் பிறேமச்சந்திரன் கூறினார் என இணையத் தகவல்கள் தெரிவித்தன. (உ)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## முதல்வரின் குழப்பம்

நேற்று யாழ். மத்திய கல்லூரியில் நாவலர் சிலையைத் திறந்து வைத்து முதல்வர் விக்னேஸ்வரன் ஆற்றிய உரை அண்மைக் கால அரசியல் சர்ச்சைகளில் மற்றொரு திருப்பு முனை என்றே சொல்லலாம்.

இவ்வளவு காலமும் கூட்டமைப்பின் தலைமையோடு அவர் முண்டியமையைப் பார்த்தபோது அவர், கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரனோடு மோதுகின்றார் என்று மட்டுமே எண்ணத் தோன்றியது.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு உட்பட்ட அரசமைப்பு உருவாக்க முயற்சிகளில் கூட்டமைப்பின் அணுகுமுறையை முதல்வர் விமர்சித்தபோது, அந்த விடயத்தில் நேரடியாகச் சம்பந்தப்பட்டிருக்கும் சுமந்திரனை இலக்கு வைத்தவையாக அந்த விமர்சனங்கள் முன்னெடுக்கப்படுகின்றன என்றே நம்மில் பலரும் நினைத்தனர்.

சுமந்திரனைத் தாக்குதல் என்ற இலக்கில் அவர் நடத்தும் காய் நகர்த்தல்கள் அல்லது விமர்சனங்கள், அந்த அரசமைப்பு உருவாக்க முயற்சி ஊடாகத் தீர்வை ஒன்றைக் காணும் எத்தனத்துக்குத் தலைமை வகிக்கும் கூட்டமைப்புத் தலைவர் சம்பந்தனையும் சுரண்டுவனவாக அமைந்தபோது, முதல்வர் அவலை நினைத்துக் கொண்டு உரலை இடிக்கின்றார் என்று கருதினோம். சுமந்திரனை அரசியல் ரீதியாகச் சுரண்ட அவர் எடுக்கும் முயற்சிகள் தவறுதலாக சம்பந்தனையும் நெருடுகின்றன என்றே பலரும் நினைத்திருந்தனர்.

ஆனால், யாழ். மத்திய கல்லூரியில் அவர் ஆற்றிய உரை - நாவலரைப் போல தம்மை விட்டுக் கொடாத கொள்கைப் பிடிப்பாளர் போலவும், தீர்வு முயற்சியில் ஈடுபட்டிருக்கும் சம்பந்தன் சரியான அத்திவாரமில்லாத தீர்வுத் திட்டம் ஒன்றுக்கு இணங்கி இலங்கைத் தமிழரின் எதிர்காலத்தை அடியோடு நாசமாக்கப் போகின்றார் என்ற தொனி வெளிப்படத்தக்கதாக பூடகமாக அர்த்தம் பொதிந்தும் - அவர் ஆற்றிய உரை - அவர் சம்பந்தனையும் சேர்த்துத்தான் இலக்கு வைத்துச் செயற்படுகின்றார் என்பதைத் துலாம்பரமாக்கியுள்ளது.

"தேசியம், சுயநிர்ணயம், தாயகம், தன்னாட்சி, வடக்கு - கிழக்கு இணைப்பு என்ற அடிப்படைகளைக் கூறிவிட்டு ஒற்றையாட்சியின் கீழ் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவது என்பதை ஏற்றுக்கொள்வது எத்தகைய விபரீதங்களை ஏற்படுத்தும் என்று நாங்கள் புரிந்து கொள்ள வேண்டும்." - எனக் கூறுகின்றார் முதல்வர் ஐயா.

சம்பந்தனோ, சுமந்திரனோ எது தீர்வு, அத்தீர்வு 13 ஆவது திருத்தத்துக்கு உட்பட்டதா, இல்லையா, ஒற்றையாட்சியா, சமஷ்டியா, பிராந்தியங்களின் கூட்டா என்று எது குறித்தும் தீர்க்கமான முடிவை எடுத்து அறிவித்தனர் என்று இல்லை.

13 அவது திருத்தத்தின் கீழான பொலிஸ், காணி அதிகாரங்கள், இரண்டாவது அவையான செனட் மூலம் மாகாணங்களின் உரிமைகள் மீளப் பறிக்க முடியாத கடப்பாடு என்பவை பற்றியெல்லாம் கூடப் பேசப்படுகின்றன.

சரியோ, பிழையோ இலங்கை - இந்திய ஒப்பந்தம் என்ற தீர்வுக்கான அத்திவாரத்தில் கட்டியெழுப்பட்ட மாகாண சபைக்குள் முதல்வர் என்ற கதிரையில் இருந்தபடிதான், விக்னேஸ்வரன் ஐயா பேசிக்கொண்டிருக்கின்றார். அந்தக் கட்டடத்தின் அத்திவாரம் உளுத்துப் போனது என்பது வெளிப்படையானது. இது அவருக்கும் தெரியும்.

அவர் இருக்கும் கதிரைக்கு - பதவிக்கு - பொலிஸ், காணி அதிகாரம் என்பன வந்தால் அந்தக் கட்டடத்தின் அத்திவாரம் இன்னும் பலமடையுமே தவிர, அவர் குறிப்பிடுகின்றமை போல அது அத்திவாரத்தின் அடிப்படையை இல்லாமலாக்கிவிடாது என்பதை, உறுதியுடன் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

"...என்னை ஓரம் கட்டி அரசியலில் இருந்து விரட்டிவிட பல நடவடிக்கை எடுக்கப்படுகின்றன. சிலர் சதிகள் சறுக்கியதும் சவால்களில் ஈடுபட முன்வந்துள்ளார்கள்..." - என்று முதல்வர் குறிப்பிடுகின்றமை கடந்த சில நாள்களாக 'காலைக்கதிர்' நாளிதழிலும் இன்னும் சில ஊடகங்களிலும் வெளியான செய்திகளின் தொடர் பிரதிபலிப்பு என்றே கூறவேண்டும்.

அந்த ஓரம் கட்டும் முயற்சிகள், சதிகள், சவால்கள் முதல்வரைக் குழப்பிவிட்டன போலும்.

தீர்வு எத்தனங்கள் என்ற வகையில் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் எடுக்கும் முயற்சிகள் குறித்து, சம்பந்தனினால் அரசியலுக்கும், முதல்வர் பதவிக்கும் கூட்டி வரப்பட்டவர் என்ற ரீதியிலும் - சம்பந்தனின் தலைமையில் செயற்படும் கூட்டமைப்பின் ஒரு மாகாண முதல்வர் என்ற ரீதியிலும் - சம்பந்தனிடமே முதல்வர் முதலில் அதுபற்றிக் கேட்டறிந்து உறுதி செய்து, தீர்மானிக்க வேண்டும். அதுவே காத்திரமான செயற்பாடாக எழுந்து நிற்க வாய்ப்புண்டு.

இந்திய தூதுவரின் இரவு விருந்தில் அருகில் இருந்த - கூட்டமைப்பின் 'எதிரிக் கட்சியான' ஈ.பி.டி.பியின் தலைவர் டக்ளஸ் தேவானந்தா எம்.பி.கூறிய விடயங்களை விழுங்கிக் கொண்டு, அதுதான் தீர்வுக்கான அடிப்படை என்று தமக்குள் வியாக்கியானம் செய்து அதனடிப்படையில் முதல்வர் கருத்து வெளியிடுவது அவரது பதவி நிலைக்குப் பொருத்தமற்றது.

உண்மையில் ஓரம் கட்டும் முயற்சிகள், சதிகள், சவால்களினால் முதல்வர் குழம்பிப் போய்விட்டார் என்பது அப்பட்டமாகத் தெரிகிறது.

ஓட்டப் பந்தயத்தில் சூட்டுக்கு முன் பாய்வது - beat the gun - போல முதல்வர் தீர்வு முயற்சியின் அடிப்படைகூட வெளிவர முன்னர் அது குறித்து அவர் தற்போது வெளியிட்ட கருத்து வெளிப்படுத்தி நிற்கிறது.

# ரூ. 2 கோடி லஞ்சம் தந்து அரச சாட்சியாக தன்னை மாற்ற முயன்றாராம் சுவிஸ் குமார்

## வித்தியா கொலை வழக்கில் இப்ரான் என்பவர் சாட்சியம்

(எஸ்.நிதர்ஷன்)

அரச தரப்பு சாட்சியாக தன்னை மாற்ற குற்றப் புலனாய்வுத் துறை அதிகாரி உதவினால் அவருக்கு தான் 2 கோடி ரூபா பணம் வழங்கத்தயார் என தன்னிடம் சுவிஸ்குமார் தெரிவித்தார் என ஆறாவது சாட்சியான முஹமட் இப்ரான் என்பவர்'ட்ரயல் – அட்பார்' நீதிமன்ற விசாரணையில் சாட்சியம் அளித்தார்.

புங்குடுதீவு மாணவி வித்தியா கொலை வழக்கு விசாரணைகளின் மூன்றாம் நாள் சாட்சியப் பதிவுகள் நேற்று வெள்ளிக்கிழமை யாழ்.நீதிமன்றக் கட்டடத் தொகுதியின் இரண்டாம் மாடியில் மேல் நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசிமகேந்திரன் தலைமையில் மேல் நீதிமன்ற நீதிபதிகள் அன்னலிங்கம் பிரேமசங்கர் மற்றும் மாணிக்கவாசகர் இளஞ்செழியன் ஆகி யோர் முன்னிலையில் நடை பெற்றது. அப்போதே சாட்சி மேற்கண்டவாறு கூறினார்.

பிரதி சொலிஸ்டர் ஜெனரல் வழக்கை நெறிப்படுத்தினார்.

6 ஆவது சாட்சியும் எதிரியான சுவிஸ்குமாருடன் சிறையில் தடுத்து வைக்கப்பட்டு இருந்தவருமான முஹமட் இப்ரான் என்பவர் சாட்சியம் அளித்தார். அப்போது அவர் கூறியவை வருமாறு:–

நான் கணனி மென்பொருள் பொறியியல் துறை சார்ந்தவன். 2014ஆம் ஆண்டு கால பகுதியில் எனது வங்கி அட்டையை பிறிதொருவருக்கு வழங்கி இருந்தேன். அவர் அதனைப் பாவித்து பண மோசடியில் ஈடுபட்டு இருந்தார். அந்த வங்கி அட்டைக்கு உரியவன் நான் என்பதனால் எனக்கு எதிராக கொழும்பு கோட்டை நீதிமன்றம் , புத்தளம் நீதிமன்றம் மற்றும் வவுனியா நீதிமன்றில் 11 வழக்குகள் உள்ளன. அவையனைத்தும் நிதி மோசடி வழக்குகள். மொத்தமாக 13 இலட்சரூபா நிதி மோசடி செய்தேன் என்பதே என் மீதான வழக்குகள்.

எனக்கு கணனித் துறையில் ஆர்வம் இருந்ததினால் அது சார்ந்து கற்று இருந்தேன். மென்பொருட்களைப் பயன்படுத்தியும் நேரடியாகவும் பிறிதொருவரின் கணனியை என்னால் 'ஹக்' செய்ய முடியும். அதில் எனக்கு அனுபவம் நிறைய உண்டு.

அதேபோன்று தொலைபேசியில் அழிக்கப்பட்ட தரவுகளை என்னால் மீள எடுக்க முடியும். அதற்கான மென்பொருள் ஒன்றையும் நான் தயாரித்து உள்ளேன்.

வவுனியா நீதிமன்றில் நடைபெறும் வழக்கு தவணைக்காக என்னை வவுனியா சிறைச்சாலையில் தடுத்து வைத்து இருந்தார்கள். அந்த கால பகுதியிலையே சுவிஸ்குமாரை எனக்கு தெரியும்.

வவுனியா சிறைச்சாலையில் ஒரு நாள் மருத்துவ பரிசோதனைக்காக மருத்துவர்கள் சிறைச்சாலைக்கு வந்து இருந்தார்கள். அப்போது அறையில் வித்தியா வழக்குடன் சம்பந்தப்பட்ட நபர்களிடம் குற்றபுலனாய்வுத் துறையினர் வாக்கு மூலத்தைப் பெற்றுக்கொண்டு இருந்தார்கள்.

நிஷாந்த சில்வாவுடன் வந்த ஏனைய குற்ற புலனாய்வுதுறையினர் வாக்கு மூலங்களை பதிவு செய்து கொண்டு இருந்தனர். நிஷாந்த சில்வா அவ்விடத்தில் நின்றார்.

அவர் தான் என்னுடைய வழக்கு தொடர்பிலும் விசாரணை செய்தவர். அதனால் நான்ஒருகணனிமென்பொருள் பொறியியலாளன் என் பது தெரியும். அதனால் என் னிடம், 'தொலைபேசியில்அளிக்கப்பட்ட தரவுகளைமீளஎடுக்கமுடியுமா?' எனக் கேட்டார். அதற்கு நான் 'ஆம்' என்றேன். அது அங்கே வாக்குமூலம் கொடுக்க இருந்த சுவிஸ்குமார் கேட்டிருக்க வேண்டும்.

அதன் பின்னர் சுவிஸ்குமார் என்னை சந்தித்து 'தொலைபேசியில் அழிக்கப்பட்ட தரவுகளை மீள எடுக்க முடியுமா?' எனக் கேட்டார். நான் 'ஆம்' என்றேன். அப்போது, 'மென்பொருளைப் பயன்படுத்தி அழிக்கப்பட்ட தரவுகளையும் எடுக்க முடியுமா?' எனக் கேட்டார். அதற்கும் நான், 'ஆம் என்னால் முடியும்' என்றேன்.

சாதரணமாக தொலைபேசி பாவிப்பவர்கள் அதில் உள்ள தரவுகளை அழிப்பது என்றால் சாதரணமாக தான் அழிப்பார்கள். மென்பொருள் ஊடாக அழிப்பது என்றால் அதில் ஏதோ பிரச்சினை இருப்பதாகப் புரிந்து கொண்டேன்.

சுவிஸ்குமார் என்னுடன் இது தொடர்பில் கதைத்த மறுநாள் கொழும்பு கோட்டை நீதிமன்றில் உள்ள வழக்குக்காக நான் மகஸீன் சிறைக்கு மாற்றப்பட்டுவிட்டேன்.

மீண்டும் நான் வவுனியா சிறைக்கு அழைத்து வரப்பட்ட போது என்னைச் சந்தித்த சுவிஸ்குமார் 'ஏன் போன தவணைக்கு அழைத்து வரவில்லை?' என கேட்டார்.

அதற்கு நான், 'கொழும்பில் பிறிதொரு வழக்கு இருந்தமையால் அழைத்து வரவில்லை' எனக் கூறினேன்.

'வழக்குக்காகத்தான் வரவில்லையா அல்லது குற்றத் தடுப்பு புலனாய்வுத்துறையினரை சந்திக்கப் போனாயா?' என சுவிஸ்குமார் கேட்டார். அப்போது நான், 'அவர்களை சந்தித்து விட்டுத் தான் வருகிறேன். அவ ர் கள் உங்கள் தொலைபேசி பற்றி என்னுடன் கதைத்தார்கள்' என சும்மா சொன்னேன்.

அதற்கு சுவிஸ் குமார், 'உன்னைத்தனியாகச்சந்திக்கவேண்டும். நான் சந்திப்பது ஏனைய 8 பேருக்கும்தெரியக்கூடாது'எனக் கூறி மறுநாள் தனியாகச் சந்தித்தார்.

அப்போது, 'நிஷாந்த சில்வாவின் பலவீனம் என்ன' எனக் கேட்டார். அதற்கு நான், 'அது தெரியாது. உங்களுக்கு அவரிடம் என்ன வேண்டும்'? எனக் கேட்டேன்.

'வித்தியா வழக்கில் நாங்கள் மூன்று பேர் சகோதர்கள். நாம் அரசசாட்சியாக மாற வேண்டும். அதற்கு நிஷாந்த சில்வாவுடன் கதைத்து ஏற்பாடு செய்துதா' என சுவிஸ் குமார் கேட்டார்.

அவ்வாறு செய்தால் நிஷாந்த சில்வாவுக்கு என்ன கொடுப்பீர்கள் எனக் கேட்டேன். '2 கோடி ரூபாய் பணம் கொடுக்க முடியும்' எனத் தெரிவித்தார்.

இவ்வாறு நாம் பேசிக் கொண்டு இருந்த வேளை சுவிஸ் குமாரை யாரோ சந்திக்க சிறைச்சாலைக்கு வந்து இருக்கின்றார்கள் என தெரிவித்து சுவிஸ் குமார் சென்று விட்டார்.

மீண்டும் என்னைச் சந்தித்த சுவிஸ்குமார் 'மூன்று பேரை அரசசாட்சியாக மாற்ற முடியாது. ஒருவரைத் தான் மாற்ற முடியும் எனத் தெரிவித்து நிஷாந்த சில்வாவுடன் கதைத்து தன்னை மட்டும் அரச சாட்சியாக மாற்றி விடும்படி கேட்டார். இந்த தகவல் ஏனைய எட்டு பேருக்கும் தெரிய கூடாது என என்னிடம் கூறினார்.

அதன் பின்னர் மறுநாள் என்னை மகசீன் சிறைச்சாலைக்கு அழைத்து சென்று விட்டனர். பின்னர் சிறிது காலத்தில் நான் மீண்டும் வவுனியா சிறைச்சாலைக்கு கொண்டு வந்த போது மீண்டும் சுவிஸ் குமாரை சந்தித்தேன். நிஷாந்த சில்வாவுடன் கதைப்பது என்றால் எனக்கு காரணம் தெரிய வேண்டும் என சுவிஸ்குமாருக்குச் சொன்னேன்.

அப்போது சுவிஸ்குமார் சொன்னார், 'நான் சுவிஸ் நாட்டில் இருந்தேன். அங்குள்ள மாபியா குழு ஒன்று தெற்காசிய நாட்டு இளம் பெண் ஒருவரை கூட்டுப் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தி படுகொலை செய்வததை வீடியோ எடுத்து தருமாறு என்னுடன் ஒப்பந்தம் செய்திருந்தனர்.

'அதனை தொடர்ந்து நான் இலங்கையில் உள்ள ஒருவருடன் தொடர்பு கொண்டு அது பற்றி கூறினேன். 20 வயதுக்கு உட்பட்ட பெண் பிள்ளை ஒருவர் தேவை என சொன்னேன். அவர் ஒருபெண்ணின் புகைப்படத்தை எனக்கு அனுப்பி வைத் தார். அந்த பெண் 'ஓகே' என்றேன்' என சுவிஸ்குமார் என்னிடம் கூறினார்.

(18 ஆம் பக்கம் பார்க்க)

### ஆரோக்கிய வாழ்வுக்கான உணவுத் தட்டு மாதிரி

- உணவுத் தட்டின் அரைப் பங்கிற்கு மாச்சத் தான உணவுகள் வேறு, உருளைக்கிழங்கு, மரவள்ளி, பலாக்காய், அரிசிமா தயாரிப்புக்கள் போன்றவற்றை எடுத்துக் கொள்வோம்.
- அதன் 2/3 பங்கிற்கு மரக்கறி வகை, பச்சை இலை வகைகளை எடுத்துக் கொள்வோம்.
- அதன் 1/3 பங்கிற்கு தாவர, விலங்கு புரதங்களான, இறைச்சி, மீன், கருவாடு, முட்டை, நெத்தலி, பயறு, பருப்பு, சோயா போன்றவற்றில் சிலவற்றைச் சேர்த்துக் கொள்வோம்.



தகவல்:- சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை. யாழ்.மாநகரசபை.

### நாளை

02.07.2017
ஞாயிற்றுக்கிழமை

நட்சத்திரம் : சித்திரை பி.இ. 3.44 வரை
திதி : நவமி பி.இ. 12.02 வரை

சுபநேரம் : 8.56 – 10.26 வரை
இராகுகாலம் : 4.26 – 5.56 வரை

# உமாஓயா திட்டத்தைத் தொடர்ந்திருந்தால் தற்போது பாதிப்புகள் ஏற்பட்டிருக்கா!



## மஹிந்த ராஜபக்ஷ கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 01

உமாஓயா திட்டம் நிறுத் தப்படாமல் தொடர்ந்தும் முன் னெடுக்கப்பட்டிருந்தால் பாதிப்புகள் எவையும் ஏற்பட் டிருக்காது என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர் கருத்து வெளியிடுகையி லேயே அவர் இவ்வாறு கூறி யுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வரு மாறு:-

உமாஓயா திட்டத்தை எமது அரசுதான் ஆரம்பித்தது. அது உரியவகையில் முன்னெடுக் கப்பட்டது. ஆட்சிமாற்றத்தின் பின்னர் அது தற்காலிகமாக நிறுத்தப்பட்டது.

இதனால், தான் வெடிப்புகள், ஏனைய பிரச்சினைகள் உரு வாகின. பணிகள் தொடர்ந்தும் இடம்பெற்றிருந்தால் இவ் வாறான நிலைமை ஏற்பட்டி ருக்காது.

எனினும், தற்போது அந்த விடயத்தில் வேறொரு பிரச் சினை புகுத்தப்பட்டுள்ளது.

அதேவேளை, பல்கலைக் கழக மாணவர்கள் மீதான பொலிஸாரின் தாக்குதலைக் கடுமையாகக் கண்டிக்கிறேன். அரசு அதிகாரத்தைத் தவறா கப் பயன்படுத்துகிறது.இன்று சுதந்திரம் பறிக்கப்பட்டுள்ளது.

மேலும், மக்கள் பயங்கர மான பிரச்சினைகளை எதிர் கொண்டுள்ளனர்.

பேஸ்புக்கூட தடைசெய்யப் படுகின்றது என்றும் இல்லாத வகையில் பிரச்சினைகள் தலை விரித்தாடுகின்றன என் றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

**அமைச்சரவை உபகுழு பண்டாரவளைசெல்கிறது**

இதேவேளை, உமாஓயா திட்டத்தால் பண்டாரவளை பிரதேச மக்களுக்கு ஏற்பட் டுள்ள இடர்கள் பற்றியும், அவற்றுக்கான தீர்வுகள் பற் றியும் ஆராய ஜனாதிபதி மைத் திரிபால சிறிசேன தலைமை யிலான அமைச்சரவை உப குழு ஒன்று நியமிக்கப்பட் டுள்ளது.

இந்தக் குழுவில் மகாவலி இராஜாங்க அமைச்சர், கடற் றொழில் மற்றும் நீர்வளத் துறை அமைச்சர் மஹிந்த அமரவீர, மாநகரங்கள் மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க, நீர்ப்பாசன மற்றும் நீர் முகாமைத்துவ அமைச்சர் விஜித் விஜயமுனி ஆகிய மூவரும் அங்கம் வகிக்கின்ற னர்.

இந்தக் குழுவினர் எதிர்வரும் திங்கட்கிழமை பண்டார வளைக்கு விஜயம்செய்து நிலைமையை நேரில் ஆராய வுள்ளனர்.

அதன்பின்னர்ஜனாதிபதிக்கு அறிக்கையொன்றை சமர்ப்பிப் பர் எனத் தெரியவருகின்றது.

# சமூக ஊடகங்களே நல்லிணக்கத்துக்கு முட்டுக்கட்டை!



## ஜனாதிபதி மைத்திரி கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 01

நாட்டில் தேசிய ஒற்றுமை மற்றும் மத நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதற்கு முகநூல் மற்றும் சமூக ஊடகங்கள் முட் டுக்கட்டையாக இருக்கின்றன என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குற்றம் சாட்டியுள்ளார்.

நுவரெலியாவில் நேற்றுமுன் தினம் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள் ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வரு மாறு:-

இந்த ஊடகங்களைப் பயன் படுத்தி, நாட்டில் அமைதியற்ற நிலையைத் தோற்றுவிக்க அடிப்படைவாதக் குழுக்கள் முயற்சிக்கின்றன.

இந்த நிலைமையை அனை வரும் விளங்கிக் கொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இன, மத உணர்வுகளைத் தூண்டும் வகையிலும், வெறுப்புணர்வைத் தூண்டும் வகையிலும் சமூக ஊடகங் களைப் பயன்படுத்துவோர் மீதுநடவடிக்கைஎடுக்கப்படும் என்று பொலிஸார் அண்மை யில் எச்சரித்திருந்தனர் இந் நிலையில், ஜனாதிபதி மைத் திரியின் இந்தக் கருத்து வெளி யாகியுள்ளமை குறிப்பிடத்தக் கது.

# ஐ.எஸ். அமைப்பின் இலங்கையர் பலி!

கொழும்பு, ஜூலை 01

ஐ.எஸ். அமைப்பில் இணைந்து கொண்ட மற்றுமோர் இலங்கையர் கொல்லப்பட்டுள்ளார்.

சிரியாவில் அமெரிக்க வான்படையினர்நடத்திய தாக்குதல்களில் அஹமட் தாஜூடீன் என்ற இலங் கையர் கொல்லப்பட்டுள் ளார்.

சிரியாவின் ரக்கா நகரில் இந்தத் தாக்குதல் சம்பவம் மேற்கொள்ளப்பட்டுள் ளது.

கொழும்பு சுற்றுலா விடுதி ஒன்றில் பணியாற் றிய இவர், துருக்கியின் ஊடாக சிரியாவிற்குள் பிர வேசித்துள்ளார்.

இதற்கு முன்னதாக கேகாலையைச் சேர்ந்த ஆசிரியர்ஒருவரும்ஐ.எஸ் தீவிரவாத இயக்கத்தின் சார்பில் போராடி உயிரி ழந்திருந்தார். ஐ.எஸ். அமைப்பில் இணைந்து கொண்டுள்ள இலங்கையர் களின் எண்ணிக்கை எவ் வளவு என்பது பற்றிய விவரங்கள் இது வரையில் வெளியிடப்பட வில்லை.

# பெற்றோர் - ஆசிரியர் மோதல் : பாடசாலைக்கு பொலிஸ் பாதுகாப்பு!

நுவரெலியா கல்வி வலயத் திற்குட்பட்ட, திம்புள்ள பத் தனை பொலிஸ் பிரிவுக்குட் பட்ட கொட்டகலை பகுதி யில் உள்ள பாடசாலை ஒன் றில், பெற்றோருக்கும், ஆசிரி யருக்கும் இடையில் ஏற்பட்ட மோதல் சம்பவத்தால், பாட சாலைக்கு பொலிஸ் பாது காப்பு வழங்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின் றது.

நேற்று முன்தினம் இந்தப் பாடசாலையின் ஆசிரியர் ஒருவர் மாணவியை இரும்பு கம்பியால் தாக்கியுள்ளார் எனக் கூறப்படுகிறது.

இது தொடர்பில் பாடசாலை நிர்வாகத்திடம் நேற்று முறைப்பாடு செய்வதற்கு சென்ற பெற்றோருக்கும் அந்த ஆசிரியருக்கும் முறு கல் நிலைமை உருவாகியுள் ளது.

இதனைத் தொடர்ந்து ஆசி ரியரும் பெற்றோர்களும் அங் கிருந்த மாணவர்கள் சிலரும் கைகலப்பில் ஈடுபட்டுள் ளனர்.

இதன்போது ஆசிரியர் ஒரு வர் காயமடைந்து கொட்ட கலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தால் அப் பகுதியில் பதற்றம் ஏற்பட் டுள்ளதோடு, அந்தப் பாட சாலைக்கு பலத்த பொலிஸ் பாதுகாப்பும் வழங்கப்பட்டுள் ளது எனவும் தெரிவிக்கப் படுகின்றது.

# ஹட்டன் ஹைலண்ட்ஸ் கல்லூரிக்கு பத்து ஏக்கர் காணி கையளிப்பு!

## ஆண்டு விழாவில் கலந்துகொண்டு ஆவணங்களையும் வழங்கினார் மைத்திரி

கொழும்பு, ஜூலை 01

ஹட்டன் கல்வி வலயத்துக் குட்பட்ட அட்டன்ஹைலண்ஸ் கல்லூரியின் 125 ஆவது ஆண்டு விழாவும், பரிசளிப்பு நிகழ்வும் கல்லூரியின் அதிபர் ஆர். ஸ்ரீதரன் தலைமையில் இடம்பெற்றன.

ஹட்டன் டி.கே.டபிள்யூ. கலாசார மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இந்த வைபவத்தில் பிரதம அதிதி யாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கலந்துகொண்டுள் ளார். இதன்போது கல்லூரிக்கு புதிய கட்டடம் அமைப்பதற் கான 10 ஏக்கர் காணியின் ஆவ ணங்களையும் ஜனாதிபதி கையளித்துள்ளார்.

அத்தோடு, கல்லூரியின்



125 ஆவது ஆண்டைச்சிறப் பிக்கும் முகமாக சிறப்பு தபால் முத்திரை வெளியீடும் இடம் பெற்றதோடு, கல்லூரியின் சஞ்சிகை வெளியீடும் இடம் பெற்றுள்ளது. (க)

# அரசின் தீர்வை அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும்: துமிந்த திஸாநாயக்க!

கொழும்பு, ஜூலை 01

மாலபே தனியார் மருத்துவ கல்லூரி தொடர்பில் அரசின் தீர்வுத் திட்டத்தையே அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் துமிந்த திஸாநாயக்க தெரிவித் துள்ளார்.

கொழும்பு ஊடகமொன்று எழுப்பிய கேள்விக்குப் பதில ளித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர்மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மாலபே தனியார் மருத்துவக் கல்லூரி விவகாரத்தில் ஜனா திபதியும் அரசும் வழங்கும் தீர்வுத் திட்டத்தை ஏற்றுக் கொள்வதைத்தவிரவேறு மாற்று வழி அரச மருத்துவ அதிகாரி கள் சங்கத்துக்குக் கிடையாது.

நல்ல விடயங்களைப் பிள் ளைகளுக்கு வழங்குவதே அர சின் நோக்கமாக அமைந்துள் ளது.

அப்பாவி நோயாளிகளைப் பணயக் கைதிகளாகப் பயன் படுத்தி மருத்துவ அதிகாரிகள் அரசுக்கு சவால் விடுத்து வரு கின்றனர்.

இது மிகவும் வருந்தத்தக்க ஒரு விடயமாகவே நோக்கப் படவேண்டும்.

பேச்சு மூலம் தீர்வுத் திட்டங் களை வழங்குவதற்கு அர சின் கதவுகள் திறந்தே காணப் படுகின்றன என அவர் தெரி வித்துள்ளார்.

# மாகாணங்களுக்கு உரிய அதிகாரம், நிதியை வழங்கினால்தான் முறையான அபிவிருத்தி

## கிழக்கு முதலமைச்சர் கூறுகிறார்

மட்டக்களப்பு,ஜூலை 01

மாகாணங்களுக்கு உரிய நிதி மற்றும் அதிகாரம் என்பன வழங்கப்பட்டால் மட்டுமே முறையான அபிவிருத்திகள் மக்களைச் சென்றடையும்.

-இவ்வாறு கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் தெரிவித்தார்.

மட்டக்களப்பு தர்மபுரம் பகுதியில் பல்லின கடல்வாழ் செட்டை மீன் குஞ்சு உற்பத்தி நிலையத்தின் திறப்பு விழா நேற்றுமுன்தினம் வியாழக் கிழமை இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித் தவை வருமாறு:-

மாகாணத்தில் உள்ள மக்க ளுக்கு உரிய நன்மைகள் கிடைக்க வேண்டுமாயின், அரசின் நலத்திட்டங்கள் மாகாண சபைகளின் மூலமா கவே மேற்கொள்ளப்பட வேண் டும். அப்போதுதான் மக்களை அவை முழுமையாகச் சென் றடையும். மீனவர்களைப் பொறுத்தவரை வடக்கு மற் றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள மீனவர்களின் பிரச்சி னைகள் வேறாகவும், தெற்கில் உள்ள மீனவர்களின் பிரச்சி னைகள் வேறாகவும் உள்ளன.

ஆகவே, அவற்றை அதன் அடிப் படை காரணங்களுடன் அடையாளங்கண்டு அதற்கு முழுமையான தீர்வை வழங்கக் கூடிய ஆற்றல் மாகாணசபை களில் உள்ள அமைச்சுக்க ளுக்கே உள்ளன.



மாகாணங்களில் ஒவ்வொரு துறைகளுக்குமான அமைச் சுக்கள் மற்றும் திணைக்களங் கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ள போதிலும், அதற்கான நிதிகள் முறையாக வழங்கப்பட வில்லை. இதனால், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங் களின் அபிவிருத்தி பல சவால் களுக்கு மத்தியிலேயே முன் னெடுக்கப்படுகின்றன.

அரசமைப்பின் பிரகாரம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங் கள் முறையாக அமுல்படுத்தப் படாமையே இதற்குக் காரண மாகும்.-என்றார். (ச)

# கிழக்கு மாகாண சுகாதாரத்துறையை மத்திய அரசு புறக்கணிக்கின்றதா?



## சந்தேகம் எழுகிறது என்கிறார் மாகாண அமைச்சர் முஹமட் நஸீர்

பெரியகல்லாறு, ஜூலை 01

கிழக்கு மாகாண சுகாதாரத் துறையை மத்திய அரசு புறக்க ணித்து வருகின்றதா என்ற சந் தேகம் எழுகிறது.

-இவ்வாறு அந்த மாகாண சுகா தர அமைச்சர் ஏ.எல். முஹமட் நஸீர் ஆதங்கம் வெளியிட்டுள்ளார்.

மட்டக்களப்பு பெரியகல்லாறு பிரதேச வைத்தியசாலையில் நில வும் குறைபாடுகளைக் கேட்டறி யும் விசேடகலந்துரையாடல் வைத் தியசாலைக் கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்று கையிலேயே அவர் மேற்கண்ட வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கிழக்கு மாகாணத்தின் சுகாதா ரத்துறைக்கு மத்திய அரசு இம் முறை ஒதுக்கிய நிதி போதாமல் உள்ளது. மேலும், இங்கு ஆளணிப் பற்றாக்குறையும் நிலவுகிறது. இதனால், இங்கு வாழ்கின்ற மக் கள் பல்வேறு பாதிப்புக்களை எதிர் நோக்குகின்றனர்.

பெரியகல்லாறு வைத்திய சாலைகளின் 3 முக்கிய பிரிவு கள் ஆளணிப் பற்றாக்குறையால் மூடப்பட்டுள்ளன.

இதனை உடனடியாகத் திறப் பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும், இடமாற் றங்களினால் ஏற்பட்ட இடப்பற் றாக்குறையை உடனடியாக நிவர்த்தி செய்யுமாறும் வலியு றுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மக்கள் குழம்பத் தேவையில்லை. இங் குள்ள வெளிநோயாளர் பிரிவுக் கான புதிய கட்டடம் ஒன்றைப் பெறுவதற்கான திட்டமிடல் தயா ரிக்கப்பட்டுள்ளது. அது மிகவிரை வில் அமுல்படுத்தப்பட்டு புதிய கட்டடம் ஒன்று அமைக்கப்படும். அதற்கான நடவடிக்கை எடுப்ப தற்காக விரிவான ஆராய்வு எதிர் வரும் சில நாள்களுக்குள் எமது திணைக்கள அதிகாரிகளுடன் இடம்பெறவுள்ளது.

இந்த வைத்தியசாலையில் மொத்தமாக 110 ஆளணிகள் இருந் தாலும் அதில் இன்னும் பலரை உள்வாங்குவதற்காக முகாமைத் துவப் பிரிவுக்கு அறிவிக்கப்பட் டுள்ளது. அதற்கான நடவடிக் கைகள் மிக விரைவில் மேற் கொள்ளப்பட உள்ளன.

வடமாகாணசபை போல் கிழக்கு மாகாணசபையில் எவ்வித முரண்பாடுகளும் இல்லை. முஸ் லிம் காங்கிரஸும், தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பும் இணைந்து ஒற்றுமையாக ஆட்சி செய்கின் றன. இன, மத, பிரதேச வேறுபாடு கள் இல்லாமல் இரு கட்சிகளும் பிரதான பங்களிப்புடன் செயற் பட்டு வருகின்றன.

விசேடமாக மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் திருகோண மலை ஆகிய மாவட்டங்களில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை ஊடாக அவர்களுக்குக் கீழ் உள்ள வைத்தியசாலைகளை அபிவி ருத்தி செய்யும் நோக்கில் பல வேலைத் திட்டங்களைக் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சு நடைமுறைப்படுத்தி வருகின் றது. -என்றார். (ச)







மட்டக்களப்பு செங்கலடி ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய 49 ஆவது வருடாந்த உற்ச வம் நேற்று வெள்ளிக்கிழமை தீ மிதிப்புடன் நிறைவு பெற்றது. பத்தர்கள் தீ மிதித்து தமது நேர்த்திக்கடன்களைச் செலுத்தியமையைப் படங்களில் காணலாம். (ச)

# முருக்கன்தீவு ஆற்றைக் கடக்க உதவும் இயந்திரப் படகுச் சேவை பாதிப்பு!

மட்டக்களப்பு கிண்ணையடியில் இருந்து முருக்கன்தீவுக்கு ஆற்றைக் கடக்கப் பயன்படுத்தப்படும் இயந்தி ரப் படகுச் சேவை ஒரு மாதமாக இயங்க வில்லை. இதனால், பாடசாலை மாணவர் கள் மற்றும் பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

பிரம்படித்தீவு மற்றும் சாராவெளி கிராமங்களைச் சேர்ந்த நூற்றுக் கணக் கான பொது மக்கள் தினமும் இந்தப் பாதை ஊடாகவே பயணம் செய்கின் றனர்.

கிண்ணியடி கிராமத் திலிருந்து முருக்கன்தீவு கிராமத்துக்குச் செல்வ தற்குச் சுமார் 300 மீற்றர் தூரம் ஆற் றைக் கடக்க வேண்டிய நிலை உள் ளது. மழை காலங்களில் ஆறு பெருக் கெடுத்து சுமார் 500 மீற்றர் வரை



கடக்க வேண்டிய நிலை ஏற்படும்.

கடந்தகாலங்களில் நீர்வழிப் போக்கு வரத்துக்கு இயந்திர படகுச் சேவை பயன்படுத்தப்பட்டு வந்தது. இந்த இயந்திரப் படகு இயங்காமையால் தற்போது 2 தோணிகளே சேவையில் ஈடுபடுகின்றன. இது தொடர்பில் உரிய அதிகாரிகளை நடவடிக்கை எடுக் குமாறு அந்தப் பகுதிவாழ் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# புல்மோட்டை பிரதேசத்தில் காட்டு யானை அட்டகாசம்!

திருகோணமலை, புல்மோட்டை பிரதேசத்தின் ஜின்னாபுரம் மற்றும் வீரன்தீவு போன்ற கிராமங்களில் தொடர்ச்சியாகக் காட்டு யானை உட் புகுந்து குடியிருப்புக்களைச் சேத மாக்கி வருகின்றது.

இதனால், மேற்படி குடியிருப்புகளில் உள்ள வீடுகள், பயன்தரு மரங்கள் பல நாசமாகி உள்ளன.

இந்தக் காட்டு யானையால் தினமும் உயிர் அச்சுறுத்தலை எதிர்நோக்கி யவாறே வாழ்ந்து வருகிறோம் என இங்கு வாழ்கின்ற மக்கள் கவலை தெரி வித்தனர்.

இந்த யானை பதவிசிரபுர பகுதியில் கடும் அட்டகாசம் புரிந்து வந்துள்ளது. இந்த நிலையில், அந்தக் கிராமத்தைச் சுற்றி யானைகள் பிரவேசிக்கலாம் வேலிகள் அமைக்கப் பட்டமையால், புல்மோட்டை பிர தேசத்தை நோக்கி வருகிறது.



மேலும், அட்டகாசம் செய்து வரும் மேற்படி காட்டு யானையை சரணால யத்துக்குக் கொண்டு செல்வதற்கு கொழும்பிலிருந்து 2 நாள்களுக்குள் சரணாலய அதிகாரிகளை வரவழைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என வன ஜீவராசி திணைக்களத்தின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ச)

# இலங்கையில் அமெரிக்காவின் கட்டுப்பாட்டில் பலத்த மின்சார சுற்றுவேலியுடன் இரகசிய தளம்!

## 400 ஏக்கர் நிலப்பரப்பில்!!





கொழும்பு, ஜூலை 01

அமெரிக்காவில் காணப்படும் மிக இரகசிய இடமான ஏரியா51 எனப்படும் பிரதேசம் மர்மமான ஓர் இடமாக வர்ணிக்கப்படுகின்றது.

இந்த இடத்திற்கு அனுமதியின்றி எவரும் நுழைய முடியாது. அதேவகையில் இலங்கையிலும் ஓர் இரகசிய இடம் அமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப்பகுதி சிலாபம் இரணவில பகுதியில் காணப்படுகின்றது. இந்த இடத்துக்கு பிரதேசவாசிகள் மட்டுமல்லாது வெளிநபர்கள்எவருக்கும் உட்செல்ல அனுமதி வழங்கப்படுவது இல்லை.

மேலும் இந்த இடம் ஆரம்பத்தில் 40 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்பட்டிருந்தது எனவும் பின்னர் இது 400 ஏக்கர் பரப்பளவாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது எனவும் கூறப்படுகின்றது.

இந்த இடத்தில் நடைபெறும் விடயங்கள் குறித்து செய்திகள் வெளிவருகின்றமை கிடையா. அமெரிக்காவின் முழுக் கட்டுப்பாட்டிலேயே இந்த பிரதேசம் இயங்குகிறது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

வாய்ஸ் ஒப் அமெரிக்கா (voice of america iranawila) என்று அடையாளப்படுத்தப்பட்டுள்ள இந்த மர்மப் பிரதேசத்தைச் சுற்றி பாதுகாப்புக்காக மின்சார வேலி பொருத்தப்பட்டுள்ளது.

அந்த வேலி சுமார் 33 ஆயிரம் வோல்ட் மின் அளவை கொண்டு அமைக்கப்பட்டுள்ளது என்றும் குறிப்பிடப்படுகின்றது.

இந்தப் பகுதிக்கு உள்ளே மிகப்பெரிய விமான ஓடுதளங்களும், விமானம் நிறுத்துவதற்கான இடங்களும், அமைக்கப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

அமெரிக்காவைச் சேர்ந்த பிரதான மூவரின் கட்டுப்பாட்டிலேயே இந்த இடம் இயங்கி வருகிறது என்றும் கூறப்படுகின்றது.

எனினும், இந்த இடத்தின் உள்ளே நடைபெறும் விடயங்கள் எவையும் வெளிப்படுத்தப்படுவதும் இல்லை எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையைத் தவிர இதே போன்று 14 நாடுகளில் அமெரிக்காவின் கட்டுப்பாட்டில் இவ்வாறான இடங்கள் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி: ஒரு கிலோ அரிசிக்கு 5 ரூபா வரி!

### அமைச்சர் ரிசாத் பதியுதீன் தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 01

வெளிநாடுகளிலிருந்து அரிசி இறக்குமதி செய்ய முழு அளவில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது என கைத்தொழில் வர்த்தக அமைச்சர் ரிசாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாட்டில் அரிசிக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு காரணமாக எல்லையற்ற அடிப்படையில் அரிசியை இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அரசின் கட்டுப்பாட்டு விலையின் அடிப்படையில் அரிசியை விற்பனை செய்ய அனைவருக்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோ அரிசிக்காக 5 ரூபா வரி அறவீடு செய்யப்பட உள்ளது.

அரசின் வாழ்க்கைச் செலவு குழுவின் தீர்மானத்துக்கு அமைய அரசும் ஒரு லட்சம் தொன் அரிசியை இறக்குமதி செய்வதற்காக விலைமனுக்களைக் கோரியுள்ளது.

இவ்வாறு இறக்குமதி செய்யப்படும் அனைத்து வகையிலான அரிசிகளும் பொரளை மருத்துவ விஞ்ஞான ஆய்வு கூடத்தாலும், சுங்கத் திணைக்களத்தாலும் விசேட ஆய்வுக்கு உட்படுத்தப்பட உள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# வீதியில் நடனமாடினார் நாமல்!



நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ வீதியில் நடனமாடும் காணொலி ஒன்று சமூக வலைத்தளங்களில் பரவிவருகின்றது.

நாமல் ராஜபக்ஷ அண்மையில் நிகழ்வு ஒன்றுக்கு சென்றுள்ளார். அதன்போது காவடி வாத்தியக்குழு ஒன்றுடன் சேர்ந்து மகிழ்ச்சியாக நடனமாடி உள்ளார்.

இந்தக் காணொலி தற்போது சமூகவலைத் தளங்களில் வைரலாக பரவிவருவதோடு பல்வேறு விதமான விமர்சனங்களையும் அது எழுப்பியுள்ளது எனக் கூறப்படுகின்றது.

தந்தையின் ஆட்சிக்கவிழ்ப்பிலும், மகன் வீதியில் குத்தாட்டத்திலும் ஈடுபட்டுள்ளார் எனவும் விமர்சகர்கள் தெரிவித்துள்ளனர்.

அண்மைக்காலமாக நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ பொதுமக்களோடு இணைந்து கூட்டு எதிரணிக்கு ஆதரவான பல்வேறு வித மான செயற்பாடுகளைச் செய்து கொண்டுவருகின்றார் என்பதும் சுட்டிக்காட்டப்படத்தக்கது. (க)

# இலங்கைக்கு போர்க் கப்பல்களை கடனுக்கு விற்க ரஷ்யா முயற்சி!



கொழும்பு, ஜூலை 01

இலங்கைக்கு ஜிபார்ட் வகை போர்க்கப்பல்களை விற்பனை செய்வது தொடர்பாக இலங்கை அரசுடன் ரஷ்யா பேச்சுக்களை நடத்தி வருகிறது என ரஷ்யாவின் இராணுவ - தொழில்நுட்ப ஒத்துழைப்புக்கான சமஷ்டி சேவை தெரிவித்துள்ளது.

ஜிபார்ட் வகையைச் சேர்ந்த 5.1 போர்க்கப்பல்களை அரசுகளுக்கு இடையிலான உடன்பாட்டின் கீழ் ஏற்றுமதி கடன் திட்ட அடிப்படையில், இலங்கைக்கு வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது என ரஷ்யாவின்இராணுவ - தொழில்நுட்ப ஒத்துழைப்புக்கான சமஷ்டி சேவையின் பெண் பேச்சாளர் மரியா வொரொப்யேவா தெரிவித்துள்ளார்.

ரஷ்ய நிதி அமைச்சு உள்ளிட்ட ரஷ்ய அரசே இந்த விவகாரத்தைக் கையாளும். என்றும் அவர் கூறியுள்ளார்.

இந்தத் தகவலை ரஷ்யாவின் ஸ்புட்னிக் நாளிதழ் நேற்று முன்தினம் வெளியிட்டுள்ளது.

ஏற்கனவே, இலங்கை கடற்படைக்கு ரஷ்யாவிடம்ஜிபார்ட் வகை போர்க்கப்பல் கொள்வனவு செய்யப்படவுள்ளது எனச் செய்திகள் வெளியாகியிருந்தன.

அப்போது இலங்கை அரசு அதனை நிராகரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஜிபார்ட் வகை போர்க்கப்பல்கள் எதிரி விமானங்கள், கப்பல்கள், நீர்மூழ்கிகளை தடுத்துத் தாக்கும் வல்லமை பெற்றவையாகும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# மஹிந்த அணி போராட்டம்!

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் நிறைவடைவதை யடுத்து அரசுக்கு எதிரான கடுமையான போராட்டத்தை முன்னெடுக்க மஹிந்த அணியினர் திட்டமிட்டிருக்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கான கலந்துரையாடல்கள் பொது எதிரணியின் உயர் மட்டத்தில் இப்போது நடந்து வருகின்றது என பொது எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் டீசொய்சா குறிப்பிட்டுள்ளார். மேலும், தங்களது எதிர்ப்புப் போராட்டத்துக்கு பல்வேறு தரப்பு களிலிருந்தும் அமோக ஆதரவு கிடைத்திருக்கின்றது எனவும் அவர் கூறியுள்ளார்.

## பிலியந்தலை சூட்டுச் சம்பவம்: சந்தேகத்தில் மேலும் 2 பேர் கைது

பிலியந்தலை பிரதேசத்தில்பொலிஸ்போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகம் தொடர்பில் மேலும் 2 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். கெஸ்பேவ மற்றும் பிலியந்தலை பிரதேசங்களில் வைத்து அந்தச் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். மனித கொலையை மேற்கொள்வதற்காக சதித் திட்டம் தீட்டிய குற்றச்சாட்டின் பேரில் இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மிரிஹான விசேட குற்ற தடுப்பு பிரிவு அதிகாரிகளால் அந்தச் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டு மீரிஹானபொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

சந்தேக நபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் துப்பாக்கி பிரயோகத்தை மேற்கொள்வதற்கு பயன்படுத்தியுள்ள துப் பாக்கி, சிற்றூர்ந்து மற்றும் பாரவூர்தி ஒன்றும் மீட்கப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபர்கள் கெஸ்பேவ நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத் தப்படவுள்ளனர்.

கடந்த மே மாதம் 9 ஆம் திகதி மேற்படி துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத் தக்கது.(எ)

# ஹலால் சான்றிதழுக்கு அறவிடும் நிதி ஐ.எஸ்ஸுக்கு செல்கிறது



### அரசு விசாரணை நடத்த வேண்டும் என்கின்றது பொது பலசேனா

கொழும்பு, ஜுலை 01

ஹலால் சான்றிதழ் வழங்குவதற்கு உலமாசபை கட்டணம் அறவிட்டு அந்தப் பணத்தை தீவிரவாதிகளுக்கு வழங்கியதைப் போன்று தற்போது ஹலால் சான்றிதழ் வழங்கும் நிறுவனமும்அறவிடும்ஹலால் சான்றிதழுக்கான கட்டண நிதி ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றது.

அது தொடர்பாக அரசு உடனடியாக விசாரணைகளை நடத்த வேண்டும் என்று பொதுபலசேனா அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

ராஜகிரியவிலுள்ள பொது பலசேனாவின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடக மாநாட்டில் பொது பல சேனா அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் டிலாந்த விதானகே இந்தத் தகவலை வெளியிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

சில கம்பனிகள் ஹலால் சான்றிதழுக்காகக் கோடிக் கணக்கான ரூபாய்களைக் கட்டணமாகச் செலுத்தி வருகின்றன. இந்த நாட்டில் வாழும் 10 சத வீதமான முஸ்லிம்களுக்காக 90 வீதமாக வாழும் பெரும்பான்மை உட்பட ஏனைய சமூகங்களும் ஹலால் வரிக்கு உட்படுத்தப்படு கின்றார்கள்.

எனவே, இந்த ஹலால் என்ற பெயரில் அறவிடப்படும் நிதி எவ்வாறு செலவிடப்படுகிறது. வருடாந்தம் எவ்வளவு தொகை அறவிடப்பட்டுள்ளது என்பது தொடர்பில் குழு ஒன்றால் விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். ஹலால் நிதி அரசால் கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட வேண்டும். -என்றார். (எ)

## தினசரி ராசி பலன் 01.07.2017

2017 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் ஆனித் திங்கள் 17 ஆம் நாள் அஷ்டமித் திதி மாலை 6.51 மணி வரை. பின்னர் நவமி. நட்சத்திரம்: அத்தம் இரவு 9.50 மணி வரை. பின்னர் சித்திரை. மரணயோகம் முழுவதும். ராகுகாலம்: காலை 9.04 மணி முதல் 10.39 மணி வரை. சுபநேரம்: மாலை 2.58 மணி முதல் 4.28 மணி வரை. திவசம் செய்யவேண்டிய திதி: ஆனிமாத வளர்பிறை அஷ்டமி. பிறந்த நட்சத்திர வழிகாடு: அத்தம்.

'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.

**மேஷம்:** இனிமையான நாள். பணம் தாராளமாகப் புழங்கும். குடும்பத்தில் இனிமை கொலுவிருக்கும். தொழிலில் உயர்ச்சிகள் கிடைக்கும். வேலைதேடுவோருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.

**ரிஷபம்** : நன்மையான நாள். எண்ணிய கருமங்கள் ஈடேறும். தொழிலில் மேன்மை உண்டாகும். உத்தியோக உயர்வுகள் கிடைக்கும். நண்பர்கள், உறவினர்கள் ஒத்தாசை புரிவார்கள்.

**மிதுனம்** : சஞ்சலமான நாள். மனம் குழப்ப நிலையில் இருக்கும். எடுக்கும் முயற்சிகள் தோல்வியடையும். தொழிலில் பல இடையூறுகள் உண்டாகும்.

**கடகம்** : சமபலன்கள் காணப்படுகின்றன. அளவுக்கதிகமான செலவுகள் காணப்படும். வியாபாரத்தில் மத்திம லாபம் கிடைக்கும். தொழிலில் பிரயாசை, அலைச்சல்கள் அதிகரிக்கும்.

**சிம்மம்**: யோகமான நாள். பணம் பல வழிகளாலும் வந்துசேரும். இதுவரை வாடகை வீட்டில் இருந்த சிலருக்கு சொந்த வீடு வாங்கும் யோகம் உண்டாகும். பெண்களுக்குத் திருமணவாய்ப்புகள் வந்து சேரும்.

**கன்னி**: சுபீட்சமான நாள். வீடு, வாகன வசதிகள் பெருகும். வியாபாரத்தில் அமோக லாபம் கிடைக்கும். திருமாண காரியங்கள் சுலபமாக ஒப்பேறும். பூர்வீகச் சொத்துகளால் வருமானம் அதிகரிக்கும்.

**துலாம்**: யோசனையான நாள். வருமானம் குறையும். குடும்பத்தில் சிறுசிறு உட்பூசல்கள் காணப்படும். வியாபாரத்தில் போட்டிகளின் அதிகரிப்பால் லாபம் குறையும். கொடுக்கல், வாங்கலில் பிரச்சினைகள் உண்டாகும்.

**விருச்சிகம்** : மகிழ்ச்சியான நாள். பணவரவு அதிகரிக்கும். உத்தியோக உயர்வுகள் கிடைக்கும். ஆடை, அணிகலங்கள் வந்து சேரும் திருமண காரியங்கள் எளிதில் பலிதமாகும்.

**தனுசு** : சமபலன்கள் காணப்படுகின்றன. எடுக்கும் முயற்சிகள் தாமதமாகும். நண்பர்கள், உறவினர்களின் உதவி சுமாராக இருக்கும். கொடுக்கல், வாங்கலில் கவனம் தேவை.

**மகரம்** : அதிர்ஷ்டமான நாள். தாய்வழிச்சொத்துகள் கைக்குவந்து சேரும். அரச உதவியால் சிலருக்கு வீடு, காணி என்பன கிடைக்கும்.

**கும்பம்**: சமபலன்கள் காணப்படுகின்றன. வருமானம் சுமாராக இருக்கும். வாழ்க்கைச் செலவுகளின் அதிகரிப்பால் கடன் வாங்க நேரிடும்.

**மீனம்** : நன்மையான நாள். வருமானத் தேவைகளைப் பூர்த்திசெய்யக் கூடியதாக இருக்கும். குடும்பத்தில் எல்லையற்ற மகிழ்ச்சி காணப்படும். இதுவரை வாட்டி வதைத்த நோய்கள் குணமாகும்.

சந்திராட்டமநாள்: அவிட்டம் 3, 4 சதயம், பூரட்டாதி 1, 2, 3 ஆம் பாதம் ஆகியவற்றில் பிறந்தோர் இன்று நற்கருமங்களில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும்.

# கட்டாரில் நிலவும் நெருக்கடியால் அந்நியச் செலாவணியில் வீழ்ச்சி



### செய்தியாளர் சந்திப்பில் தினேஸ்

கொழும்பு, ஜுலை 01

கட்டாரில் நிலவும் இராஜதந்திர நெருக்கடி காரணமாக இலங்கைக்கு கிடைக்க பெறும் அந்நியச் செலாவணி குறைவடைந்துள்ளதாக மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவர் தினேஸ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம்இடம்பெற்றசெய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அந்நியச் செலாவணி கிடைக்கப்பெறுகின்றமை குறைவடைந்துள்ளதன் காரணமாக நாட்டில் பொருளாதாரப் பிரச்சினை தலைதூக்கியுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் மூன்றாம் கட்ட கடன் தொகை இன்னும் கிடைக்கப் பெறவில்லை.

சீனாவிடம் இருந்து கிடைக்கப் பெறும் என்று கூறப்பட்ட நிதியுதவி இன்னும் கிடைக்கப் பெறவில்லை.

இதேவேளை, கட்டார் உள்ளிட்ட மத்திய கிழக்கு நாடுகளிடம் இருந்து கிடைக்கப்பெறும் அந்நியச் செலாவணி வெகுவாகக் குறைவடைந்துள்ளதாக மத்திய வங்கியின் ஆளுநர் தெரிவித்துள்ளார்.

எனவே, இது தொடர்பாக ஆழமாகச் சிந்தித்து இதிலிருந்து மீள்வதற்கான உரிய நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டும்.-என்றார். (எ)

## கினிகத்தேனையில் டிராக்டர் குடைசாய்ந்ததில் சாரதி சாவு!



கொழும்பு, ஜுலை 01

கினிகத்தேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட, கினிகத்தேனை களவால் தெனிய பகுதியில் டிராக்டர் ஒன்று வீதியை விட்டு விலகி ஓடையில் குடைசாய்ந்ததில் சாரதி உயிரிழந்தார் என்று கினிகத்தேனை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் பாணந்துறை பகுதியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தை சமந்த பெரேரா (வயது -44) எனஅடையாளம் காணப்பட்டுள்ளார்.

இந்த விபத்து தொடர்பில் மேலதிகவிசாரணைகளைகினிகத்தேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

## குளவி கொட்டி மூவர் மருத்துவமனையில்!

கொழும்பு, ஜுலை 01

திம்புள்ள பத்தனை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ரொப்கில் தோட்டத்தில் குளவி கொட்டுக்கு இலக்காகிய மூன்று பெண் தொழிலாளர்கள் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நேற்றுக் காலை 9 மணியளவில் தேயிலை மலையில் கொழுந்து பறித்துக் கொண்டிருந்த போது, தேயிலை செடியினுள்ளிருந்த குளவிக் கூடு ஒன்று கலைந்து அதிலிருந்த குளவிகள் அங்கு தேயிலை பறித்துக்கொண்டிருந்தவர்கள் மீது கொட்டின என்று தெரிவிக்கப்படுகின்றது.

குளவி கொட்டுக்கு இலக்காகிய மூவரும் உடனடியாக கொட்டகலை வைத்தியசாலையில் சிக்கிச்சைக்காகச் சேர்க்கப்பட்டனர் என்று மேலும் தெரிவிக்கப் படுகின்றது. (எ)



# சமூகப் பொருளாதார வளர்ச்சியில் முக்கியத்துவம் பெறும் கூட்டுறவுத்துறை

ஆண்டுதோறும் ஜூலை மாதத்தின் முதலாவது சனிக்கிழமை சர்வதேச கூட்டுறவுதினமாக உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது. கூட்டுறவுத்துறை நாட்டின் சமூக, பொருளாதார வளர்ச்சியில் முக்கிய இடம் வகிக்கின்றது.

இருந்தபோதிலும் முதலாளி த்துவ சமூக வளர்ச்சியுடன் கூட்டுறவு பல துறைகளிலும்தனது முக்கியத்துவத்தை படிப்படியாக இழந்தே வந்துள்ளது. 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்ப கால கட்டங்களில் கூட்டுறவுத்துறையில் எழுச்சி ஏற்பட்டது. கூட்டுறவு என்பது இன்றியமையாத ஒன்று என்று கூறுவதில் தவறாகாது. இன்றைய உலகம் சமூக, பொருளாதார மாற்றங்களுடன் கூட்டுறவின் தேவையை உணர்ந்தே உள்ளது. நாடுகளிடையே கூட்டுறவு, மக்களிடையே கூட்டுறவு, கூட்டுணர்வுபோன்றஎண்ணக்கருக்கள் சர்வதேச மட்டத்தில் கூட்டுறவு தினத்தை நினைவுகூர வாய்ப்பளித்துள்ளன.

கூட்டுறவு அமைப்பு பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் உருவாகி வளர்ந்து வந்துள்ளது. பிரான்ஸின் சோசலிஸவாதி சார்ள்ஸ் பூரியர், இங்கிலாந்தைச் சேர்ந்த றொபர்ட் ஒவன் (1771-1858), டாக்டர் வில்லியம்கிங் போன்ற இலட்சியவாதிகளின் சிந்தனையில் உதித்த இந்தத் தத்துவம், 1844 ஆம் ஆண்டு றொக்டேல் நகர தொழிலா ளர்களால் செயல்வடிவம் பெற்றது.

கூட்டுறவு என்பது ஜனநாயக அடிப்படையில் கட்டுப்படுத்தப்படும் சுயேச்சையான தொழில் முயற்சி ஒழுங்கமைப்பாகும். இதன் குறிக்கோள் தன்னிச்சையாக ஒன்று கூடும் தனியாள்களின் பொதுவான பொருளாதார, சமூக, கலாசாரத் தேவைகளை எய்துவதாகும். இந்தத் தனியாள்கள் கூட்டாக சொத்துவத்தை அனுபவிக்கின்றனர்.

**சர்வதேச கூட்டுறவு தினம் இன்றாகும். அதனை யொட்டி இந்தக் கட்டுரை வெளியிடப்படுகிறது**

''மனிதன் ஒரு சமூகப்பிராணி. சமூகத்தோடு எந்தவித உறவுமின்றி அவன் பிரபஞ்சத்துடன் ஐக்கியத்தை உணர முடியாது. 'நான்' எனும் அகம்பாவத்தை அகற்றிவிட இயலாது. அவனுடைய சமுதாயச் சார்பு அவனுடைய நம்பிக்கையை சோதனை செய்து கொள்வதற்கும் உண்மை உரைக்கல் லால் தன்னையே அளந்து கொள்வதற்கும் உதவுகிறது'' இந்த அடிப்படையில் கூட்டுறவுத் தத்துவத்தின் பொது இயல்புகளைச் சேர்ந்து செயலாற்றுதல், சகலருக்கும் பொதுவான தன்மை, தனிநபர் சுதந்திர விருப்பு, சமத்துவம், ஜனநாயகம், சேவை நோக்கு, தனி நபர் சுதந்திரம், நடுநிலையும் சமூக நீதியும், கூட்டுணர்வு, புதிய சமூக ஒழுங்கு, மனிதரின் அந்தஸ்தை மதித்தல், உயர் ஒழுக்க நிலை என வகைப்படுத்தலாம்.

இங்கிலாந்தில் நுகர்வோர் சங்கமாக உருவெடுத்த கூட்டுறவு அமைப்பு ஜேர்மனியில் கடன் சுமையைப் போக்கும் இயக்கமாக மாறிகடன்வழங்கும்சங்கங்களைத் தோற்றுவித்தது. உலகின் பல நாடுகளிலும் அந்தந்த நாட்டுத் தேவைக்கேற்ப உருவாகின. இவ்வாறு சர்வதேச ரீதியில் உருவான சங்கங்களைத் தொடர்பு படுத்தும் அமைப்பாகவும் வளர்ச்சியின் சின்னமாகவும் 1895 ஆம் ஆண்டு சர்வதேச கூட்டுறவு இணைப்பு நிறுவனம் உருவாக்கப்பட்டது.

பல்வேறு நாடுகளினதும் தேசிய மட்டக் கூட்டுறவு நிறுவனங்களினதும் இணைப்பாக இது விளங்குகிறது. இதன் தலைமையகம் லண்டனில் உள்ளது. சர்வதேச கூட்டுறவு அமைப்புகள் எல்லாம் வானவில்லின் ஏழு வர்ணங்களை உள்ளடக்கிய கொடியின் கீழ் ஒன்றிணைக்கப்பட்டுள்ளன. இரண்டாம் உலக யுத்தம் காரணமாக உலகில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. பல நாடுகள் சுதந்திரம் பெற்றன. நாடுகளின் உணவு உற்பத்தி, விநியோகம் என்பவற்றில் மிகப்பெரிய மாற்றங்கள் ஏற்பட்டன. பொருளாதார அமைப்பிலும் மாற்றங்கள் ஏற்பட்டன.

மக்களின்வருமானம்அதிகரித்தது. இத்தகைய மாற்றங்கள் கூட்டுறவு அமைப்பிலும், சமூக பொருளாதார, கலாசார அமைப்புக்களிலும் மாற்றங்களைத் தோற்றுவித்தன. இதற்கமைய கூட்டுறவு கொள்கைகளும் மறுசீரமைக்கப்பட்டன.

இதற்காக அமைக்கப்பட்ட குழுவின் சிபார்சுக்கு அமைய 1966 ஆம் ஆண்டு அனைத் துலக கூட்டுறவு மா நாட்டில் ஐந்து அம்சங்களும் கூட்டுறவுக் கொள்கைகளாகப் பிரகடனப்படுத்தப்பட்டன.

> 1957 ஆம் ஆண்டில் இருந்து பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டன. 1958 ஆம் ஆண்டின் முடிவில் இலங்கையில் இயங்கிய பல வகைக் கூட்டுறவுச் சங்கத்தினது எண்ணிக்கை 12 ஆயிரத்து 852 ஆகும். இவற்றைத் தவிர இரண்டாம்படிச் சங்கங்களாக கூட்டுறவுச் சங்கங்களும் இயங்கின.

அவை தன் விருப்புடனான தடையற்ற அங்கத்தவர், ஜனநாயக முறைக் கட்டுப்பாடும்; நிர்வாகமும், முதலுக்கு ஏற்ப வட்டி வீதம், இலாபம் அங்கத்தவரிடையே சமமாகப் பங்கிடப்படல், கூட்டுறவுச்சங்கங்களுக்கிடையே பரஸ்பர ஒத்துழைப்பு ஆகியனவாகும்.

இலங்கை ஆங்கிலேயர் ஆட்சியில் இருந்தவேளை கிராமிய விவசாயம் புறக்கணிக்கப்பட்டது. பெருந்தோட்டச் செய்கையில் கவனம் செலுத்தப்பட்டது. அதற்காக கிராமிய விவசாய நிலங்கள் சுவீகரிக்கப்பட்டன.

இயற்கையின் வறட்சி கிராமிய விவசாயிகளைப் பெருமளவு பாதித்து அவர்களை வறுமைக்குட்படுத்தியது. இதனால் அவர்கள் வட்டிக்குப் பணம் வழங்கும் முதலாளிகளிடம் தஞ்சமடைந்தனர்.

இந்த நிலையில் விவசாயிகள் கூட்டுறவுப் பண்புகளையுடைய சங்கங்களைஅமைத்துசெயற்பட்டபோதும் அதற்கு சட்டவரையறை இன்மையால் நிலைத்து நிற்கவில்லை. 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இலங்கை ஆளுநரால் விவசாயிகளின் பிரச்சினைகளை ஆராய்வதற்கென குழு நியமிக்கப்பட்டது. இதன்மூலம் 1911 ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் நியதிகளின்படி கூட்டுறவுக் கடன் சங்கங்களைத் ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது.

1921 ஆம் ஆண்டில் ஏனைய வகைச் சங்கங்களும் பதிவு செய்ய வகை செய்யப்பட்டன. இதனால் நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்கள், விவசாய உற்பத்தி விற்பனைச் சங்கங்கள் என்பன பதிவு செய்யப்பட்டன. 1939 ஆம் ஆண்டு இரண்டாம் உலக யுத்தத்தால் ஏற்பட்ட உணவுத் தட்டுப்பாட்டைக் கருத்திற்கொண்டு பங்கீட்டு அடிப்படையில் உணவு விநியோகிக்கும் பொறுப்பு கூட்டுறவுத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து நெல் உத்தரவாத விலைத்திட்டம், நெற்களஞ்சியங்கள் என்பனநடைமுறைப்படுத்தப்பட்டன.

தொடர்ந்து நாணய உதவி வழங்கும் ஏற்பாடு செய்யப்பட்டது. குடிசைக் கைத்தொழில்களிலும், பாரம்பரிய சீவனோபாய தொழில்களிலும் ஈடுபட்ட வருக்கும் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டன.

பாற்பண்ணை சங்கங்கள், கடற்றொழிலாளர் சங்கங்கள், தெங்கு உற்பத்தி விற்பனை கூட் டுறவுச் சங்கங்கள், நெசவுத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள். தும்புத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள், தச்சுத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள், செங்கல், ஓடு உற்பத்தி கூட்டுறவுச் சங்கங்கள், அச்சிடுவோர் கூட்டுறவுச் சங்கங்கள், பாதரட்சை செய்வோர் கூட்டுறவுச் சங்கங்கள், புகையிலை பயிரிடுவோர் கூட்டுறவுச் சங்கங்கள் என்பன உருவாகின.

1957 ஆம் ஆண்டில் இருந்து பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டன. 1958 ஆம் ஆண்டின் முடிவில் இலங்கையில் இயங்கிய பல வகைக் கூட்டுறவுச் சங்கத்தினது எண்ணிக்கை 12 ஆயிரத்து 852 ஆகும். இவற்றைத் தவிர, இரண்டாம் படிச் சங்கங்களாக கூட்டுறவுச் சங்கங்களும் இயங்கின. தற்போது கூட்டுறவுச் சங்கங்கள் பல்வேறு சேவை தொழிற்துறையினர் இடையேயும் விஸ்தரிக்கப்பட்டுள்ளன. சிக்கன கடனுதவிச் சங்கங்களும் விஸ்தரிக்கப்பட்டுள்ளன.

அரசியல் தலையீடு இல்லாமல் கூட்டுறவு உறுப்பினர்களுடைய விருப்பத்தின் பேரில் இந்த இயக்கங்கள் செயற்பட வேண்டும். கூட்டுறவு இயக்கம் நாட்டின் வளர்ச்சிக்கு ஓர் அமைப்பு மட்டுமல்லாமல், கிராமப் புறங்களில் இருந்து நகர்ப்புறங்கள் வரை உள்ள பல ஆயிரம் அமைப்புகளின் செயற்பாடுகள் ஜனநாயகத்துக்கு பாலபாடத்தைப் போதிக்கும் போதி மரமாகும். ★

காலைக்கதிர்
Kalaikkathir





# ''ஓ! அமெரிக்கா ...!! எங்கே போகிறாய்...?''

225

பொன்.வேணு கிருஷ்ணா

''எங்களது வேலைகளில் இருதரப்பு முதுகெலும்பாக இருந்து செயலற்ற முனைவதற்கு பதிலாக, வொஷிங்டன் சரியாக எதிராளியாக செயலாற்றுவதுடன், நட்பற்ற நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது.'' இது ''சர்வதேச விவகாரங்களில் ஒத்துழைக்க மிகவும் கடினமானதாக'' இருக்கும்.

ஐ.நா.வின் ரஷ்ய துணைத் தூதுவர் விளாடிமிர் சப்ரோன்கோவ் பேசுகையில், ரஷ்ய நிறுவனங்களுக்கு எதிரான அமெரிக்காவின் பொருளாதாரத் தடைகள் ''மிகுந்த குழப்பத்துடன், ஆழ்ந்த ஏமாற்றமடைந்தன'' என்று கூறினார். மேலும் அவர் பின்வருமாறு தெரிவித்தார்: ''எங்களது வேலைகளில் இருதரப்பு முதுகெலும்பாக இருந்து செயலற்ற முனைவதற்கு பதிலாக, வொஷிங்டன் சரியாக எதிராளியாக செயலாற்றுவதுடன், நட்பற்ற நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது.'' இது ''சர்வதேச விவகாரங்களில் ஒத்துழைக்க மிகவும் கடினமானதாக'' இருக்கும்.

சமீபத்திய வட கொரிய ஏவுகணைச் சோதனைகள் கொரிய தீபகற்பத்தை சுற்றியுள்ள பூகோள அரசியல் அழுத்தங்களை மட்டுமே அதிகரிக்கச் செய்வதுடன், இதனால் போர் ஆபத்தும் இருக்கும். அமெரிக்காவின் பிரதான நிலப் பகுதியைத் தாக்கும் திறன் கொண்ட ஒரு கண்டம் விட்டுக் கண்டம் பாயும் பெருவெடி ஏவுகணையை (ICBM) விடுக்கப்போவதாக வட கொரியா உருவாக்கும் அச்சுறுத்தலை சுட்டிக் காட்டி, ஒரு இராஜதந்திர தீர்வுக்கான நேரம் குறுகியதாகவே உள்ளது என்று ட்ரம்ப் நிர்வாகம் மீண்டும் மீண்டும் அறிவித்துள்ளது.

அமெரிக்க ஏவுகணைப் பாதுகாப்பு அமைப்பின் (US Missile Defence Agency) தலைவரான துணை அட்மிரல் ஜேம்ஸ் சியரிங், அமெரிக்க மைய ஆயுத சேவை குழுவிற்கு (US House Armed Services Committee) சான்றளித்தபோது அந்த எச்சரிக்கைகள் அடிக்கோடிடப்பட்டன. வட கொரியாவின் சமீபத்திய மாதங்களின் ஏவுகணைச் சோதனைகள் ''பெரும் கவலைக்குரியவையாக'' இருந்தன என்று அவர் தெரிவித்தார். மேலும், ''ICBM தாங்கிய ஒரு அணு ஆயுதத்தினால் அமெரிக்காவின் எல்லையை'' பியோங்யாங் ஏற்கனவே அடைந்துள்ளது என்றும் அவரது அமைப்பினால் கருதப்படுகிறது.

வட கொரியா மீதான முன்கூட்டிய இராணுவத் தாக்குதல்களுக்கான போலிக் காரணமாகக் கண்டுபிடித்தவற்றை ட்ரம்பின் அதிகாரிகள் மீண்டும் மீண்டும் வலியுறுத்துவதையே இந்த ஆதாரமற்ற அனுமானம் துல்லியமாகக் காட்டுகின்றது.

**ரஷ்யர்கள்...!!!! ரஷ்யர்கள்..!!! ரஷ்யர்கள்...!! ரஷ்யர்கள்....!**
**எல்லாமே ரஷ்ய (மா)யம்**

உங்கள் கார் தரிப்பிட மின்கதவு இயங்கவில்லையா? உங்கள் நாய் நடுஇரவில் எழுந்து ஊளையிடுகிறதா?



வெய்யில், குளிர், வறட்சி, காற்று அல்லது ஈரப்பதம் எனதட்பவெப்பநிலை அதனதன் பருவத்திற்கேற்ப இல்லையா? உங்கள் தொலைக்காட்சி பெட்டி (அல்லது குளிர்சாதனப்பெட்டி, அல்லது ஒலியமைப்பு சாதனம் அல்லது வீட்டு எச்சரிக்கை மணி அமைப்புமுறை) திடீரென செயற்படுகிறதா, அல்லது செயற்படாமல் போகிறதா?



ஒருவர் பெருநிறுவன கட்டுப்பாட்டிலான ஊடகங்களைப் பார்த்து உத்தியோகபூர்வ வொஷிங்டனின் பெரும்பாலான அறிக்கைகளை, அதுவும் குறிப்பாக ஜனநாயகக் கட்சியின் அறிக்கைகளை விமர்சனபூர்வமின்றி அப்படியே ஏற்றுக் கொண்டால், அவர் மிக சுலபமாக ரஷ்யர்கள் தான் இதையெல்லாம் செய்தார்கள் என்ற முடிவுக்கு வந்துவிடுவார்.

அமெரிக்க அரசியலும் ஊடக ஸ்தாபகமும் ஒரு பித்துப் பிடித்த வெறித்தனத்தில் சிக்கியுள்ளன. (உலகின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 24.3 சதவீதத்துடன், 18 ட்ரில்லியன் டொலர் மதிப்பிலான) உலகின் மிகப்பெரிய பொருளாதாரம், உலகின் மிகப்பெரிய இராணுவம், மற்றும் தொழில்நுட்பரீதியில் மிகவும் நவீன உளவுத்துறை எந்திரத்திற்கு கட்டளையிடும் ஓர் ஆளும் உயரடுக்கு, (உலகின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1.8 சதவீதத்துடன், அல்லது அமெரிக்காவை விட பதினான்கில் ஒரு பங்கில் இருக்கும்) உலகின் பன்னிரெண்டாவது மிகப்பெரிய பொருளாதாரத்தை மேற்பார்வை செய்கின்றதும், கணினி சகாப்தத்திற்குள் சிலிக்கன் மண்டலம் நுழைந்து ஒரு தலைமுறைக்கு பின்னர் அதற்குள் கால் பதித்ததுமான ஒரு அரசாங்கத்தின் எங்கும் நிறைந்திருக்கும் விழுதுகளால் ஊடுருவப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

**ரஷ்யா ஊடுருவியதாக குற்றஞ்சாட்டி அமெரிக்க ஊடகங்கள் பரப்பி வரும் கதையாடல்களில், கத்தியைக்கொண்டு வெண்ணையை வெட்டுவது போல, மிக சுலபமாக அமெரிக்க தகவல் தொழில்நுட்ப அமைப்புமுறையை ரஷ்ய இணைய போர் முறை நடவடிக்கைகள் ஊடுருவிவிட்டதாகக் கூறப்படுகிறது.**

ஒரு மதிப்பீட்டின்படி, உலகின் மொத்த கணினி நிரலாளர்களில் (computer programmers) சுமார் 20 சதவீதத்துடன் அமெரிக்காவில் உள்ள 3.6 மில்லியன் கணினிநிரலாளர்களுடன் ஒப்பிடுகையில், ரஷ்யாவில் அரை மில்லியனுக்கும் சற்று கூடுதலானவர்களே உள்ளனர். உலகிலேயே மிகவும் சக்தி வாய்ந்த மென்பொருள், வன்பொருள் மற்றும் இணைய நிறுவனங்களுக்கு அமெரிக்காவே மையமாக உள்ளது. ரஷ்ய தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களில் ஒன்று கூட உலகின் முதல் 100 இடங்களில் கிடையாது. இவ்வாறிருப்பினும், 2016 அமெரிக்க ஜனாதிபதி தேர்தலின் போது ரஷ்யா ஊடுருவியதாக குற்றஞ்சாட்டி அமெரிக்க ஊடகங்கள் பரப்பி வரும் கதையாடல்களில், கத்தியைக் கொண்டு வெண்ணையை வெட்டுவது போல, மிகச் சுலபமாக அமெரிக்க தகவல் தொழில்நுட்ப அமைப்புமுறையை ரஷ்ய இணைய போர்முறை நடவடிக்கைகள் ஊடுருவிவிட்டதாக கூறப்படுகிறது.

பணியிலிருந்து நீக்கப்பட்ட மத்திய புலனாய்வுத்துறை (FBI) இயக்குநர் ஜேம்ஸ் கோமி செனட் சபையின் புலனாய்வு குழு முன்னால் தோன்றியமை, அமெரிக்க ஊடகங்களின் ரஷ்ய-விரோத விஷமப் பிரசாரத்தை ஒரு புதிய மட்டத்திற்கு உயர்த்தி உள்ளது. அமெரிக்க அரசியல் போலிஸின் இந்த முன்னாள் தலைவர், அமெரிக்க தேர்தல்களில் ரஷ்யா ஊடுருவியதாக கூறப்படுவது, அமெரிக்க ஜனநாயகத்திற்கு ஒரு அபாயகரமான அச்சுறுத்தல் என்று கண்டித்தார். ''அவர்கள் முயற்சிசெய்ய தேர்ந்தெடுத்த எந்த கட்சிக்காகவும், அதன் சார்பாக வேலைசெய்யவும் அவர்கள் வந்துவிடுவார்கள்,'' என்று எச்சரித்தார். ''அவர்கள் மீண்டும் வருவார்கள்... அவர்கள் அமெரிக்காவிற்கு வருகிறார்கள்,'' என்றார்.

அவரிடம் கேள்வி எழுப்பிய முதலாளித்துவ அரசியல்வாதிகளில் ஒருவர் கூட, ரஷ்யா அமெரிக்காவின் பிரதான எதிரி என்ற கூற்றின் மீதோ அல்லது ரஷ்ய ஊடுருவல் அமெரிக்க தேர்தல் அமைப்புமுறைக்கு ஒரு பெரும் அச்சுறுத்தலாக உள்ளது என்ற கூற்றையோ சவால் செய்யவில்லை. வோல் ஸ்ட்ரீட் நலன்களுக்காக அமெரிக்க தேர்தல்களுக்குள் பில்லியன் கணக்கில் பணம் பாய்ச்சப்பட்டமை அமெரிக்கர்களின் ஜனநாயக உரிமைக்கு அதை விட மிகப்பெரிய அச்சுறுத்தல் என்று எவருமே கூறவில்லை.

ஊடகச் செய்திகள் பேரழிவுகரமான எச்சரிக்கைகளோடு சேர்ந்து கொண்டன. நியூயோர்க் டைம்ஸில் வெளியான முதல் பக்க அறிக்கை ஒன்று, ட்ரம்ப் மற்றும் கோமி இற்கு இடையிலான மோதல் அதைவிட முக்கிய பிரச்சினையான அமெரிக்க தேர்தல் முறைக்குள் ரஷ்ய தலையீட்டால் ''அமெரிக்காவிற்கு ஏற்படும் ஓர் அதிர்ச்சிகரமான அச்சுறுத்தலை'' மறைக்க அனுமதிக்கப்படக்கூடாது என்று எச்சரித்தது.

(கேள்வி தொடரும்)



# சுதந்திர வேட்கை

**அத்தியாயம் - II**



20

முப்பது ஆண்டுகளுக்கு மேல் படிநிலை வளர்ச்சி கண்டு, நீட்சி கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் புரட்சிகர வரலாறு ஒரு பூகம்பமாக வெடித்துச் சிதறி, பிரளயமாகப் பொங்கி பிரவகித்து அடங்கியிருக்கின்றது.

அந்த இயக்கத்தின் வரலாற்றுக்குள்ளே பொதிந்து கிடக்கும் அதிசயிக்கத்தக்க நுட்பமான அம்சங்களும் தியாகங்களும் வீர வரலாறுகளும் நம்மில் பலருக்குத் தெரிவதில்லை.

விடுதலைப் புலிகள் இயக்கம் பற்றிய ஒரு பார்வையாக – அந்த இயக்கத்துடன் பங்காற்றிய ஒரு வரலாற்றுப் பயணத்தின் படிமமாக – கட்டவிழ்கின்றது இந்த நூல்.

புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் எழுதிய 'போரும் சமாதானமும்' என்ற நூலின் ஊடாக விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தரிசித்த நாம், அவரது துணைவியாரான – ஆஸ்திரேலியப் பெண்ணான – அடேல் பாலசிங்கத்தின் பட்டறிவுப் பதிவு மூலமும் புலிகள் இயக்கத்தின் உட்சூக்குமங்களை இந்தப் புதிய தொடரின் ஊடே அறிந்து கொள்ள முடியும்.

'சுதந்திர வேட்கை' என்ற இந்த நூல் முதலில் ஆங்கிலத்தில் 'Will To Freedom' என்ற தலைப்பில் வெளியானது. தமிழ்ப் பதிப்பு சரியாக பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் 2002 இல் 'தமிழீழ விடுதலைப் போராட்டம் – உள்ளிருந்து ஒரு நோக்கு' என்ற பீடிகையுடன் வெளியானது.




## புதிய அனுபவங்கள்

எமது 1981 ஆம் ஆண்டு இந்தியப் பயணத்தின் போது தலைமைகளுக்கு இடையே அரசியல் இழுபறி நாடகம் ஒருபுறம் நடந்து கொண்டிருக்க, ஏனைய போராளிகளுடன் கூடிப் பழகுவதில் நான் ஈடுபட்டேன். இந்தத் தடவை, சென்னை நகரப் புறத்திலுள்ள வரசலவாக்கத்தில் வீடு ஒன்றைப் போராளிகள் அமர்த்தி இருந்தார்கள். அரசியல் சூட்சுமங்கள் நடந்து கொண்டிருந்தபோதும், அந்த வீட்டில் தோழமை உணர்வே நிலவியது. எம்மோடு அங்கே தரித்திருந்தவர்கள் ஏதோ ஒரு வகையில் வரலாற்று முக்கியத்துவம் பெற்றவர்கள்; முக்கிய புலிப் போராளிகள். ஒருவர் பேபி சுப்பிரமணியம். இளங்குமரன் என்றும் அவர் அழைக்கப்பட்டார். இவர் பிரபாகரனின் ஆயுட் தோழர். இளம் போராளியாக இருந்தபோதே இவர் வெடி மருந்திலும் நேரக் குண்டிலும் விற்பன்னர். ஆனாலும், மிகவும் சாதுவானவர். மற்றவர்களுக்கு என்றுமே கெடுதி விளைவிக்காதவர். அதிகாரப் போட்டியில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளாதவர். அற்பத்தனமான வதந்திகளைப் பரப்பாதவர். அவரிடம் தற்பெருமை கிடையாது. போராட்ட வரலாறோ, அதில் புலிகளின் பங்கோ அத்தனையும் அவருக்கு மனப்பாடம். அவர் ஒரு நடமாடும் அறிவுக் களஞ்சியம். உணவில் சுத்த சைவம். பச்சை மிளகாயைத் தாமே பொரித்து, ஐந்து, ஆறு ஈர வெங்காயத்தோடு சோறு சாப்பிடுவார். அதுதான் அவருடைய பிரதான உணவு. போக்கு விசித்திரம் என்றாலும் விடுதலைப் புலிகளின் இலட்சியத்தில் உறுதியுடையவர். நம்பிக்கைக்குப் பாத்திரமானவர். எமது நீண்ட கால நண்பர்.

விடுதலைப் புலிகளின் இயக்கத்தில் இருந்து விலகிய பின்னரும் நெருங்கிய நண்பராகத் தொடர்ந்து திகழ்ந்தவர் நேசன் - ரவீந்திரதாஸ். இப்போது வெளிநாடு ஒன்றில் வாழ்கிறார். பிரபாகரனுடன் போராட்டத்தில் சேர்வதற்காக மருத்துவக் கல்லூரிப் படிப்பை இடையில் முறித்துக் கொண்டு வந்தவர். முன்பு பிரபாகரனின் பெரும் நம்பிக்கைக்குப் பாத்திரராய் இருந்தவர். அவர்களுக்கு இடையே மனமுறிவு ஏற்பட்டதும் இயக்கத்தின் உள்விவகார இழுபறிகளுக்கு முகம் கொடுக்க இயலாமலும் ஆன்மீகத்தில் நாட்டம் பெருகியதாலும், அமைதியான வேறு வாழ்க்கையை அவர் நாடினார்.

அந்த நாள்களில் சங்கர் எம்மோடுதான் இருந்தார். விடுதலைப் புலிப் போராளிகளில் முதல் உயிர்ப் பலியானவர் இவரே. இவர் மரணம் அடைந்த நவம்பர் மாதம் 27 ஆம் திகதியே மாவீரர் நாளாக வீரச்சாவைத் தழுவிய போராளிகளுக்கு வீரவணக்கம் செய்யும் நாளாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. 1982 ஆம் ஆண்டு சங்கர் தரித்திருந்த வீட்டைச் சுற்றி வளைத்த சிறிலங்கா அரச படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ய, ரவை இவர் வயிற்றிலே பாய்ந்தது. சிகிச்சைக்காகப் போராளிகள் இவரை இந்தியா கொண்டு சென்றார்கள். உடனடியாக உரிய சிகிச்சை வழங்கப்படாததால், உள்வயிற்று நீர்ப்பை சேதமாகி, குருதியிலும் நஞ்சூறத் தொடங்கியிருந்ததால், அவர் மரணமானார். 1981 ஆம் ஆண்டு அவர் எம்மோடு சென்னையில் இருந்த நாள்களில், உடற்பயிற்சிக்காக ஒவ்வொரு நாளும் ஓடிவிட்டுத் திரும்பும் போது, ஒரு திடகாத்திரமான இளைஞனாக அவரைப் பார்த்த எனக்கு, அந்த இளைஞனின் மரணத்தை ஏற்றுக் கொள்வது மிகக் கடினமாக இருந்தது. ஆயுதப் போராட்டம் எனும் போது, அதில் இளைஞர்கள் மரணம் அடையப் போகிறார்கள் என்பது எனது மனதில் உறைத்தது.

ரகு, பல ஆண்டுகளாகப் பிரபாகரனின் மெய்க்காவலராகவும் நம்பிக்கைக்கு உரிய மூத்த உறுப்பினராகவும் திகழ்ந்தவர். அந்த நாள்களில் சென்னையில் பிரபாகரனின் பாதுகாப்புக்குப் பொறுப்பாக சங்கரோடு இருந்தவர்களில் அவருடைய பாலிய நண்பர் ரகுவும் ஒருவர். பல ஆண்டுகளுக்குப் பின், விதிகளை மீறியமையால், இயக்கத்தில் இருந்து ரகு விலக்கப்பட்டார். பிரபாகரனின் பாதுகாப்புக்குப் பொறுப்பான மூன்றாவது ஆளும் ஒரே ஊரில் இருந்து வந்த அவர்களுடைய பாலிய வயது நண்பரேதான். அவரது பெயர் பண்டிதர்.

நான் சென்னைக்குச் சென்றபோது எனக்குத் தமிழில் ஒரு வார்த்தையும் பேசவராது. பண்டிதருக்கு ஆங்கிலம் அறவே தெரியாது. ஆனாலும், கைசமிக்ஞைகளாலும் கலகலத்த சிரிப்பாலும் போதுமான அளவு புரிந்துணர்வை இனிமையாக ஏற்படுத்திக்கொண்டோம். பண்டிதரின் நினைவு வரும் போதெல்லாம் தொய்வு நோயுடன் போராடும் ஓர் இளைஞரின் நினைவுதான்வரும். எந்த நாளாவது, இந்தியத் தூசியோ, சமையலில் மிளகாயின் காரமோ பண்டிதருக்கு மூச்சுத் திணறலை ஏற்படுத்தாமல் விட்டது கிடையாது. ஆனால், இந்த உடல் அசௌகரியம் அவரைத் தளர்வடையச் செய்வதில்லை. தமது அரசியல் பணிகளை தமது நோய் கட்டுப்படுத்த அவர் இடமளித்தமையும் இல்லை. யாழ்ப்பாணத்தில் அவரை நான் போய்ச் சந்திப்பதற்கு முன்னதாகவே அவர் இறந்து போனார். ஆனாலும், விடுதலைப் புலிகளின் யாழ்ப்பாண மாவட்ட அரசியல் பிரிவுத் தலைவர் என்பதற்காக அவர் தேடப்பட்டுக் கொண்டிருந்த அந்த ஆபத்தான நாள்களில் கூட மூச்சுத் திணறும் தொய்வோடு அங்கும் இங்கும் அவர் சைக்கிளில் ஓடித் திரிகின்றமையை என்னால் நினைத்துப் பார்க்கமுடிகிறது. யாழ்ப்பாணம் அச்சுவேலியிலே 1985 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் அவர் மரணம் அடைந்தமை பற்றிக் கேள்விப்பட்ட நாள் எனக்கு ஒரு துயர நாள். பண்டிதரின் மரணம் பற்றி எனக்கு விவரம் தெரிவிக்க, பிரபாகரனுக்குப் பல நாள்கள் பிடித்தன. அந்தத் துயரச் செய்தி என்னை வெகுவாக வாட்டிவிடும் என்று அவர் கருதியிருக்க வேண்டும். பண்டிதருடைய அணியினுள் ஊடுருவி இருந்த உளவாளி ஒருவன் காட்டிக் கொடுத்தமையை அடுத்து அவருடைய இரகசிய வதிவிடம் சுற்றி வளைக்கப்பட்டதாக என்னிடம் தெரிவித்து இருந்தார்கள். அந்தச் சுற்றிவளைப்பில் ஒருவரோ இருவரோதான் உயிர் தப்பிச் சென்றனர் என்றும் பண்டிதர் பற்றிய தகவலுக்காகக் காத்திருந்தார்கள் என்றும் அறிந்தேன். பிரபாகரனின் சங்கடமும் பண்டிதர் பற்றிய தெளிவின்மையான தகவலும் எனக்குச் சந்தேகத்தையே தந்தன. சுற்றி வளைப்பில் பண்டிதர் தப்பியிருப்பாரா என்று ஐயப்பட்டேன். விடுதலைப் புலித் தாக்குதல் குழு ஒன்றின் தலைவராகவும் பிரபாகரனுக்குப் பிடித்தமான தோழராகவும் இருந்த பண்டிதர் எங்கே இருக்கிறார் என்பது தலைமைப் பீடத்துக்கு உடனடியாக தெரிந்திருக்க வேண்டும். சில நாள் கழித்து பேபி சுப்பிரமணியம் எமது மாடி வீட்டுக்கு வந்து பண்டிதர் கொல்லப்பட்டு விட்டார் என்று கூறியபோது எனது சந்தேகம் உறுதிப்படுத்தப்பட்டது. காட்டிக்கொடுத்த அந்த இராணுவ உளவாளி தப்பியோடி, பின்னர் சிறிலங்காப் படையில் ஒரு நல்ல பதவியில் அமர்ந்து விட்டார் எனக் கேள்விப்பட்டேன். விடுதலைப் புலிப் போராளிகளில் தொடக்கத்தில் இறந்தவர்களில் பண்டிதரும் ஒருவர். தமது மரணத்துக்குச் சில மாதங்கள் முன்னதாக எம்மைப் பார்க்க அவர் சென்னைக்கு வந்தது எம் பாக்கியம். வல்வெட்டியில் உள்ள அவருடைய வீட்டுக்கு 1987 ஆம் ஆண்டிலே நான் சென்றபோது அவருடைய தாயார் மனதுக்குள் அடக்கி வைத்திருந்த உணர்ச்சித் துயரத்தை நேரிலேயே கொட்டிய போது அதிர்ந்து போனேன். அவருடைய தாயார், அவர் வாழ்ந்த அவருடைய அறையில் மாற்றம் எதுவும் செய்யாது அதையே ஒரு கல்லறையாக்கி, அப்படியே பூட்டி வைத்திருந்தார். அந்த எளிமையான அறை வாயிலில் அவருடைய நிழற்படம் மாட்டப்பட்டு இருந்தது. அந்த வீட்டில் எம் எல்லோருடைய கண்களும் குளமாகி இருந்தன.

எம்மோடு தங்கியிருந்த ரெலோ போராளிகளில் சிறிசபாரத்தினமும் ஒருவர். பின்னர் இவரே அந்த அமைப்பின் தலைவரானார். அவர் அமைதியானவர். நன்கு பிரபலமான வல்வெட்டித் துறைப் போராளிகள் தங்கத்துரையையும் குட்டிமணியையும் தமது அரசியல் தலைவர்களாக அவர் வரித்திருந்தார். வடமராட்சி கிழக்கு கரையோரமாக அவர்கள் கைதானமையையடுத்து அவர்களை வெலிக்கடைச் சிறையில் இருந்து மீட்பதற்காக திட்டம் இட்டுக் கொண்டிருந்தார். இராணுவ போர்த்திறனில் சிறி பிரமாதமானவரல்லர்; போராட்ட அனுபவமும் அவருக்குக் குறைவே. ஆனால் சிறை உடைக்கும் இராணுவ முயற்சிக்கு வேண்டிய ஆற்றல் திறன்களை எங்கிருந்து பெறலாம் என்பதை அவர் அறிந்திருந்தார். பிரபாகரனுடைய இராணுவத் திட்டமிடல் ஆற்றலும், எந்தத் திட்டத்தையும் செயற்படுத்தக் கூடிய புலிப் போராளிகளின் களம் கண்ட துணிச்சலும் அவருக்கு மிகத் தேவையாக இருந்தன. தற்கொலைக்கு ஒப்பான ஒரு கடின ஆபத்தான இராணுவ நடவடிக்கையில் பிரபாகரன் ஈடுபட இருந்தார். பாலாவின் தலையீடு பிரபாகரனைக் கட்டிப்போட்டது. இதனால் அந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவில்லை. அரசியலையும் போர்த் தந்திரோபாயத்தையும் ஒருபுறம் ஒதுக்கி விட்டால், சிறி எம்மட்டில் மிகவும் கருணையுடனேயே நடந்து கொண்டார். ஒரு சம்பவத்தைக் குறிப்பிடலாம். ஒரு முறை பாலாவுக்கு நெருப்புக் காய்ச்சலும் வயிற்றோட்டமும் ஏற்பட்டு கடும் சுகவீனமுற்றார். பாலாவால் எழுந்து நடக்கமுடியவில்லை. சிறி அவரைத் தூக்கிச் சென்று வண்டியில் ஏற்றினார். பின்னர், வண்டியில் இருந்து இறக்கி, மருத்துவமனையில் மருத்துவரின் அறைக்கும் தாமே தூக்கிக் கொண்டு போனார் துரதிஷ்டவசமாக ஆளுமை ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் சிக்கலான முரண்பாடுகள் உருவானமையால், ஒரு நெருக்கமானஉறவுஎம்மிடையேவளரவில்லை. ஆனால், அதேவேளைதனிப்பட்டகுரோதமும் இருக்கவில்லை. ஆகவேதான், பின்னர் பாலாவுடன் அரசியல் சந்திப்பு ஒன்றுக்காக சென்னையில் உள்ள விடுதலைப் புலிகளின் பணிமனைக்கு 1985 ஆம் ஆண்டிலே சிறி வந்தபோது அவரைச் சந்திப்பதில் மகிழ்ச்சியாக இருந்தது. பின்னர், விடுதலைப் புலிகளுக்கும் ரொலோவுக்கும் இடையே கொடூரமான மோதல் வெடித்து ஏற்பட்ட துப்பாக்கிச் சண்டையில் சிறி கொல்லப்பட்டார்.

(தொடரும்...)

# கனடா தமிழ் இலக்கியத் தோட்டம் நடத்திய இயல் விருது விழா



கனடா தமிழ் இலக்கியத் தோட்டம் நடத்திய 17 ஆவது இயல் விருது விழா அண்மையில் கனடா, ரொறொன்ரோ ஸ்காபரோ விருந்து மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

இம்முறை தமிழ் இலக்கிய வாழ்நாள் சாதனைக்கான இயல் விருது கவிஞர் சுகுமாரனுக்கு வழங்கப்பட்டது.

கடந்த 40 ஆண்டுகளுக்கு மேலாக தனது இலக்கியப் பணிகளில் சமரசம் செய்து கொள்ளாமல் கவிதை, புனைவு, கட்டுரைகள், மொழிபெயர்ப்புகள் என பலதுறைகளிலும் சலிக்காமல் தொடர்ந்து உழைத்து வருகின்றமைதான் இவருடைய சாதனை.



இயல் விருதைத் தொடர்ந்து மற்றைய விருதுகளும் வழங்கப் பட்டன.

சுந்தரராமசாமி நினைவாக நிறுவப் பட்ட காலச்சுவடு அறக்கட்டளை 'கணிமை விருது' த.சீனிவாச னுக்கு அளிக்கப்பட்டது.

புனைவு இலக்கியப் பிரிவில் 'ஆதிரை' நாவலுக்காக சயந்த னுக்கும், இலக்கியப் பிரிவில் 'ஓநாயும் ஆட்டுக்குட்டியும்' நூலுக்காக திரைப்பட இயக்குநர் மற்றும் நடிகரான மிஷ் கினுக்கும், கவிதைப் பிரிவில் 'ஆயிரம் சந் தோஷ இலைகள்' என்ற தொகுப் புக்காக சங்கரராம சுப்பிரமணி யனுக்கும் விருதுகள் வழங்கப் பட்டன.

மொழிபெயர்ப்பு பிரிவில் 'இறுதி மணித்தியாலம்' என்ற தலைப்பில் சிங்களக் கவிதை களைத் தமிழில் மொழிபெயர்த்த ரிஷான் ஷெரீபுக்கும், தமிழிலி ருந்து ஜேர்மன் மொழியில் 'வாழை இலையும் வீதிப் புழு தியும்' என்ற தலைப்பில் 14 சிறு கதைகளை மொழி பெயர்த்து புத்தகமாக வெளியிட்ட ஈவ்லின் மாசிலாமணிக்கும், மாணவர் புலமைப்பரிசுப் போட்டியில் சிறந்த சிறுகதை எழுதி வென்ற சோபிகா சத்தியசீலனுக்கும் விருதுகள் வழங்கப்பட்டன. தமிழ் இலக்கியச் சிறப்பு சாதனை விருதுகளை இவ்வருடம் டேவிட் ஷுல்மன், இரா. இளங்குமரன் ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

நிகழ்வுக்கு சிறப்பு விருந்தி னர்களாக வருகை தந்த முனைவர் ரவி குகதாசன், மருத்துவர் சுந்த ரேசன் சம் பந்தம் மற்றும் கவிஞர் சேரன் ஆகியோர் சிறப்புரை வழங்கினர்.

பேராசிரியர் சந்திரகாந்தன் தொடக்கவுரையையும், சட்டவா ளர் மனுவல் ஜேசுதாசன் வரவேற் புரையையும் நிகழ்த்தினர்.

கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி அரசின் பாராட்டுச் சான்றிதழை கவிஞர் சுகுமாரனுக்கும், இயக் குநர் மிஷ்கினுக்கும் வழங்கினார். கவிஞர் சுகுமாரன் தன் விருதுப் பணத்தில் ஒருபகுதியையும், இயக்குநர் மிஷ்கின் முழு விருதுப் பணத்தையும் ஹார்வார்ட் தமிழ் இருக்கைக்கு வழங்கி சபை யோரின் பாராட்டைப் பெற்றுக் கொண்டனர்.

வழக்கம்போல பெட்னா வாழ்த்து மடலை சிவா வேலுப் பிள்ளை பெட்னா சார்பாக வழங் கினார். மருத்துவர் துஷ்யந்தி ஸ்ரீகரனின் வாழ்த்துரையைத் தொடர்ந்து உஷா மதிவாணன் நன்றியுரை வழங்கினார்.



விழா நிகழ்ச்சிகளை கந்தசாமி கங்காதரன் அழகாகத் தொகுத்து வழங்கினார். இரவு விருந்துடன் விழா முடிவுக்கு வந்தது. இந்த விழாவுக்கு பல நாடுகளில் இருந்து எழுத்தாளர்களும், கல்வியாளர் களும் ஆர்வலர்களும் வருகை தந்து சிறப்பித்திருந்தார்கள்.

# கனடா பிறந்த தினக் கொண்டாட்டத்தில் காட்சிப்படுத்தப்பட்ட தமிழ் அகதிப் படகு!







கனடா, மொன்றியால் நகரில் கடந்த 24, 25 ஆகிய திகதிகளில் நடைபெற்ற கனடாவின் 150 ஆவது பிறந்த தினக் கொண்டாட் டத்தில், சிறப்பு காட்சிப் பொருளாக 1986 ஆம் ஆண்டுத் தமிழ் அகதிப் படகு காட்சிக்கு வைக்கப்பட்டி ருந்தமை வந்திருந்த அனைவ ரையும் பரவசப்படுத்தியது.

கனேடியத் தமிழர் பேரவை யின் நாடு தழுவிய கனடா தினக் கொண்டாட்டங்களின் ஒரு பகுதி யாக அமைந்த இந்தப் படகுக் கண் காட்சி மொன்றியால் திருமுருகன் ஆலய முன்றிலில் நடைபெற்றது.

மொன்றியால் திருமுருகன் ஆலய நிர்வாகம் இந் நிகழ்வை அங்கு மிகச்சிறந்த முறையில் ஒழுங்கமைத்திருந்தது. கனடா கொடியும், கியூபெக் கொடியும் அங்கு ஏற்றப்பட்டன.

1986 ஆம் ஆண்டு 155 தமிழ் அகதிகளையும் காப்பாற்றிய நியூ பவுண்லாந்து மீனவர்களுக்கு அனைவராலும் நன்றி தெரிவிக் கப்பட்டது. அத்துடன், இந்தத் தமிழ் அகதிப் படகை மொன்றியால் நகருக்கு கண்காட்சியாகக் கொண்டு வரும் திட்டத்துக்கு நிதியுதவியுடன் ஆதரவளித்த கனேடிய அரசுக்கும் பலரும் நன்றி தெரிவித்தனர்.

இந்தப்படகின் பயணம் தொடர் பில் ஆங்கிலத்திலும், பிரெஞ் சிலும் எழுதப்பட்டு நூல் வடிவில் அமைந்திருந்த விளக்கப் பிரசுரம் அங்கு விநியோகிக்கப்பட்டது.(எ)



# ஜேர்மனியில் நடைபெற்ற மாவீரர் வெற்றிக்கிண்ண உதைபந்தாட்டம்

ஜேர்மனியில் தமிழர் விளையாட்டுக் கூட்டமைப் பினரால் நடத்தப்படும் மாவீரர் வெற்றிக்கிண்ண உதைபந்தாட்டப் போட் டிகள் கடந்த 24 ஆம் திகதி டுசில்டோர்ப் நகரில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இந்த நிகழ்வில் ஜேர்மன் முழுவதிலும் உள்ள தமிழா லயங்களின் மாணவ மாண விகளும் மற்றும் விளையாட் டுக் கழகங்களைச் சேர்ந்தவர் களும் பங்கு கொண்டு சிறப் பித்தனர்.

இந்த மாவீரர் வெற்றிக் கிண்ண உதைபந்தாட்ட விளையாட்டுப் போட்டி யில் 63 கழகங்கள் பங்குபற் றின. இதில் தமிழாலயங்கள் தவிர்ந்த கழகங்களாக ஜேர் மனியின் பல பாகங்களிலும் இருந்துவந்த 15 கழகங்கள் பங்குபற்றியமை குறிப்பிடத் தக்கது.

அத்தோடு 19 வயதுக்கு மேற்பட்ட தமிழாலய மாண வர்களுடன் வெளிக் கழ கங்கள் போட்டியிட்டமை மிகச் சிறப்பான நிகழ்வாக அமைந்தது.

தமிழாலய மாணவர் களின் பெண்கள் அணிக ளுக்கு இடையிலான உதை பந்தாட்டப் போட்டிகளும் ரசிக்கத்தக்கவையாக இருந் தன.

போட்டியில் கலந்து கொண்ட சகல அணிகளும், அவற்றைப் பார்வையிட வந்த பொதுமக்களும் மாவீரர் களின் தூய்மைக்கு மதிப்ப ளித்து அவர்களை மனதில் நிறுத்தி போட்டிகளின் வெற்றி தோல்விகளை சம மாக மதித்து விளையாட்டின் இறுதிவரை நின்று சிறப்பித் தமை பாராட்டத்தக்கது.(எ)

## ஆர்ப்பாட்டப் பேரணிகளை அவதானிக்க 'ட்ரோன் கமரா'!

சைட்டம் எதிர்ப்பு உட்பட ஏனைய ஆர்ப்பாட்டப் பேரணிகள், இரகசியமாக அவதானிக்கப்படுகின்றன என்று கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

அதற்கமைய ட்ரோன் கமரா ஊடாகப் புகைப்படம் எடுக்கப்பட்ட காட்சிகள் சில ஊடகங்களில் வெளி யாகியுள்ளன.

இலங்கை இராணுவத்தின் சமிக்ஞை படையணிக்குச் சொந்தமானதாகக் கருதப்படும் ஆயுதவாகனம் ஒன்றும் அண்மையில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

அந்த வாகனத்தில் இருந்து வானில் ட்ரோன் கமரா ஒன்று அனுப்பி வைக்கப்பட்டு இந்தக் கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றன.

அவ்வாறு ட்ரோன் கமராவை வைத்து கண்காணிக்கும் புகைப்படங்கள் தற்போது ஊடகங்களில் வெளியாகியுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ)

## அனைத்துப் பிரச்சினைகளையும் தோற்றுவித்தவர் மஹிந்தவே!

### ஐ.தே.க. எம்.பிக்களான அஜித் , விஜயபால கூட்டாகத் தெரிவிப்பு





கொழும்பு, ஜூலை 1

உமா ஓயா, சைட்டம் மருத்துவக் கல்லூரி, மீதொட்டமுல்ல குப்பை மேடு விவகாரம் உள்ளிட்ட வேலைநிறுத்தப் போராட்டங்கள் போன் அனைத்துப் பிரச்சினைகளையும் மஹிந்த ராஜபக்ஷவே தோற்றுவித்தார். டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்துள்ள நிலையில் இந்தத் தருணத்தில் வேலை நிறுத்தப் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டாம். மக்கள் மீது அக்கறை காட்டுங்கள் என்று ஐக்கிய தேசியக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறி கொத்தாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே பிரதி அமைச்சர் அஜித் பீ.பெரேராவும் நாடாளுமன்ற உறுப்பினர் விஜயபால ஹெட்டியாராய்ச்சியும் மேற் கண்டவாறு தெரிவித்தனர்.

அவர்கள் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாட்டில் தற்போது நிலவும் அனைத்துப் பிரச்சினைகளையும் தோற்றுவித்தவர் மஹிந்த ராஜபக்ஷவே.

எனினும் அந்தப் பிரச்சினைகள் அனைத்தும் தற்போது எம்மீது சுமத்தப்பட்டுள்ளன. இருந்த போதிலும் அந்தச் சவால்கள் அனைத்தையும் நாம் முகங்கொடுத்து வெற்றி பெற்றோம். எனவே, டெங்கு நோயின் தாக்கம் அதிகரித் துள்ள நிலையில் இந்தத் தருணத்தில் வேலை நிறுத்தப் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டாம். மக்கள் மீது அக்கறை காட்டுங்கள். பட்டம் பெற்றால் மாத்திரம் போதாது. மனிதாபிமானம் இருக்க வேண்டும். வைத்திய அதிகாரிகள் சங்கத்தினர் போராட்டம் நடத்த மாட்டார்கள் என்று நம்புகின்றோம்.

அண்மைக் காலமாக நாட்டில் தோன்றியுள்ள போராட்டங்களுக்கு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த பொறுப்புக் கூற வேண்டும். உமா ஓயா திட்டம் ஆரம்பிக்கப்படும் போது எந்தவோர் ஆய்வு அறிக்கையையும் பெற்றுக் கொள்ளாமல் மஹிந்த உமா ஓயா திட்டத்தை ஆரம்பித்துள்ளார்.

இதுபோன்று மாலபே சைட்டம் மருத்துவக் கல்லூரிக்கு 60 கோடி ரூபா கடன் கொடுத்து அந்தக் கல்லூரியை தனது பூரண அனுசரணையுடன் வழி நடத்திச் சென்றார்.

ஆகவே, செய்வதெல்லாம் செய்து விட்டு தற்போது எதுவுமே தெரியாதது போன்று நடிக்கின்றார்.- என்றனர். (எ)

## யோகாதின விழாவும் நூல் வெளியீடும்

யாழ்.யோக உலகம் நடத்தும் சர்வதேச மூன்றாவது யோகா தினவிழாவும் 'பிராணாயாமமும், குண்டலினியும்' என்னும் நூல் வெளியீடும் இணைந்த இரு நிகழ்வுகள் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் யோகா உலகம் அமைப்பின் இயக்குநர் எஸ்.உமாசுதன் தலைமையில் நல்லூர் துர்க்காமணி மண்டபத்தில் நடைபெற உள்ளன.

இந்த விழாவின் முதன்மை விருந்தினராக பேராசிரியர் கு.மிகுந்தன், பேராசிரியர் திருமதி துஷ்யந்தி மிகுந்தன் ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாக மருத்துவர் திருமதி விவியன் சத்தியசீலன், கலாநிதி ஆறு. திருமுருகன், கலாநிதி திருமதி சுகந்தினி ஸ்ரீமுரளிதரன் ஆகியோரும் கலந்து சிறப்பிக்க உள்ளனர்.

மிகவும் எதிர்பார்ப்புமிக்க கலை நிகழ்வுகளாக யாழ்.பல்கலைக்கழக நடனத்துறையினரின் வரவேற்பு நடனமும், சித்த மருத்துவ மாணவர்களின் சித்தயோக அசைவுகளும், யாழ்.யோகாஉலகம் அமைப்பின் யோகா மாணவர்களின் சிறப்பு யோகா ஆற்றுகையும் நடைபெற உள்ளன. ஆர்வமுடைய அனைவரும் இந்த நிகழ்வில் இணைந்து பயனடைய முடியும் என்று யாழ். யோகா உலகம் அமைப்பினர் அறிவித்துள்ளனர்.

இந்த அமைப்பினரின் முதலாம், இரண்டாம் யோகா தின நிகழ்வுகள் யோகா ஆர்வலர்கள் மத்தியில் பெரிதும் வரவேற்பைப் பெற்றிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. (இ-ச)

## முதல் தடவையாக இரட்டைத்தள விமான சேவை இலங்கைக்கு!

### அறிமுகப்படுத்துகிறது எமிரேட்ஸ்




கொழும்பு, ஜூலை 01

இலங்கை விமானச்சேவையில் முதற்தடவையாக, எமிரேட்ஸ் விமான நிறுவனம், ஏ380ரக இரட்டைத் தள எயர்பஸ் விமானம் அறிமுகப்படுத்தப்பட உள்ளது. கொழும்பு நோக்கிய இந்தப் புதிய சேவை எதிர்வரும் ஓகஸ்ட் 14 ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது .

இது வாரத்துக்கு ஒரு தடவை இடம்பெறும் என்று குறிப்பிட்டுள்ள விமானப் போக்குவரத்து அமைச்சு அதிகாரி ஒருவர், பயண நடுவில் மத்திய கிழக்கு நாடொன்றில் தரித்து நிற்கும் பயணமாக இது அமையும் என்பதைச் சுட்டிக் காட்டி உள்ளார் .

கடந்த ஏப்ரலில், கட்டு நாயக்க விமான நிலைய ஓடு பாதை விஸ்தரிக்கப்பட்டதைத் தொடர்ந்தே, இந்தப் புதிய சேவை சாத்தியமாகி இருக்கின்றது.

உலகின் இரு இராட்சத விமான உற்பத்தி நிறுவனங்களுள் ஒன்றான எயர்பஸ்ஸின் இந்த விமானம் அகன்ற கட்டமைப்பையும் , இரட்டைத் தளங்களையும் கொண்டுள்ளது. அத்துடன் நான்கு இஞ்ஜின்களைக் கொண்ட ஜெட் விமானமாகவும் அது திகழ்கிறது. 853 பயணிகள் வரை ஏற்றிச் செல்லக்கூடிய ஏ380-800 ரக விமானத்தின் மேற்தளத்தில் 315 பயணிகளும், கீழ்தளத்தில் 538 பயணிகளும் இருக்க முடியும். பயணிகளை ஏற்றிச் செல்லும் உலகின் மிகப் பெரிய ஜெட் விமானம் இது என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

## விகாரைகளிலுள்ள உண்டியல்கள் மக்கள் மயப்படுத்த நடவடிக்கை!

### சஜித் எம்.பி. கூறுகிறார்

நாட்டின் தற்போதைய அரச விகாரைகளில் உள்ள உண்டியல்களைச் சூறையாடாது. கடந்த அரசு சூறையாடி நிரப்பிக் கொண்ட உண்டியல்களை மக்கள் மயப்படுத்தப் போவதாக அமைச்சர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

சீகிரிய பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்ட 31 ஆவது முன்னுதாரண கிராமத்தை நேற்று முன்தினம் திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆங்காங்கே சென்று விகாரைகளில் உள்ள உண்டியல்களை அரசு எடுத்துக் கொள்ளப்போவதாகக்கூறி வரும் கதையை முற்றாக நிராகரிக்கின்றேன்.

கடந்த காலத்தில் ஒப்பந்தங்கள் மூலம் பெற்றுக்கொண்ட சகல பணத்தையும் அரசுடைமையாக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. -என்றார். (எ)

## கினிகத்தேனையில் மீண்டும் மண்சரிவு ஒரு வழிப் போக்குவரத்தால் சிரமங்கள்



ஹற்றன்- கொழும்பு பிரதான வீதியின் கினிகத்தேனை தியகல வீதியில் மீண்டும் மண்சரிவு ஏற்பட்டுள்ளதால் அந்தப் பகுதியில் ஒருவழிப் போக்குவரத்து மாத்திரமே இடம்பெற்று வருவதாக வட்டவளை பொலிஸார் தெரி வித்துள்ளனர்.

அந்தப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு மண மேடு மற்றும் கற்பாறைகள் சரிந்து இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

இந்தநிலையில், அந்தப் பகுதியின் ஊடான போக்குவரத்தைச் சீர் செய்யும் பணியில் வட்டவளை பொலிஸாரும், வீதி அபிவிருத்தி அதிகார சபையினரும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

தற்போது நிலவிவரும் சீரற்ற காலநிலையால் வீதிகளில் மரங்கள் முறிந்து விழுதல் மற்றும் மண்சரிவு அபாயம் காணப்படுவதால் வாகனச் சாரதிகள் மிகுந்த அவதானத்துடன் இருப்பது அவசியம் என்று பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர். (எ)

## வானில் 32 ஆடுகளுடன் 'பட்டி' சிக்கிக்கொண்டனர் இருவர்!

சட்டவிரோதமாக வான் ஒன்றில் ஆடுகளை ஏற்றிச் சென்ற இரண்டு பேர் ஹபரணை நகரில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஹபரணை பொலிஸார் மேற்கொண்ட விசேட தேடுதலில் அந்த நபர்கள் கைது செய்யப் பட்டுள்ளனர்.

வானில் 37 ஆடுகள் இருந்துள்ளன. அவற்றில் மூன்று ஆடுகள் சினையுற்றிருந்தன என்றும் பொலிஸார் கூறியுள்ளனர்.

ஆடுகளை ஏற்றிச் செல்லும் வகையில் வானுக்குள் பட்டி போன்று அமைக்கப்பட்டிருந்தது. ஆடுகளை வெளியில் இருந்து பார்க்க முடியாதபடி கண்ணாடிகள் கறுப்பாக மாற்றப்பட்டிருந்தன.

ஆடுகள் பொலன்னறுவையில் இருந்து கட்டுபொத்த பிரதேசத்தில் எடுத்துச் செல்லப்பட இருந்தன. கைது செய்யப்பட்டவர்கள் நாரம்பலை பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (எ)

# இந்திய - சீன எல்லையில் பதற்றம்!



புதுடில்லி,ஜூலை 01

இந்தியா -சீனா எல்லைப் பகுதியில் இரு தரப்பினரும் 3 ஆயிரம் துருப்புகளை நிறுத்தி உள்ளன. இதனால் அங்கு பதற்றமான நிலை காணப்படுகிறது எனத் தெரிவிக்கப்படுகிறது.

சிக்கிம் பகுதியில் இந்தியா, சீனா மற்றும் நேபாள எல்லைகளின் முச்சந்திப்பில் டோங்லாங் என்னும் பகுதி உள்ளது. அது தங்களுக்குச் சொந்தம் எனக் கூறி அங்கு வீதி அமைக்கும் பணியில் சீனா ஈடுபட்டுள்ளது.

அதற்கு இந்தியாவும், பூட்டானும் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன. இந்த நிலையில், அங்கு இருதரப்பினரும் தமது இராணுவத்தை நிறுத்தி உள்ளனர்.

இது தொடர்பில் இராணுவத் தளபதி ஜெனரல் பிபின் ராவத் தெரிவிக்கையில்-

“எல்லைப் பகுதியில் சீனாவும், இந்தியாவும் 3 ஆயிரம் இராணுவத் துருப்புகளை நிறுத்தி உள்ளன. இது தொடர்பில் புதுடில்லியில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற உள்ளது.

இதில் அனைத்து உயர் மட்ட அதிகாரிகளும் கலந்து கொள்வர்.”- என்றார். (ச)

## இந்தியாவுக்கு சீனா எச்சரிக்கை

டோங்லாங் பகுதியில் இருந்து இந்திய இராணுவத்தைத் திரும்பப் பெறாவிடின் வரலாற்றில் மறக்க முடியாத பாடம் கற்பிக்கப் படும் என இந்தி யாவுக்குச் சீனா எச்சரிக்கை விடுத்துள்ளது.

சிக்கிம் பகுதியில் இந்தியா, சீனா, நேபாள எல்லைகளில் டோங்லாங் அமைந்துள்ள நிலையில் அதற்கு இந்தியாவும்சீனாவும்உரிமை கோரி வருகின்றன.

இந்த நிலையில், இந்தப் பகுதி தமது நாட்டுக்குச் சொந்தம் எனத் தெரிவித்து சீனா அங்கு வீதிகளை அமைக்கும் பணிகளில் ஈடுபட்டுள்ளது.

இந்த நிலையில், இந்தியா தமது நாட்டு இராணுவத்தினரை அந்தப் பகுதியில் நிலை நிறுத்தியுள்ளது. இந்த விடயம் சீனாவுக்குக் கடும் ஆத்திரத்தை ஏற்படுத்தியுள்ள நிலையில் இந்தியா தமது இராணுவத்தைத் திரும்பப் பெற வேண்டும் என சீனா தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றது.

இதற்குப் பதிலடி கொடுத்துள்ள இந்திய வெளியுறவுத் துறை அமைச்சகம், “எல்லைப் பிரச்சினைகளைப் பேச்சு மூலம் அமைதியாகத் தீர்த்துக் கொள்ளவே இந்தியா விரும்புகிறது .

எல்லையில் இருந்து இராணுவத்தை திரும்ப பெற முடியாது”- எனக் கூறியுள்ளது. (ச)

# பழனிச்சாமியின் பினாமி ஆட்சியால் ‘ஜெ’ஆரம்பித்த திட்டங்கள் முடக்கம்!

தஞ்சாவூர், ஜூலை 01

எடப்பாடி பழனிச்சாமி தலைமையிலான பினாமி ஆட்சியால் ஜெயலலிதாவால் தொடங்கப்பட்ட சிறப்பான திட்டங்கள் பல முடங்கி உள்ளன.

-இவ்வாறு அ.தி.மு.க. புரட்சித் தலைவி அம்மா அணித் தலைவர் ஓ.பன்னீர்செல்வம் குற்றம் சாட்டியுள்ளார்.

அ.தி.மு.க. புரட்சித்தலைவி அம்மா அணியின் பொதுக் கூட்டம் தஞ்சாவூரில் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர்மேலும் தெரிவித்தலை வருமாறு:-

ஜெயலலிதாவின் திட்டங்களுக்குச் செயல் வடிவம் கொடுத்து பயனளிக்கும் சூழல் இந்த ஆட்சியில் இல்லை.



பன்னீர்செல்வம் பாய்ச்சல்

எடப்பாடி தலைமையிலான இந்த ஆட்சியில் எங்கு பார்த்தாலும் ஊழலாகத்தான் உள்ளது. இனி ஊழல் இல்லாத அரசைத் தான் பொதுமக்களும், மாணவர்களும் ஏற்றுக் கொள்வர் என்ற நிலை தமிழகத்தில் ஏற்பட்டுள்ளது.

122 எம்.எல்.ஏக்களை வைத்துக்கொண்டு ஆமை வேகத்தில் எடப்பாடி பழனிச்சாமி அரசு செயற்படுகிறது. இந்த ஆட்சியின் கொள்கை என்ன என்பது யாருக்கும்தெரியவில்லை. இதற்காகவா எம்.ஜி.ஆரும், ஜெயலலிதாவும் 45 ஆண்டுகள் உழைத்தனர் என்ற கேள்வி தமிழகத்தில் உள்ள மக்கள் மத்தியில் இப்போது எழுந்துள்ளது.

ஜெயலலிதா தமிழகத்தில் ஆட்சியையும், கட்சியையும் மிக உன்னத நிலைக்குக் கொண்டு சென்றார். இந்த நிலையில் அவர் எதிர்பாராத விதமாக மறைந்து விட்டார். தாயில்லாத பிள்ளைகளாக நாம் இருக்கிறோம். ஜெயலலிதா என்னிடம் தனியாகவும், தலைமைக் கழக நிர்வாகிகள் அனைவரையும் அழைத்து “சசிகலாவை மட்டும் எனது உதவியாளராக வைத்துக் கொள்வேன். மற்ற அனைவரையும் கட்சியில் இருந்து நீக்கி விட்டேன். நான் உயிரோடு இருக்கும் வரை எனது வீட்டில் இந்தக் குடும்பத்தினர் யாரையும் உள்ளே நுழைய விடமாட்டேன்”என்று பல முறை கூறியுள்ளார். அவரின் இலட்சியத்தை நாங்கள் காப்போம். தமிழகத்தில் மீண்டும் ஜெயலலிதா ஆட்சியை ஏற்படுத்துவோம்.-என்றார். (ச)

## அ.தி.மு.கவை மூன்றாகப் பிரித்து அரசியல் செய்கிறது பா.ஜ.க. அரசு!

திருமாவளவன் குற்றச்சாட்டு



சென்னை,ஜூலை01

130 சட்டசபை உறுப்பினர்களையும் 47 நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட அ.தி.மு.கவை 3 அணிகளாகப் பிரித்து தமிழகத்தில் பா.ஜ.க. சுயலாப அரசியல் செய்து வருகிறது.

-இவ்வாறு விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

சென்னை அவனியாபுரத்தில் வைத்து நேற்று வெள்ளிக்கிழமை ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ஜனாதிபதித் தேர்தலில் எடப்பாடி பழனிச்சாமி அரசு பா.ஜ.கவுக்கு ஆதரவு தெரிவித்திருக்கின்றமையை மறுபரிசீலனை செய்ய வேண்டும்.

கட்சிக்குள் பிளவை ஏற்படுத்தியவர்களையே ஆதரிக்கின்றமை அ.தி.மு.கவின் அழிவுக்கே வித்திடும் என அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# பசிக்கு எதிராகப் போராடும் இந்திய இளைஞருக்கு மகாராணி எலிசபெத் விருது வழங்கிக் கௌரவிப்பு!

பசி மற்றும் ஊட்டச்சத்து இன்மைக்கு எதிராகப் போராடி வரும் அங்கித் கவத்ரா என்னும் 25 வயதுடைய இந்திய இளைஞருக்கு பிரித்தானிய மகாராணி எலிசபெத் இளம் தலைவர்கள் விருது வழங்கிக் கௌரவித்துள்ளார்.

பக்கிங்காம் அரண்மனையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

இந்தியாவில் பசி மற்றும் உணவை வீணாக்குதலை ஒழிக்க அங்கித், “பீடிங் இந்தியா”என்னும் அமைப்பைத் தொடங்கியுள்ளார். 2014 ஆம் ஆண்டு5பேரோடு ஆரம்பிக்கப்பட்ட இந்த அமைப்பு, இப்போது இந்தியாவில் உள்ள 43 நகரங் களில் செயற்பட்டு வருகிறது. இதில் 4 ஆயிரத்து 500தன்னார்வத் தொண்டர்கள் பணி புரிகின்றனர். இதன் மூலம் மீதமாகும் உணவுகள் மக்களுக்கு அளிக்கப்படுகிறது.

இந்தச் சேவையைப் பாராட்டியே இவருக்கு இந்த உயரிய விருது வழங்கப்பட்டது.

அங்கித் பேசுகையில்-

“நான்கனவில்கூட நினைத்துப் பார்க்காத விஷயம் நிகழ்ந்துள்ளது. பக்கிங்காம் அரண்மனையில் பிரித்தானிய மகாராணியின் கையால் விருது பெற்றமையைப்பெருமையாகக் கருதுகிறேன். இது இந்தியா மற்றும் பிரித்தானியா நாடுகளுக்கு இடையேயான நீண்ட காலப் பாரம்பரியத்தை வலுப்படுத்துவதாக அமைந்துள்ளது. இந்த பயணத்தின்போது ஏராளமான முன்னணித் தொழிலதிபர்களையும், கொடையாளிகளையும் சந்தித்தேன். ஊட்டச்சத்து பற்றாக்குறையால் பாதிக்கப்பட்டுள்ள மக்கள்,



அன்றாடம் மூன்று வேளை உணவுக்கே போராட வேண்டிய நிலையில் இருக்கின்றனர். அவர்களுக்காகவே நாங்கள் செயற்படுகிறோம்”- என்றார்.

பிரித்தானிய மகாராணி இளம் தலைவர் விருதுக்காக, உலகம் முழுவதும் உள்ள 60 தலைசிறந்த இளைஞர்களைத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். அவர்களின் வயது 18 முதல் 29 இற்குள் இருக்க வேண்டும். தங்களின் திறமையைக் கொண்டு மற்றவர்களின்வாழ்க்கையை நல்ல முறையில் மாற்றும் இளம் தலைவர்களுக்கு இந்த விருது வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஐ.எஸ். 'அராஜக ஆட்சி'யை ஈராக்கில் வீழ்த்தி விட்டோம்!

## அந்த நாட்டுப் பிரதமர் ஹைடர் பெருமிதம்



பக்தாத், ஜூலை 01

ஐ.எஸ். தீவிரவாதிகளின் தலைமைப் பீடமாக அறிவிக்கப்பட்ட மொசூல் நகர மசூதியை கடந்த புதன் கிழமை கைப்பற்றியதன் மூலம் அவர்களின் அராஜக ஆட்சியை வீழ்த்தி விட்டோம்.

-இவ்வாறு ஈராக் பிரதமர் ஹைடர் அல்-அபாடி அறிவித்துள்ளார்.

ஐ.எஸ். தீவிரவாதிகளின் போலி இஸ்லாமிய ஆட்சியின் முடிவு நாளை இப்போது நாம் காண்கிறோம். இந்தச் சாதனைக்காக ஈராக் இராணுவம் மற்றும் பன்னாட்டு கூட்டுப் படைகளைப் பாராட்டுகிறேன். இந்தப் போரின் இறுதிக் கட்டம் இன்னும் சில நாள்களிலோ, ஒரு வாரத்துக்குள்ளாகவோ எட்டப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

சிரியா மற்றும் ஈராக்கில் உள்ள அரச படைகளை எதிர்த்து தொடர்ச்சியாக ஐ.எஸ். தீவிரவாதிகள் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். ஈராக் மற்றும் சிரியாவின் ஒரு பகுதி, துருக்கியின் ஒரு பகுதி ஆகியனவற்றை இணைத்து தனி இஸ்லாமிய நாட்டை உருவாக்குவதே இவர்களுடைய திட்டமாகும். இதுமட்டுமல்லாமல் எதிர்காலத்தில் அயல் நாடான லெபனான், பாலஸ்தீனம், இஸ்ரேல், ஜோர்தான், துருக்கி ஆகிய நாடுகளையும் ஒன்றிணைத்து பெரிய அளவிலான இஸ்லாமியத் தேசத்தை உருவாக்கவும் திட்டமிட்டனர்.

இதன் முதற்கட்டமாக, மூன்றாண்டுகளுக்கு முன்னர் சிரியாவின் எல்லையோரம் உள்ள ஈராக்கின் மொசூல் நகரைக் கைப்பற்றினர். அதனைத் தொடர்ந்து இவர்கள் அங்கிருக்கும் கிறிஸ்தவர்கள், யாஷ்டிகள் மற்றும் குர்த் இன மக்களை ஊரை விட்டு அடித்து விரட்டினர்.

இந்த நிலையில், அங்குள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க நூரி மசூதியைத் தங்களது தலைமை இடமாக்கி ஈராக் மற்றும் சிரியா நாடுகளின் எல்லையோரத்தில் உள்ள சில இடங்களை அடுத்தடுத்துக் கைப்பற்றினர். பல இடங்களில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க கிறிஸ்தவ தேவாலயங்களை இடித்துத் தரை மட்டமாக்கினர். அப்பகுதியில் வசித்த கிறிஸ்தவர்களையும் ஊரைவிட்டேவிரட்டியடித்தனர். அங்கு வாழும் முஸ்லிம் பெண்களின் மீதும் மதக் கட்டளை என்ற பெயரில் பெண்ணுறுப்பைச் சிதைத்தல் உட்பட பல கட்டுப்பாடுகளைவிதித்து அட்டூழியம் செய்து வருகின்றனர்.

இந்த நிலையில், அமெரிக்க விமானப்படையின் துணையுடன் ஐ.எஸ். தீவிரவாதிகளைத் தங்கள் நாட்டில் இருந்து ஒழித்துக்கட்ட ஈராக் அரசு தீர்மானித்தது. கடந்த இரண்டு ஆண்டுகளாக மொசூல் நகரை மீட்பதற்காக ஈராக் படைகளுக்கும் ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கும் இடையில் கடுமையான போர் நடைபெற்று வருகிறது, கடந்த மூன்று மாதங்களாக உச்சக்கட்டத்தை அடைந்துள்ள இந்தப் போரின் விளைவாக, ஐ.எஸ். தீவிரவாதிகள் தங்களது தலைமை ஆட்சிப் பீடமாக அறிவித்த மொசூல் நகரில் உள்ள நூரி மசூதி மற்றும் அதையொட்டியுள்ள அல்-ஹட்பா கோபுரத்தை ஈராக் படைகள் கைப்பற்றினர்.

இதன் மூலம் ஐ.எஸ். தீவிரவாதிகளின் அராஜக ஆட்சியை வீழ்த்தி விட்டோம் என ஈராக் பிரதமர் ஹைடர் அல்-அபாடி அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

### ஐ.நா. செயலற்று இருக்கிறது!

#### அமெ.தூதுவர் விசனம்

பாதுகாப்புச் சபையின் தீர்மானங்களை ஈரான் மீறியமை தொடர்பில் ஐ.நா. எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாமல் செயலற்று இருக்கிறது என ஐ.நாவுக்கான அமெரிக்கத் தூதுவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஐ.நாவின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் வியாழக்கி ழமை நடைபெற்ற பாதுகாப்புக் கவுன்ஸில் கூட்டத்தின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஐ.நாவின் தீர்மானங்களை மீறுகின்றமை தொடர்பில் நாம் இனி மேலும் பொறுமை காக்க மாட்டோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

அணுசக்தி திட்டத்தைக் கட்டுப்படுத்தும் நோக்கில் கடந்த 18 மாதங்களுக்கு முன்னதாக உலகின் முக்கிய சில நாடுகளுடன் ஈரான் ஒப்பந்தம் ஒன்றை மேற்கொண் டது.எனினும், குறித்த ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்படாத சில விடயங்களை ஈரான் மேற்கொண்டு வருகிறது என அந்த நாட்டின்மீது குற்றச்சாட்டுகள் இருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

### பசிபிக் கடற்பகுதியில் கரை ஒதுங்கின வடிவமற்ற உயிரினங்கள்!

வடமேற்கு பசிபிக் கடற்பகுதியில் இந்த வருடம் பைரோசோம்கள் என அழைக்கப்படும் வடிவமற்ற உயிரினம் அதிக அளவில் கரை ஒதுங்கியுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர் பில் தேசிய கடல் மற்றும் வளிமண்டல நிர் வாகம் வெளியிட்ட அறிக்கையில்-

பைரோசோம்கள் உருளையான கடலுக்கு அடியில் வாழக்கூடிய உயிரினம். இவை தொடுவதற்கு வழவழப்பாக மற்றும் மெல்லியதாக இருக்கும். இவை மிதமான வெப்பநிலை யில் வாழக்கூடியன. 1980 ஆம் ஆண்டுகளில் இருந்து இது பற்றி விஞ்ஞானிகளும் ஆராய்ச்சி நடத்தி வருகின்றனர்.

ஆனால், 2014 ஆம் ஆண்டில்தான் முதல் பைரோசோம் கண்டு பிடிக்கப்பட்டது. இவை பசிபிக் பகுதியைத் தான் உறைவிடமாகக் கொண்டுள்ளனவா? இல்லை குளிர் காலம் வந்தவுடன் வேறு இடத்துக்குச் சென்று விடுகின்றனவா என்பது பற்றி ஆராய்ச்சி செய்து வருகின்றனர். மேலும் கடல் உயிரினங்கள் இது போன்று வெளியே வருகின்றமை சுற்றுச் சூழலில் ஏற்படும் மாறுபாட்டைக் காட்டுகிறது.

ஆராய்ச்சியின் போது 2 அடி நீளமுள்ள பைரோசோம்கள் ஒரெகன் கடல் பகுதியில் கண்டெடுக்கப்பட்டன. மற்றும் கொலம்பியா ஆற்றில் 60 ஆயிரம் பைரோசோம் கள் இருந்தன. மேலும் இவை பற்றி ஒரெகன் பல்கலைக் கழகம் தொடர்ந்து ஆராய்ச்சி நடத்தி வருகிறது. -என்றுள்ளது. (ச)





### 10 ஆயிரம் தொன் நிறை கொண்ட சீனாவின் புதிய போர்க் கப்பல்!

பீஜிங், ஜூலை 01

10 ஆயிரம் தொன் நிறை கொண்ட புதிய போர்க் கப்பல் சீனாவின் கடற்படையில் இணைக்கப்பட்டுள்ளது.

ஷங்காய் நகரில் உள்ள ஜியாங்னான் கப்பல் கட்டும் துறை முகத்தில் இந்த இணைப்பு விழா கடந்த புதன்கிழமை நடைபெற்றது.

உலகின் அதிகமான மக்கள் தொகையை கொண்ட பெரிய நாடாக அறியப்படும் சீனா, ஆயுத பலத்திலும், விண்வெளித் துறையிலும் இந்தியாவை மிஞ்சி நிற்க வேண்டும் என்ற நோக்கத்தில் பல்வேறு அதிரடி நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

இந்திய பெருங்கடல் பகுதியில் அமெரிக்கா மற்றும் இந்தியாவின் கடற்படை ஆதிக்கத்துக்கு ஈடு கொடுக்கும் வகையில் தங்கள் நாட்டு கடற்படையை அதி நவீனப்படுத்த சீனா தீர்மானித்துள்ளது.

இந்த நிலையில், முழுக்க முழுக்க உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட 10 ஆயிரம் தொன் நிறை கொண்ட போர் விமானங்கள், ஹெலிக்கொப்டர்கள் மற்றும் ஆயுதங்களை தாங்கி செல்லக் கூடிய அதிநவீன போர் கப்பலை தனது நாட்டுக் கடற்படைக்குச் சீனா அர்ப்பணித்துள்ளது.

புதிய தலைமுறைக்கான அதிநவீன போர்க் கப்பல்கள் வரிசையில் தயாரிக்கப்பட்டுள்ள இந்தப் போர்க்கப்பலில் வான்வழித் தாக்குதல்களை தடுத்து அழிக்கும் ஆயுதங்கள், வான்வெளியில் ஏவுகணைகளைத் தாக்கி அழிக்கும் ஆயுதங்கள் மற்றும் கப்பல்களில் இருந்தும் நீர்மூழ்கிக் கப்பல்கள் வழியாக வரும் தாக்குதல்களை எதிர்க்கவும் கூடிய அதிநவீன ரேடார்களும் அதி நவீன கருவிகள் என்பன இணைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

### இரவு நேரப் பயணச் சத்தம்: ஆண்களுக்கு மலட்டுத் தன்மை! ஆய்வில் தகவல்

சியோல், ஜூலை 01

இரவு நேரப் போக்குவரத்துச் சத்தத்தால் ஆண்களுக்கு மலட்டுத் தன்மை ஏற்படும் என ஆய்வில் தெரிய வந்துள்ளது

போக்குவரத்து நெரிசலால் ஏற்படும் உடல் நலக் கோளாறுகள் மற்றும் பாதிப்புகள் தொடர்பில் சியோல் நஷனல் பல்கலைக் கழக விஞ்ஞானிகள் ஆய்வு நடத்தினர்.

2 லட்சத்து 6 ஆயிரத்து ஆண்கள் இந்த ஆய்வில் பங்கு பற்றினர். அவர்கள் 20 முதல் 59 வயது வரையானவர்கள் .

இந்த அந்த ஆய்வில் அதிக அளவு போக்கு வரத்துச் சத்தத்தால் ஆண்களுக்கு மலட்டுத் தன்மை ஏற்படும் அபாயம் இருக்கின்றமை கண்டறியப்பட்டுள்ளது. குறிப்பாக இரவு நேரத்தில் மிகவும் பரபரப்பான போக்குவரத்து நெரிசல் மிகுந்த பகுதியில் பணிபுரிவோர் மற்றும் தங்கியிருப்போர் இத்தகைய பாதிப்புக்கு உள்ளாகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச)

# இலங்கை அணியில் மீண்டும் களமிறங்கினார் அமில அபொன்சோ!




கொழும்பு, ஜூலை 01
இடது கை சுழல் பந்து வீச்சாளர்களில் ஒருவரான அமில அபொன்சோ, காலியில் நேற்று ஆரம்பமான ஸிம்பாவே அணிக்கு எதிரான தொடரின் முதல் இரண்டு போட்டிகளுக் குமான இலங்கை அணியில் மேலதிக வீரர்களில் ஒருவராக இணைக்கப்பட் டுள்ளார்.

இதற்கு முன்னர், முதல் இரண்டு போட்டிகளுக்கும் இலங்கை கிரிக்கெட் சபை 13 வீரர்கள் அடங்கிய பட்டியலை வெளியிட் டிருந்தது. அபொன்சோவின் உள்ளடக்கத்துடன் இப்பட்டியல் 14 வீரர்களைக் கொண்டதாக மாறியுள்ளது.

மேலும், இலங்கை அணித் தலைவருக்கு இதன் மூலம் அணியில் மூன்று முன்வரிசை சுழல் பந்து வீச்சாளர்களை வைத்திருக்கும் வாய்ப்பும் கிட்டியிருக்கின்றது.

இதுதொடர்பில் இலங்கை அணியின் தலைவர் அஞ்சலே மத்தியூஸ் தெரிவிக்கையில்-

என்னுடைய அணியில் இருக்கும் அமில அபொன்சோ, லக்ஷன் சந்தகன் மற்றும் அகில தனன்ஜய ஆகிய மூன்று சுழல் வீரர்களும் மிகவும் தரமான ஆட்டத்தைக் காட்டக்கூடியவர்கள்.

மைதானத்தின் நிலை மைகளை அவதானித்து, யார் (விளையாட) பொருத் தமானவர்கள் என்பதை தெரிவு செய்யவுள்ளேன் எனத் தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலிய அணிக்கு எதிரான போட்டியொன்றில் கடந்த வருடம் அறிமுக மாகியிருந்த அமில அபொன்சோ, அந்த அணிக்கு எதிரான ஒரு நாள் தொடரில் ஐந்து போட்டிக ளிலும் விளையாடி இருந் தார் 25:85 என்கிற சரா சரியில் 7 விக்கெட்டுக் களையும் சாய்த்திருந்தார்.

எதிரணியைக் கட்டுப்ப டுத்தும் வகையில் பந்து வீசும் ஆற்றலை தன்ன கத்தே தனித்துவமாக வைத் திருக்கும் அபொன்சோ, ஒரு ஓவருக்கு சராசரியாக 4:17 ஓட்டங்களை மாத் திரமே கொடுத்திருக்கின் றார்.

இவ்வாறான சிறப்பான பந்து வீச்சினை வெளிக் காட்டியிருந்தும், அபொன சோவிற்கு இலங்கை அணி இறுதியாக விளையாடிய நான்கு ஒரு நாள் தொடர்க ளிலும் வாய்ப்பு அளிக்கப் படாது விடப்பட்டமைக் கான காரணம் தெரிய வில்லை.

இலங்கை அணியில் அறிமுகமானதைத் தொடர்ந்து, இவ்வருட ஆரம்பத்தில் அபொன்சோ இலங்கை 'ஏ' அணி மற்றும் இலங்கை இளையோர் அணி ஆகியவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்தி விளையாடியிருந்தார்.

மொரட்டுவ செபஸ்டியன் கல்லூரியின் முன்னாள் அணித் தலைவரான அபொன்சோ, தற்போது உள்ளூர் கிரிக்கெட்டில் றாகம அணிக்காக விளை யாடி வருகின்றார்.

இதுவரை முதல்தர போட் டிகளில் 162 விக்கெட்டுக் களை பதம் பார்த்திருக்கும் அபொன்சோ, 52 விக்கெட் டுக்களை லிஸ்ற் 'ஏ' போட்டிகளிலும் கைப்பற்றியிருக்கிறார் என் பதும் குறிப்பிடத்தக்கது.

# ஸிம்பாவே தொடரில் இருந்து முழுமையாக நீக்கப்பட்டார் குசல்!




கொழும்பு, ஜூலை 01
இலங்கை அணியின் அதிரடித் துடுப்பாட்ட வீரர் குசல் ஜனித் பெரேரா, நேற்று ஆரம்பமான ஸிம்பாவே அணியுட னான கிரிக்கெட் தொடரில் இருந்து முழுமையாக நீக் கப்பட்டுள்ளார் எனத் தெரி விக்கப்படுகின்றது.

அண்மையில் நிறைவுற்ற சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் இந்திய அணியு டனான மோதலின்போது சிறந்த முறையில் துடுப் பாடி வந்த குசல் பெரேரா, தொடை எலும்பில் ஏற்பட்ட உபாதையின் காரணமாக முழுமையாகத் துடுப்பாடாமல், மைதானத் தில் இருந்து இடையில் வெளியேறினார்.

இந்தக் காயம் முழுமை யாகக் குணமடையாத காரணத்தினாலேயே இவர் இத்தொடரில் இருந்து முழுமையாக நீக்கப்பட் டுள்ளார்.

மேலும், தொடர்ந்து ஓய்வெடுக்க வேண்டிய நிலைக்கும் அவர் உள்ளாக் கப்பட்டுள்ளார்.

குசல் பெரேரா தொடரில் இருந்து நீக்கப்பட்டமை மற்றும் அவரது அடுத்த கட்டம் குறித்து அணித் தலைவர் அஞ்சலோ மத்தியூஸ் கருத்துத் தெரிவிக்கையில்-

குசல் பெரேரா இந்தத் தொடரில் இருந்து முழுமை யாக நீக்கப்பட்டுள்ளார். அவரது உபாதை குணம டைய சுமார் 8-12 வாரங் கள் வரை எடுக்கும் என மருத்துவத் தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறான ஒரு நிலை யில், அடுத்து இடம்பெற வுள்ள இந்திய அணியுட னான தொடரிலும் குசல் விளையாடுவது சந்தேகத் திற்கிடமாகியுள்ளது. எனவே, அவர் குறித்து மிகவும் அவதானமாக இருக்க வேண்டி உள்ளது என்று தெரிவித்துள்ளார்.

அண்மையில் பங்களா தேஷுடன் இடம்பெற்ற போட்டிகளுக்கு முன்னரான பயிற்சி ஆட்டத்தின்போதும் குசல் பெரேரா தொடை எலும்பு உபாதைக்கு உள் ளாகியிருந்தார்.

எனினும் ஒரு வாரம் அளவில் ஓய்வில் இருந்த அவர், உபாதையில் இருந்து மீண்டு, அந்த அணியுடனான இருபதுக்கு 20 போட்டியில் விளையாடியிருந்தார் என்பது குறிப்பிடத் தக்கது.

சம்பியன்ஸ் கிண்ணத்தில் குசல் பெரேராவிற்குப் பதி லாக அணியில் இணைக் கப்பட்ட தனன்ஜய டி.சில் வாவும் ஸிம்பாவே அணி யுடனான முதல் இரண்டு போட்டிகளுக்குமான அணியில் இணைக்கப் படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# எனக்கும் மலிங்கவுக்கும் தனிப்பட்ட குரோதங்கள் எதுவும் இல்லை!

## -அமைச்சர் தயாசிறி



கொழும்பு, ஜூலை 01
எனக்கும் மலிங்கவுக்கும் இடையில் தனிப்பட்ட குரோதங்கள் எதுவும் இல்லை என்று அமைச்சர் தயாசிறி தெரிவித்துள்ளார்.

விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜய சேகர, இலங்கை வீரர்க ளின் உடற்தகுதி குறித்து எழுப்பியிருந்த விமர்சனங் கள் தற்போது பூதாகரமாக சென்று கொண்டிருக் கையில், அது தொடர்பான தனது கருத்தை நேற்று முன்தினம் ஊடக சந்திப் பொன்றில் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் தெரிவித்தவை வருமாறு:-

எனக்கு எந்த தனிப்பட்ட வீரர் மீதும் கோபம் கிடை யாது. எனது விமர்சனம் முழு அணியியையும் குறித்ததாகவே இருந்தது. அதற்கு காரணம் அவர் களது உடற்தகுதி கேள்விக் குறியானதாகக் காணப் பட்டிருந்ததே, என்னிடம் அதற்கான ஆதாரங்கள் உள்ளன.

மலிங்க மீது, எந்த நடவடிக்கையையும் நான் எடுத்திருக்கவில்லை. இலங்கை கிரிக்கெட் சபையே அவரது விமர்ச னத்திற்காக அவர் மீது நடவடிக்கை எடுத் திருந்தது.

மலிங்க இருக்கும் வீரர்க ளில் மிகவும் திறமையா னவர். அவர் இலங்கை அணிக்கு கிடைத்த பெறு மதி வாய்ந்த வீரர்களில் ஒருவர். அவர் போட்டித் தடைகளை பெறுவதற்கான ஒரு கட்டத்தை நெருங்கி யிருந்தார். எனினும் நான் அவ்வாறு இடம்பெறு வதை விரும்பவில்லை என் றும் அவர் தெரிவித்துள்ளார்.

# இலங்கை அணியை வீழ்த்தி;




# ஆஸி. மகளிருக்கு இலகு வெற்றி!

பிரிஸ்டல், ஜூலை 01

மகளிர் உலகக் கிண்ணத்துக்கான குழு நிலைப் போட்டிகளில் நேற்று முன்தினம் இலங்கை மற்றும் ஆஸ்திரேலிய மகளிர் அணிகளுக்கு இடையிலான போட்டி பிரிஸ்டல் கவுன்டி கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்றது.

போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஆஸ்திரேலிய மகளிர் கிரிக்கெட் அணித் தலைவி மெக் லேன்னிங் முதலில் இலங்கை மகளிர் அணியை துடுப்பாடுமாறு பணித்தார்.

அதற்கமைய முதலில் துடுப்பாடக் களமிறங்கிய இலங்கை மகளிர் அணி முதல் விக்கெட்டை ஓட்ட மெதுவும் பெறாத நிலையில் இழந்தது. ஆரம்ப துடுப்பாட்ட வீராங்கனையான நிப்புனி ஹன்சிக்கா, போட்டியின் முதல் ஓவரை வீசிய எலிஸ் பெர்ரியின் பந்து வீச்சில் எல்.பி. டபிள்யூ முறையில் ஆட்டமிழந்து ஓய்வறை திரும்பினார்.

அவரையடுத்து களமிறங்கிய சமரி அடபத்து, சமரி பொல்கம்பொலவுடன் இணைந்து ஓட்டங்களைக் குவிக்க ஆரம்பித்தார். 33 பந்துகளை எதிர்கொண்ட சமரி பொல்கம்பொலவும் ஆஸ்திரேலிய அணியின் பந்து வீச்சை தாக்குப் பிடிக்க முடியாமல் எல்.பி. டபிள்யூ முறையில் வெறும் 6 ஓட்டங்களுடன் வெளியேறினார்.

அவரைத் தொடர்ந்து இலங்கை மகளிர் அணியின் விக்கெட்டுகள் சீரான இடைவெளிகளில் இழந்தாலும் இறுதிவரை ஆட்டமிழக்காமல் துடுப்பாடிய சமரி அடபத்து 143 பந்துகளை எதிர்கொண்ட நிலையில், 22 பவுண்டரிகள் மற்றும் 6 சிக்ஸர்கள் உள்ளடங்கலாக 178 ஓட்டங்களை விளாசினார். எனினும், ஷசிகலா சிறிவர்தன 24 ஓட்டங்களை பெற்று தனது பங்களிப்பை வழங்கிய போதிலும் ஏனைய துடுப்பாட்ட வீராங்கனைகள் அனைவரும் ஒற்றை இலக்க ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து சென்றனர்.

சிறப்பாகத் துடுப்பாடிய சமரி அடபத்து 124 ஓட்டங்களை பவுண்டரிகள் மூலமே பெற்றுக்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

இறுதியில் இலங்கை மகளிர் அணி 50 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுகள் இழப்பிற்கு 257 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

ஆஸ்திரேலிய மகளிர் அணி சார்பாக சிறப்பாக பந்து வீசிய நிகோல் போல்டன், கிறிஸ்டன் பீம்ஸ் மற்றும் எலிஸ் பெர்ரி ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

அதனையடுத்து 258 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பாடக் களமிறங்கிய ஆஸ்திரேலிய மகளிர் கிரிக்கெட் அணி தனது முதலாவது விக்கெட்டை 5 ஓட்டங்களில் இழந்தது. பின்னர் 2 ஆவது விக்கெட்டுக்காக களம் நுழைந்த ஆஸ்திரேலிய மகளிர் அணித் தலைவி மெக் லேன்னிங் மற்றைய ஆரம்பத் துடுப்பாட்ட வீராங்கனையுடன் இணைந்து இரண்டாவது விக்கெட்டுக்காக 133 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றார்.

இரண்டாவது விக்கெட்டாக நிகோல் போல்டன் எட்டு பவுண்டரிகள் உள்ளடங்கலாக 60 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஷசிகலா சிறிவர்தனவின் பந்து வீச்சில் ஹன்சிகாவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அதனைத் தொடர்ந்து களமிறங்கிய எலிஸ் பெர்ரி அணித் தலைவி மெக் லேன்னிங் உடன் இணைந்து ஆட்டமிழக்காமல் 39 ஓட்டங்களை பங்களிப்புச் செய்து அணியின் வெற்றியை உறுதி செய்தார்.

அதிரடியாகத் துடுப்பாடிய ஆஸ்திரேலிய மகளிர் அணித் தலைவி மெக் லேன்னிங் 19 பவுண்டரிகள் மற்றும் ஒரு சிக்ஸர் அடங்கலாக ஆட்டமிழக்காமல் 152 ஓட்டங்களைக் குவித்தார். ஆஸ்திரேலிய மகளிர் அணி 43.5 ஓவர்களில் இரண்டு விக்கெட்டு களை மாத்திரமே இழந்து 37 பந்துகள் எஞ்சிய நிலையில் இலகுவாக வெற்றி இலக்கை அடைந்தது. அதேநேரம், இலங்கை மகளிர் அணி சார்பாக ஸ்ரீபாலி வீரக்கொடி மற்றும் ஷசிகலா சிறிவர்தன ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

உலகக் கிண்ணப் போட்டிகளில் இலங்கை மகளிர் அணி பங்குபற்றும் அடுத்த போட்டி இங்கிலாந்து மகளிர் அணிக்கு எதிராக நாளை டான்டனில் நடைபெறவுள்ளது.

## முதலாவது ஒரு நாள் போட்டி

## இலங்கையை வீழ்த்தியது ஸிம்பாவே

இலங்கை வந்துள்ள ஸிம்பாவே அணிக்கும் இலங்கை அணிக்கும் இடையில் நேற்று நடைபெற்ற சர்வதேச ஒருநாள் போட்டியில் ஸிம்பாப்வே அணி 6 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றுள்ளது.

காலியில் நடைபெற்ற முதலாவது சர்வதேச ஒருநாள் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 5 விக்கட் இழப்பிற்கு 316 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் குசல் மெண்டிஸ்86ஓட்டங்களையும், உப்புல் தரங்க 79 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் டென்டய் சட்டாரா 49 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும், சொலமன் மயர் 47 ஓட்டங்களைக் கொடுத்து 1 விக்கெட்டையும் கைப்பற்றினர்.

ஸிம்பாப்வே அணிக்கு 317 என்ற ஓட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்ட நிலையில் அந்த அணி 47.4 ஓவர்களில் 4 விக்கட்டுகளை இழந்து 322 ஓட்டங்களை பெற்று வெற்றி பெற்றது.

சொலமன் மயர் 96 பந்துகளை எதிர்கொண்டு 112 ஓட்டங்களை அணிக்காக பெற்றுக்கொடுத்தார். ஸேன் வில்லியம்ஸ் 65 ஓட்டங்களையும், சிகெந்தர் ரஸா 67 ஓட்டங்களையும் பெற்றனர்.

## நேற்றைய போட்டியில்:

# குசல் மெண்டிஸ் 1,000; உபுல் தரங்க 6,000!



காலி, ஜூலை 01

ஸிம்பாப்வேக்கு எதிரான நேற்றைய ஒருநாள் போட்டியில் மெண்டிஸ் மற்றும் தரங்க ஆகியோர் தமது சர்வதேச கிரிக்கெட் பயணத்தில் ஒவ்வொரு மைல்கல்களைக் கடந்துள்ளனர்.

காலியில் நடைபெற்ற ஸிம்பாப்வே அணியுடனான முதலாவது ஒரு நாள் போட்டியில் இலங்கை அணியின் இளம் துடுப்பாட்ட நட்சத்திரங்களில் ஒருவரான குசல் மெண்டிஸ் ஒரு நாள் போட்டிகளில் 1000 ஆவது ஓட்டத்தைக் கடந்துள்ளார்.

17 வருடங்களின் பின்னர் காலி சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் ஆரம்பமாகியிருந்த இந்த ஒரு நாள் போட்டியில், குசல் மெண்டிஸ் இலங்கை அணியின் முதல் விக்கெட்டைத் தொடர்ந்து களமிறங்கியிருந்தார். மைதானத்தில் நுழைந்த நேரத்தில் 1000 ஓட்டங்களை பூர்த்தி செய்ய அவருக்கு மேலதி கமாக 28 ஓட்டங்கள் தேவைப்பட்டிருந்தன.

தொடர்ந்து போட்டியின் 17 ஆவது ஓவரின்போது, சோலமன் மைர் வீசிய ஆறாவது பந்தில் பவுண்டரி ஒன்றினை விளாசி மெண்டிஸ் தனது 1000 ஆவது ஒரு நாள் ஓட்டத்தைப் பெற்றுக்கொண்டார்.

மெண்டிஸிற்கு, 1000 ஓட்டங்களைப் பூர்த்தி செய்ய 28 இன்னிங்ஸ்கள் தேவைப்பட்டிருக்கின்றன. இதன் மூலம் இலங்கை அணி சார்பாக, ஒரு நாள் போட்டிகளில் விரைவாக 1000 ஓட்டங்களைக் கடந்த இரண்டாவது வீரர் என்ற சாதனையையும் மெண்டிஸ், உபுல் தரங்கவுடன் பகிர்ந்து கொண்டுள்ளார்.

முன்னதாக, 1979ஆம் ஆண்டில் இலங்கை அணியின் முன்னாள் வலது கை துடுப்பாட்ட வீரர், றோய் டயஸினாலேயே அதி விரைவாக (27 இன்னிங்ஸ்கள்) ஒரு நாள் போட்டிகளில் 1000 ஓட்டங்கள் கடக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இப்போட்டியில் சிறந்த முறையில் துடுப்பாடிய குசல் மெண்டிஸ், ஒரு சிக்ஸர் மற்றும் 8 பவுண்டரிகள் உள்ளடங்கலாக 80 பந்துகளில் 86 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார்.

அதே சமயம், இலங்கை அணியின் மற்றொரு துடுப்பாட்ட வீரர்களில் ஒருவரான உபுல் தரங்கவும் இந்த போட்டி மூலம், ஒரு நாள் போட்டிகளில் தனது 6000 ஓட்டங்களைக் கடந்திருக்கின்றார். நேற்றைய போட்டியில் 14 ஓட்டங்களை எடுத்த வேளையில் அவர் இந்த மைல்கல்லைக் கடந்தார்.

32 வயதாகும் உபுல் தரங்க இதற்காக 192 இன்னிங்ஸ்களை எடுத்துக்கொண்டதோடு, இலங்கை அணி சார்பாக ஒரு நாள் போட்டிகளில் 6000 ஓட்டங்களைத் தாண்டிய 8 ஆவது வீரராக தன்னைப் பதிவு செய்து கொள்கின்றார்.

## ரூ.2கோடிலஞ்சம்

(04ஆம்பக்கத்தொடர்ச்சி...)

அப்போது நான், 'இலங்கையில் உள்ள யாருடன் தொடர்பு கொண்டீர்கள்? எனக் கேட்டதற்கு இங்கு எதிரிக் கூண்டில் ஆறாவது நபராக உள்ளவரை (சிவதேவன்துஷாந்தன்) சுவிஸ் குமார் எனக்கு காட்டி இருந்தார்.

இதில் ஆறாவதாக உள்ள நபருடன்சேர்ந்துஇலங்கையில் உள்ள ஏனையவர்கள் ஏற்பாடு செய்யப்பட்டனர். அதற்காக அந்த பெண்ணின் தாயாருடன் பிறிதொரு வழக்கில் தொடர்புடையஏனையமூன்றுபேரையும் தம்முடன் கூட்டுசேர்த்தனர் என சுவிஸ்குமார் என்னிடம் கூறினார்.

பின்னர் மீண்டும் நான் மகஸீன் சிறைக்கு கொண்டு செல்லப்பட்டேன். அங்கே நிஷாந்த சில்வாவிடம் சுவிஸ்குமார் சொன்ன விடயங்களை சொன்னேன். அவர் அங்கு வைத்து எனது வாக்குமூலத்தைப் பதிவு செய்தார்.

அது எப்படியோசுவிஸ் குமாருக்கு தெரிந்துவிட்டது. நான் மீண்டும் வவுனியா சிறைக்கு வந்த போது 'குற்றத் தடுப்பு புலனாய்வுத் துறையினருக்கு சொன்ன விடயத்தை நீதிமன்றில் சொல்லக் கூடாது. சொன்னால் ஏனைய வழக்குகளுக்கு போய் வரும் வேளைகளில் உனக்குஉயிர்ஆபத்துஏற்படும்' என என்னை மிரட்டினார். அத்துடன்உன்மனைவிக்கும்வித்தியாவுக்குநடந்து போன்றேநடக்கும் என்று மிரட்டினார்.

இந்த அச்சுறுத்தல்கள் தொடர்பில் மகசீன் சிறைச்சாலை உத்தியோகத்தர்களுக்கும், புத்தளம் நீதிமன்றிலும் தெரியப்படுத்தினேன்.

வித்தியாவை வன்புணர்வு செய்தபோதுஎடுத்தவீடியோவை சுவிஸ்குமாருக்கு தொலைபேசி ஊடாக அனுப்பியுள்ளார்கள். அவர் அதனை கூகிள் டிரைவ் மூலம்வெளிநாட்டுக்குஅனுப்பியுள்ளார்.

அத்துடன் 'வித்தியாவை வன் புணர்வு செய்த நேரத்தில் நான்அங்குஇருந்துஇருந்தால் நான் தான் முதலில் வன் புணர்ந்து இருப்பேன். அவரின் உடலைப் பார்க்கும்போது ஆசையாக இருக்கின்றது' எனவும் என்னிடம் சுவிஸ் குமார் தெரிவித்திருந் தார்.

'நான் யாழ்ப்பாணத்தில் இருந்து அரசியல்வாதியின் தம்பி ஒருவரின் உதவியுடன் தான் தப்பி கொழும்புக்கு வந்தேன். அரசியல்வாதியின் தம்பியே வாகன ஒழுங்குகளைச் செய்திருந்தார். அதன் ஊடாக பொலிஸ் உயர் அதிகாரி ஒருவரின் துணையுடன் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கு தப்பிவந்து வெள்ளவத்தையில் மற்றுமொரு சுவிஸ் நாட்டை சேர்ந்தஒருவருடன்தங்கிஇருந்த போதே என்னை வெள்ளவத்தைப் பொலிஸார் கைது செய்தனர்'எனசுவிஸ்குமார்என்னிடம் தெரிவித்தார்.

ஒருநாள் இந்த வழக்கில் உள்ள அண்ணன், தம்பிகள் மூவரும் இந்த வழக்குடன் சம்பந்தப்பட்டவர்கள் இல்லை போலஉள்ளதேஎனசுவிஸ் குமாரிடம் நான் கேட்டேன். அதற்கு அவர், 'ஆம். அதில் இருவரே சம்பந்தப்பட்டவர்கள். மற்றைய ஒருவருக்கு இந்த வழக்கில் சம்பந்தம் இல்லை எனச் சொன்னார். ஆனால் அது யார் என்று சொல்லவில்லை.- என அவர் தனதுசாட்சியத்தைப்பதிவுசெய்தார்.

## நல்லிணக்கம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிய மத சுதந்திரத்திற்கான அமைப்பு என்ற பௌத்த பிக்குகள் அணி கொதித்து எழுந்திருக்கின்றது.

அந்த அமைப்பைச் சேர்ந்த வண.சதேவஹ்வேசந்திரானந்த தேரர் நேற்றுமுன்தினம் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடுகையில் –

30வருடகாலகொடியயுத்தம் நிறைவு பெற்று விட்டதோடு தற்போது சமாதானப் பாதையில் இலங்கை பயணித்துக் கொண்டு வருகின்றது.

நல்லிணக்கம் ஏற்பட வேண்டும் அனைத்து மக்களுக்கும் சம உரிமை கொடுக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே மக்கள் உள்ளனர்.

அதன் அடிப்படையில் அதிகாரப்பகிர்வு கொடுக்கப்பட வேண்டும். இந்த அதிகாரப்பகிர்வு பற்றி சரியாக மக்கள் அறிந்து கொள்வார்கள் என்றால் இரு கைகளையும் உயர்த்தி அதற்கு ஆதரவு தெரிவிப்பார்கள்.

இதற்கு எவரும் தடையாக இருக்கவேண்டாம். அந்த வகையில் மஹாநாயக்க தேரர்களும் தற்போது தவறாக நடந்து கொண்டு வருகின்றார்கள்.

அவர்கள் பற்றிய அனைத்து உண்மைகளும் எமக்கு தெரியும். மஹாநாயக்க தேரர்கள் முறைகேடான வாக்குகள் மூலமாகவே நியமிக்கப்பட்டுள்ளனர். இது பற்றிய ஆதாரங்கள் எம்மிடம் உண்டு.

அதனை வெளியிடவும் ஆயத்தமாக இருக்கின்றோம். தற்போதைய சூழலில் அரசியல் உள் நோக்கங்கள் அற்ற வகையில் செயற்பட வேண்டியது அவசியமாகும்.

பௌத்த தேரர்கள் செகுசு வண்டிகளிலும், குளிரூட்டப்பட்ட அறைகளிலும் வாழ்கின்றனர். இதனை ஏற்றுக் கொள்ள முடியுமா? இவை எங்கிருந்து அவர்களுக்கு வந்தன?

நல்லிணக்கத்திற்கும், அதிகாரப் பகிர்விக்கும் தடையாக செயற்படும் போது இன்னொரு யுத்தம் வெடிக்கக் கூடிய வாய்ப்பு உண்டு. இதனை மக்கள் புரிந்து செயற்பட வேண்டிய தருணம் இப்போது உதயமாகி உள்ளது. – எனவும் வண.சந்திரானந்த தேரர் தெரிவித்திருந்தார்.

இந்தக் கருத்துகளின்படி தென்னிலங்கையில் பிரதானமான மஹாநாயக்க தேரர்களை கடுமையாக சாடும் வகையில் தேரர்கள் போர்க்கொடி தூக்கியுள்ளமை தெளிவாகியுள்ளதாக கூறப்படுகின்றது.

தென்னிலங்கையில் ஒரு தரப்பினர் அதிகாரப்பகிர்வுக்கு கடும் எதிர்ப்பை வெளியிட்டு வரும் நிலையில் –

தென்னிலங்கை அரசியலில் முக்கியத்துவம் வாய்ந்த தேரர்களுக்கு இடையில் பிளவு ஏற்பட்டுள்ளது. அதில் ஒரு தரப்பு அதிகாரப்பகிர்வு அவசியம் என்ற கோரிக்கையை முன்வைத்துள்ளது.

தேரர்களுக்கு இடையில் புதிதாக வெடித்துள்ள சர்ச்சையை அரசுஎவ்வாறுகையாளப்போகின்றது?, இதனால் அரசியல் சீர்திருத்தத்தில் தாக்கம் ஏற்படுமா என்ன போன்ற கேள்விகள் இப்போது எழுப்பப்படுகின்றன. (உ)

## ஜனாதிபதியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொது நிர்வாக சேவையில் சிரேஷ்ட அதிகாரியான பி.வி. அபேகோன்கடந்த2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஜனாதிபதி செயலாளராக நியமிக்கப்பட்டார்.

அவர் இதற்கு முன்னர் பொது நிர்வாகம் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளராகப் பணிபுரிந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## திருட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு – கோட்டை ரயில் நிலையத்திற்கு எதிரில் போராட்டத்தில் ஈடுபடும் மருத்துவபீட மாணவர்களின் பெற்றோரின் போராட்டத்தில் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடும்போதேஅவர்இதனை கூறியுள்ளார்.

அங்கு அவர்மேலும்தெரிவிக்கையில் –

'சைட்டம்' ஆரம்பிக்கப்பட்ட நாளில் இருந்து அதற்கு எதிரான நிலைப்பாட்டையே நான் கொண்டிருந்தேன். பழைய ஊடகத் தகவல்களைத் தேடிப்பார்த்தால் இதனை அறிந்து கொள்ள முடியும். மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் 'சைட்டம்' நிறுவனத்திற்கு எப்போதும் அனுமதி வழங்கியதில்லை.

கடந்த 2011 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 29 ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலில் 'சைட்டம்' நிறுவனத்திற்கு பல நிபந்தனைகள் விதிக்கப்பட்டன.அந்தநிபந்தனைகளை நிறைவேற்ற முடியாத காரணத்தினால் அதற்கு அனுமதி வழங்கப்படவில்லை.

மஹிந்த ராஜபக்ஷ 'சைட்டம்' நிறுவனத்திற்கு அனுமதி வழங்கினார் என எவராவது கூறினால் அது பச்சைப் பொய். அனுமதி வழங்க நிபந்தனைகள் விதிக்கப்பட்டன. அந்த நிபந்தனைகளை 'சைட்டம்' நிறுவனத்தினால் நிறைவேற்றமுடியாமல்போனது. -எனஉதயகம்மன்பிலகூறினார்.

எனினும், கடந்த 2011 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட 'சைட்டம்' நிறுவனத்திற்கு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் 60 கோடி ரூபா வங்கிக் கடனை வழங்கியது.

அத்துடன் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, 100 இற்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு அந்த மருத்துவக் கல்லூரியில் பயில புலமைப் பரிசில்களை வழங்கியிருந்தார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (ம)

## உதயங்கவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீரதுங்கவிற்கு வழங்கப்பட்டிருந்த இராஜதந்திரக் கடவுச்சீட்டையும் மற்றொரு கடவுச் சீட்டையும் முடக்கும்படி கொழும்பு நீதிவான் நீதிமன்றம் நேற்று குடிவரவு, குடியகல்வுத்திணைக்களத்துக்கு உத்தரவிட்டது.

2009 இல் இலங்கைக்கு உக்ரைனிடமிருந்து பல 'மிக்' ரக விமானங்களைக் கொள்வனவு செய்தமையில் பெரும் நிதி மோசடி செய்தார் என்று உதயங்க வீரதுங்க மீது நிதிக் குற்ற வியல் புலனாய்வுப் பொலிஸார் பல குற்றங்களைச் சுமத்தியுள்ளனர்.

அதனடிப்படையிலேயே மேற்படி கடவுச்சீட்டுக்களை முடக்கும் உத்தரவை நீதிபதி நேற்றுப் பிறப்பித்தார்.

வெளிநாட்டில் ஒளிந்திருக்கிறார் எனக் கருதப்படும் உதயங்கவைக் கைது செய்வதற்குச் சர்வதேசபொலிஸ் ஊடாக சர்வதேச பிடியாணை கடந்த மாதம் பிறப்பிக்கப்பட்டு அவர் தேடப்பட்டு வருகின்றார் எனக் கூறப்படுகின்றது.

தமக்கு வழங்கப்பட்ட கடவுச்சீட்டுக்களைப் பயன்படுத்தியே பலநாடுகளுக்கு இடையில்உதயங்க வீரதுங்க பயணம் செய்து வருகின்றார் எனக் குற்றப் புலனாய்வுப் பொலிஸார் நேற்று நீதிமன்றில் தெரிவித்தனர்.

அதையடுத்தே கடவுச் சீட்டுக்களைமுடக்கும்நடவடிக்கையை முன்னெடுக்க நீதிமன்றம் உத்தரவிட்டது. (உ)

## விக்கி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுமார்ஒன்றரைமணிநேரம் இருவரும் உரையாடினர்.

சுகம்விசாரிக்கும்சந்திப்பு இது எனப்பின்னர்தெரிவிக்கப்பட்டது.

ஆனால், தமிழர் விடுதலைக் கூட்டணியை முதல்வர் விக்னேஸ்வரன் விரும்பினால் அவர் போன்ற மூத்த தலைவரிடம் கையளிக்கநான்தயாராக இருக்கின்றேன் என்ற செய்தியை மீளவும் முதல்வர் விக்னேஸ்வரனிடம் தெரிவித்தேன் என ஆனந்த சங்கரி பின்னர் 'காலைக் கதிர்' நாளிதழுக்கு நேற்றிரவு தெரிவித்தார்.

பக்கம் 03 »

## அரசமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த வாரத்தில் வழிகாட்டல் குழு தனது இடைக்கால அறிக்கையை இறுதி செய்யும் என உறுதியாக நம்பப்படுகின்றது.

புதியஅரசமைப்புத்தொடர்பில் தீர்மானங்கள் இந்த வாரக் கூட்டத்திலேயே எட்டப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

முதலில் –

அரசமைப்புத் திருத்தமா அல்லது புதிய அரசமைப்பு உருவாக்கமா என்பது தீர்மானிக்கப்படும்.

அடுத்து –

அரசமைப்புத் திருத்தமாயின் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தாமல் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் நிறைவேற்றக் கூடிய அம்சங்களை மட்டுமே திருத்தத்தில் சேர்ப்பதா அல்லது சர்வஜன வாக்கெடுப்பு மூலம் மக்கள் அங்கீகாரம் பெறவேண்டிய விடயங்களையும் அரசமைப்புத் திருத்தத்தில் சேர்த்துக் கொள்வதா என்பது குறித்துத் திட்டவட்டமான ஒரு முடிவு எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

உத்தேச இடைக்கால அறிக்கையில்தாங்கள்சேர்க்க விரும்பும் கருத்துக்களை இந்த வாரக் கூட்டத்தின்போது சிறிலங்கா சுதந்திரக் கட்சி இறுதியாக முன்வைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அதிகாரப் பகிர்வு, தேர்தல் முறைமை, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை ஒழிப்பு ஆகியன தொடர்பில் சு.கவின் திட்டவட்டமானநிலைப்பாடு இதுதான் என்பது இந்த வாரக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படும் என்றும் அதனடிப்படையில் தனது தீர்மானத்தை வழிகாட்டல் குழு இறுதி செய்யும் என்றும் கூறப்பட்டது.

வழிகாட்டல் குழுவில் அடுத்த வாரக் கூட்டத்தில் மிக முக்கிய முடிவுகள் எடுக்கப்படவிருக்கின்றன எனச் சில வாரங்களுக்கு முன்னர்கொழும்பில்நடைபெற்ற உயர்மட்ட மாநாடு ஒன்றில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அறிவித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (உ)

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பா.டெனீஸ்வரன் குற்றம் சுமத்தியுள்ளார்.

மாகாணத்தில் ஆளும் கட்சியைப் பிளவுபடுத்தி வைத்திருப்பதற்காகத்தான் முதலமைச்சர் இப்படிச் செயற்படுகின்றாரா எனத் தமக்குச் சந்தேகம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

வடக்கு மாகாண சபையின் புதிய அமைச்சர்களின் பதவியேற்பு மற்றும் இந்தியத் தூதுவருடனான சந்திப்புக்கு சுகாதார அமைச்சர்ப.சத்தியலிங்கம் மற்றும் போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் ஆகியோருக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை.

வடக்கு மாகாண சபையின் புதிய அமைச்சர்களின் பதவியேற்பு, ஆளுநர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்றது. திருமதி அனந்திசசிதரனும்க.சர்வேஸ்வரனும் அமைச்சுப் பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டனர். இந்த பதவியேற்புக்குக் கூட தகவல் தெரிவிக்கப்படவில்லை.

மேலும், யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்திருந்த, இலங்கைக்கான இந்தியத் தூதுவருடன் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் கைதடியிலுள்ள அவரது அலுவலகத்தில் சந்தித்துப் பேசினார். இந்தச் சந்திப்பில் புதுமுக அமைச்சர்கள் இருவரும் மாத்திரமே பங்கேற்றனர். பழைய இரு அமைச்சர்களுக்கும், முதலமைச்சர் அழைப்பு விடுக்கவில்லை என்று தெரிவிக் கப்படுகின்றது.

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் தமக்கு ஆதரவளித்த 14 பேருடன் மாத்திரம் கலந்துரையாடல் நடத்தினார். இது பாரபட்சமான செயற்பாடு என அமைச்சர் டெனீஸ்வரன் தெரிவித்தார். (ம)

## 27 வருடங்களுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸ் அதிகாரிகள் ஐவருக்கு பாணந்துறை மேல் நீதிமன்றத்தினால் நேற்று மரண தண்டனை விதிக்கப்பட்டது.

1990 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதலாம் திகதி பாணந்துறை விசேட குற்ற விசாரணை பிரிவினால் கொள்ளை குற்றச்சாட்டின் கீழ் பண்டாரகம அட்டுலுகம பிரதேசத்தை சேர்ந்த மொஹமட் மனோஜ் என்பவர் கைது செய்யப்பட்டார்.

அவரைத் தடுத்துவைத்து விசாரணைக்கு உட்படுத்திய போது பொலிஸ் அதிகாரி ஒருவரின் துப்பாக்கி வெடித்ததால் சந்தேகநபர் உயிரிழந்தார் எனக் கூறப்பட்டது.

இந்த சம்பவம் தொடர்பில் உயிரிழந்தவர்களின் உறவினர் மேற்கொண்ட முறைப்பாட்டிற்கமைய, பொலிஸ் அதிகாரிகள் மீது இரு குற்றச்சாட்டுக்கள் பதிவு செய்யப்பட்டன.

பாதாள உலகக்குழுவின் உறுப்பினர்களாக இருந்தமை மற்றும் கொலை ஆகிய குற்றச்சாட்டுக்களின்கீழ்சந்தேகநபர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டது. தீர்ப்பு வழங்கப்பட்டது.

முதலாவது குற்றச்சாட்டுக்காக குற்றவாளிகளுக்கு 6 மாதங்கள் கடுமையான வேலையுடன் கூடிய சிறைத்தண்டனையும் 5 ஆயிரம் ரூபா தண்டமும் விதிக்கப்பட்டன.

இரண்டாவது குற்றச்சாட்டிற்காக குற்றவாளிகளுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. பாணந்துறை உயர்நீதிமன்ற நீதிபதி சரோஜினி குசலா வீரவன்தன மேற்படி தண்டனை விதித்து உத்தரவிட்டார். (ம)

## காணிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட முடிவின் பிரகாரம் யாழ். மாவட்டத்தில் இந்த நடவடிக்கையை முன்னெடுப்பது தொடர்பான கூட்டம் நாளை மறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு யாழ். செயலகத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி உள்ளிட்டோர் இதில் கலந்து கொள்ளவுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

காணி விடுவிப்பு தொடர்பில் பாதுகாப்பு அமைச்சில் நடைபெற்ற கூட்டத்தின் தொடர்ச்சியாக மாவட்ட ரீதியில் கூட்டம் நடத்தமுடிவுசெய்யப்பட்டிருந்தது. இதன்படி யாழ்ப்பாணமாவட்டத்துக்குரிய கூட்டம் ஏப்ரல் 21 ஆம் திகதி நடைபெற்றிருந்தது.

அதன் தொடர்ச்சியே நாளை மறுதினம் நடைபெறவிருக்கின்றது.

இந்தக் கூட்டத்தில் மாவட்ட எம்.பிக்கள், மாகாணசபை உறுப்பினர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்கள், பிரதேசசெயலாளர்கள் போன்ற பல தரப்பினரும் கலந்து கொள்வர். (உ)

# அதிபர் ஆசிரியருக்கான சம்பள நிலுவை உடன் வழங்காவிடின் பணிப்புறக்கணிப்பு!

## இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் எச்சரிக்கை

அதிபர்கள், ஆசிரியர்களுக்கு உரிய காலங்களில் வழங்கப்பட வேண்டிய சம்பள நிலுவைகளை வடக்கு மாகாணம் இதுவரை வழங்காமல் விட்டதால் தற்போது ஒவ்வோர் அதிபர்கள், ஆசிரியர்க ளுக்கும் லட்சக்கணக்கான நிலு வைகள் வழங்கப்பட வேண்டி யுள்ளது. இதனை உடனடியாக வழங்காது விட்டால் கற்பித்தல் பணிகளைப் புறக்கணிக்கப் போவ தாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் எச்சரிக்கை செய்துள்ளது.

இது தொடர்பில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் சரா.புவனேஸ்வரன் ஊடகங்களுக்கு அனுப்பி வைத் துள்ள செய்திக் குறிப்பில் தெரி விக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

சம்பள நிலுவைகள் வழங்கப் படாமை தொடர்பில் பல தட வைகள் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு, வடக்கு மாகாணக் கல் வித் திணைக்களம் ஆகிய வற்றிடம் எடுத்துக்கூறியும் இன் னமும் இதுவரை நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப் படவில்லை. ஆனால் கல்வி அமைச்சிலும், கல்வித்திணை க்களத்திலும் பணி புரியும் உத்தியோகத்தர்களுக்கு எதுவித நிலுவைகளும் இல்லை. மாறாக அதிபர்கள், ஆசிரியர்களுக்கு மட் டுமே நிலுவைகள் வழங்க நிதி இல்லை என்று கூறப்படுகின் றது.

இன்னுமொரு வேடிக்கை தமது நிலுவைகள் வழங்கப்படாத நிலை யில் கல்வித் திணைக்களத்தில் இடருதவிக்கடன் பெற்றவர்களிடம் இருந்து வட்டியுடன் கடன் அற விடப்படுகின்றது. அதேவேளை அதிபர்கள், ஆசிரியர்களுக்கு வழங்கவேண்டிய நிலுவையை திணைக்களம் வைத்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் எவரும் கரிசனை கொள்கிறார்கள் எனத் தெரியவில்லை. மாறாக, ஞாயிற்றுக்கிழமைகளிலும், பொது விடுமுறை தினங்களிலும் அதி பர்களையும், ஆசிரியர்களையும் பாடசாலைகளை நடத்துங்கள் எனத் திணைக்களத் தலைவர்கள் பணிக்கின்றமை வேதனை தரும் விடயமாக உள்ளது.

தொழில் செய்வோருக்கு சம் பளம் வழங்காவிட்டால் மாற் றத்தைக்காண முடியாது. எனவே அதிபர்கள், ஆசிரியர்களுக்கு வழங்க வேண்டிய நிலுவைகளை உடனடியாக வழங்காவிட்டால் கற்பித்தல் பணிகளைப் புறக் கணிக்கின்றமையைத் தவிர வேறு வழி யில்லை.-என்றுள்ளது. (எ)

# மடு அன்னையின் திருவிழா நாளை; ஏற்பாடுகள் குறித்து விரிவாக ஆராய்வு



மன்னார், ஜுலை 01

மன்னார் மடு மாதா ஆலய திருவிழா ஏற்பாடுகள் தொடர்பி லான கலந்துரையாடல் மடு திருத் தலத்தில் நேற்று முன்தினம் காலை, மன்னார் மாவட்ட மேலதிக அரச அதிபர் நந்தினி ஸ்ரான்லி டி மெல் தலைமையில் இடம்பெற்றது.

இந்த அவசர கலந்துரையாட லில் மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் மேதகு ஆயர் வண. ஜோசப் கிங்சிலி சுவாம் பிள்ளை ஆண்டகை, மன்னார் மறை மாவட்ட குரு முதல்வர் அருட் தந்தை வண. அன்ரனி விக்டர் சோசை, மடுத்திருத்த லத்தின் பரிபாலகர் அருட்தந்தை வண. எஸ். எமிலியாணுஸ்பிள்ளை அடி களார், கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக் களத்தின் பணிப்பாளர் ஏ.ஆர்.குணவர்த்தன உற்பட பொலிஸ் அதிகாரிகள், திணைக் களத் தலைவர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

இதன் போது நாளை ஞாயிற் றுக்கிழமை இடம்பெறவுள்ள மன்னார் மடு அன்னையின் ஆடி மாதத் திருவிழாவுக்கான இறுதி ஏற்பாடுகள் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

திருவிழாவுக்கு 2 லட்சத்துக்கும் அதிகமான பக்தர்கள் வருகை தருவார்கள் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

தமிழ், சிங்கள மொழிகளில் மன்னார் மறைமாவட்ட அப்போஸ் தலிக்க பரிபாலர் மேதகு ஆயர் வண.யோசப்கிங்சிலிசுவாம்பிள்ளை ஆண்டகை தலைமையில் திரு கோணமலை மறைமாவட்ட ஆயர் வண நோயல் இம்மானுவல், அனுராதபுரம் மறை மாவட்ட ஆயர் வண நோபட் அன்றாடி ஆகியோர் இணைந்து திருவிழா திருப்பலியை கூட்டுத்திருப்பலியாக ஒப்பக்கொ டுக்கவுள்ளனர் என மடு திருத்த லத்தின் பரிபாலகர் அருட்தந்தை எஸ்.எமிலியாணுஸ்பிள்ளை அடி களார் தெரிவித்தார்.

இதேவேளை, மடுத் திருவிழா வுக்கான அரச நிதியாக 10 லட்சம் ரூபா நிதியை கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் ஏ.ஆர்.குணவர்த்தன மன்னார் மறை மாவட்ட அப்போஸ் தலிக்க பரிபாலகர் ஆயர் வண ஜோசப் கிங்சிலி சுவாம்பிள்ளை ஆண்டகையிடம் கையளித் துள் ளமை குறிப்பிடத்தக்கது. (எ)

# முல்லைத்தீவு குரவில் தமிழ் ம.வியின் மாணவருக்காக நடமாடும் நூலகம்

## நேற்றுமுன்தினம் அங்குரார்ப்பணம்

முல்லைத்தீவு, ஜுலை 01

முல்லைத்தீவு குரவில் தமிழ் மகா வித்தியாலய மாணவர்களின் நலன் கருதி நடமாடும் நூலகத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றுள்ளது.

சிறுவர்களாகிய உங்களுக்கு வாசிப்பதற்கு ஓர் புதிய உதயம் எனும் தொனிப்பொருளில் சிறு வர் நிதிய பண்ட் நிறுவனம் மற்றும் அபிமான சமூக அபி விருத்திச் சங்கம் ஆகியன இணைந்து இந்தச் செயற்பாட்டை முன்னெடுத்துள்ளன.

நிகழ்வுக்கு முதன்மை விருந் தினராக முல்லைத்தீவு வலயக் கல்விப்பணிப்பாளர்எஸ்.புவனராஜா கலந்துகொண்டிருந்தார்.



15 நாள்களுக்கு ஒரு தடவை அந்தப் பாடசாலைக்கு சென்று மாணவர்களுக்கான நூல்களை வழங்கும் அதே சமயம் மாணவர்க ளுடைய வாசிப்புப் பழக்கத்தை மேம்படுத்தும் வகையில் பல நூல்கள் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இன்றும் நாளையும் மின் தடை

உயர்அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைக ளுக்காக இன்று சனிக்கிழமை -

காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை **யாழ் பிரதேசத்தில்** நுணாவில், கைதடி, நாவற்குழி, மறவன்புலோ, தச் சன்தோப்பு, தனங்கிளப்பு, கோகிலாக்கண்டி, கேரதீவு வீதி, அறுகுவெளி, பனைவள ஆராய்ச்சி நிலையம், கைதடி யுனைற்ரெட் மோட்டோர்ஸ், கைதடி வடமாகாண சபை அலுவலகம் ஆகிய இடங்களிலும்

**மன்னார் பிரதேசத்தில்** முருங்கன்பிட்டி, மாவிலங்கேணி, பிடாரிக்குளம், அளவக்கை, வாழ்க்கைப்பட்டான்கண்டல், பள்ளங் கோட்டை, நானாட்டான், சாளம்பன், நாக செட்டி, எருவிட்டான், அறுக்குக்குன்று, நொச் சிக்குளம், அச்சங்குளம், உமணகிரி, ஆவனம் வச்சியங்குளம், நறுவிலிக்குளம், டொன் பொஸ்கோ ஆகிய பிரதேசங்களிலும்,-

**நாளை ஞாயிற்றுக்கிழமை....**

காலை 8.30 மணியில் இருந்து மாலை 5.30 மணி வரை **யாழ் பிரதேசத்தில்** சங் கத்தானை, மீசாலை, வங்காளவீதி, அல்லாரை, வெள்ளாம்பொக்கட்டி, கெற்பெலி, கச்சாய், பாலாவி, கச்சாய் துறைமுகம், அம்மன் கோவிலடி, புத்தூர் சந்தி, இராமாவில், கொடி காமம், நாவலடி, வரணி, கரம்பைக்குறிச்சி, வாழைத் தோட்டம், வேம்பிராய், மந்துவில், தாவளை, இயற்றாலை, கலைவாணி, மிருசுவில் வடக்கு, சுட்டிபுரம், குளப்பிட்டி, ஆனைக்கோட்டைசந்தி, யாழ் வீதி மானிப்பாய், ஆறுகால்மடம், கூழாவடி, ஆனைக் கோட்டை VC, நவாலி, மூத்தவிநாயகர் கோவிலடி, சென் பீற்றர்ஸ் தேவாலயம், அரசடி, அட்டகிரி, வேலக்கை, குளப்பிட்டி ஆனைக்கோட்டைவீதி,

பள்ளத்தடி, சாவற்காட்டுசந்தி, வராகிஅம்மன் கோவிலடி, காக்கைதீவு, தலங்காவில், திருநெல்வேலி, பரமேஸ்வராச் சந்தி, சிவன் அம்மன் வீதி, கந்தர்மடம், அன்னசத்திரச் சந்தி, இலுப்பையடிச் சந்தி, பருத்தித்துறை வீதியில் நாக விகாரையில் இருந்து பாரதியார் சிலை வரை, விக்ரோறியார் வீதி, மின்சார நிலைய வீதியில் ஒரு பகுதி, ரயில் நிலையப் பிரதேசம், மாட்டின் வீதி, யாழ்.2ஆம் 3ஆம் 4ஆம் குறுக்குத் தெருக்கள், ஸ்ரான்லி வீதியில் ரயில் கடவையிலிருந்து இராசாவின் தோட்ட வீதி வரை, அம்பலவாணர் வீதி, அன்னசத்திர வீதி, ஆஸ்பத்திரி வீதி வேம்படி சந்தியிலிருந்து மாட்டின் வீதி வரை, ஸ்ரான்லி வீதியில் ஆரியகுளத்திலிருந்து முட்டாசுக்கடை சந்தி வரை,

கஸ்தூரியார் வீதியில் ஒரு பகுதி, மணிக்கூட்டு வீதியில் ஒரு பகுதி, நொதேர்ண் சென்றல் கொஸ்பிற்றல், யாழ்ப்பாண பல்கலைக்கழக ஆண்கள் விடுதி, தம்ரோ பலாலி வீதி, ஹற்றன் நஷனல் வங்கியின் பிராந்திய அலுவலகம், பீப்பிள் லீசிங் அன் பினான்ஸ் கம்பனி ஸ்ரான்லி வீதி, AVNOR பிறைவேற் லிமிற்ரெட், மக்கள் வங்கி ஸ்ரான்லி வீதி, யாழ் ரயில் நிலையம், Green Grass விடுதி, சிறிநிதியா நகை மாளிகை, Raja Talkies, LOLC, ஞானம்ஸ் விடுதி, ரொப்பாஸ் ஆகிய இடங்களிலும்-

**கிளிநொச்சி பிரதேசத்தில்** கிளிநொச்சி நகரம், திருநகர், கணேசபுரம், கரடிப்போக்கு, மக்கள்வங்கி, கிளிநொச்சி மாவட்டச்செயலகம் (கச்சேரி), பிருந்தா உற்பத்தி நிலையம், சிவ னருட்செல்வன் அரிசி ஆலை, கிளிநொச்சி லங்கா சதோச, காகில்ஸ் பி.எல்.சி, கிளிநொச்சி நீர்ப்பாசனத்திணைக்களம், கிளிநொச்சி இலங்கை வங்கி, ஓவசியர் கடைச்சந்தி, தரணிகுடியிருப்பு, நீவில், முற்கொம்பன், நல்லூர், தம்பிராய், பூநகரி 4ஆம் கட்டை, பள்ளிக்குடா, கௌதாரிமுனை, அரசபுரம் ஆகிய இடங்களிலும்-

**மன்னார் பிரதேசத்தில்** பெரியநீலாச் சேனை, இத்திக்கண்டல், சொர்ணபுரி, பாப்பாமோட்டை, அடம்பன், பரப்பாங்கண்டல், அடம்பன் நீர்ப்பாசனத் திணைக்களம் ஆகிய பிரதேசங்களிலும், மின்சாரம் தடைப்படும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள் ளார். (இ)






தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானத்தில் நேற்றுக் காலை வடதிசை குபேர வாசல் கோபுரத்துக்கான அடிக்கல் நாட்டும் வைபவம் நிறைந்து நின்ற பக்தர்களுக்கு மத்தியில் சிறப்பாக நடை பெற்றது.






பிரித்தானியாவில் இயங்கும் யாழ்.இந்துக் கல்லூரி பழைய மாணவர் ஒன்றியத்தினால் பெண்களுக்கான உள்ளாடைத் துணி உற்பத்தி மையம் 'சுகம் சிறு கைத்தொழில் நிறுவனம்' நேற்றைய தினம் முல்லைத்தீவில், வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரேயினால் திறந்து வைக்கப்பட்டமையையும் அந் நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் படங்களில் காணலாம்.




# யாழ். பல்கலைக்கழகத்துக்குரிய கட்டடங்கள் கிளிநொச்சியில் திறப்பு




கிளிநொச்சி அறிவியல் நகரில் அமைந்துள்ள யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் விவசாய மற்றும் பொறியியல் பீடங்களுக்கான வசதிகளை மேம்படுத்தும் திட்டத்தின் கீழ், நிர்மாணிக்கப்பட்டுள்ள புதிய கட்டடம் நேற்றுக் காலை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்திய அரசின் நிதியுதவியுடன் விவசாய பீடத்தில் புதிதாக மாணவர் திறன் விருத்திற்கான கட்டடத் தொகுதி மற்றும் பொறியியல் பீடத்தில் அமைக்கப்பட்டுள்ள இரு மாடிக்கட்டடம் ஆகியன இவ்வாறு நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் விக்னேஸ்வரனின் அழைப்பின் பேரில் உயர் கல்வி அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல, இலங்கைக்கான இந்தியத் தூதுவர் தரன்ஜித் சிங் சந்து ஆகியோர் கட்டடங்களைத் திறந்து வைத்துள்ளனர்.

2014ஆம் ஆண்டு இலங்கை மற்றும் இந்திய அரசாங்கங்களுக்கு இடையில் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தம் ஒன்றின் கீழ் இக்கட்டடங்கள் சுமார் 55 கோடி ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

இக்கட்டடங்களுக்கு தேவையான ஒரு தொகுதி இயந்திர சாதனங்களையும் ஆய்வுகூட உபகரணங்கள் மற்றும் தளபாடங்களையும் பெற்றுக்கொடுக்கவும் இப்பீடங்களுக்கு சில வாகனங்களைப் பெற்றுக் கொடுக்கவும் இந்த ஒப்பந்தத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ரூ.7 லட்சத்துக்கு போலி நாணயத் தாள்களுடன் ஐவர் கைது; ஒருவர் சட்டக் கல்லூரி மாணவன்!

சுமார் ஏழு லட்சம் ரூபா போலி நாணயத்தாள்களுடன் 5 சந்தேகநபர்களை மத்துகம பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

மத்துகம விடுதிக்கு கடந்த புதன்கிழமை வருகை தந்த நபர் ஒருவர் மதுபானத்தைப் பெற்றுக் கொண்டு அதற்கு 500 ரூபா நாணயத்தாளை வழங்கியுள்ளார். நாணயத்தாள் தொடர்பாகச் சந்தேகம் கொண்ட விடுதிக் காசாளர் மத்துகம பொலிஸாருக்குத் தகவல் தெரிவித்துள்ளார். பொலிஸார் மேற்கொண்ட விசாரணையின் போது 12 போலி 5 ஆயிரம் நாணயத்தாள்கள் மீட்கப்பட்டன.

பொலிஸார் சந்தேக நபரை விசாரணைக்குட்படுத்தியபோது மேலும் நால்வர் கைது செய்யப்பட்டனர். அவர்களுள் ஒருவர் சட்டக்கல்லூரியில் இறுதியாண்டு கல்வி கற்கும் மாணவன் என்று தெரியவந்துள்ளது.

அவர்களிடம் 127 போலி 5 ஆயிரம் ரூபா நாணயத்தாள்களும் போலி ஆயிரம் ரூபா நாணயத்தாள் ஒன்றும் மீட்கப்பட்டுள்ளன.

# மஹிந்தவோ, பிரபாவோ யுத்தத்தில் வெல்லவில்லை; மக்களே தோற்றனர்!

## 'சுகம்' நிறுவன திறப்பு விழாவில் ஆளுநர் உரை

முல்லைத்தீவு, ஜுலை 01

இறுதி யுத்தத்தில் மஹிந்த ராஜபக்ஷவும் வெல்லவில்லை; பிரபாகரனும் வெல்லவில்லை. பாதிக்கப்பட்டவர்கள் மக்கள்தான் – யுத்தத்தில் பின்னடைவுகளைக் கண்டு தோற்றவர்கள் மக்கள்தான்.

– இவ்வாறு கூறினார் வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே.

முல்லைத்தீவு மாவட்ட மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் இணையத்திற்கான 'சுகம்' சிறுகைத் தொழில் நிலையத்திறப்பு விழா நிகழ்வு நேற்று நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய ஆளுநர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் –

"நாட்டில் அனைத்து மக்களும் இன, மொழி பேதமின்றி ஒற்றுமையுடன் வாழவேண்டும். எமது நாட்டை அபிவிருத்தியை நோக்கி நகர்த்திச் செல்ல வேண்டும்.

இன்று புலம் பெயர் நாட்டில் இருந்து வந்து இந்த உதவிகளைச் செய்யும் விவேகானந்தன், சிவாஜி உள்ளிட்டோர் போல எமது மக்களின் நலன்களில் அக்கறையுள்ள புலம்பெயர் மக்களை இங்கு வருமாறு அழைக்கின்றேன்.

இந்நிலையில் அவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்வதற்கு நான் தயாராகக் காத்திருக்கிறேன்" – என அவர் தெரிவித்தார். (உ)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.07.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.